1285

தொகுதி 10.] 1931ஆம் நவம்பர் [பகுதி 10.

8 DEC

மனமோகினி.

ஆசிரியர்
ஆரணி. குப்புசாமி முதலியார்

பிரசுரகர்த்தா
ஈ. முனிசாமி முதலியார்,
ஆனந்த நிலையம், சென்னை.

2037

மாதவி மாதவன் 2-பாகம்

ஓர் துணிகரமான சாமர்த்திய ரெயில்வேக் களவு

இன்பரசம் பொருந்தியது; படிக்கப் படிக்கப் பேரவாக கொடுக்கக் கூடியது; தேன்போல் தித்திப்பது; பொருள் நிரம்பியாது; இதுவரையில் வெளிவராதது; சாமர்த்திய சம்பவங்கள் பொதிந்தது; அழகிய கடிதத்தில் அச்சிடப்பட்டது. இரண்டு பாகமும் சேர்ந்து விலை ரூ. 2—0—0.

இரத்தினபுரி ரகசியம் 5-பாகம் விலை ரூபா 10-0-0

அமராவதி 2-ரூபா.

ஆரணி-குப்புசாமி முதலியா ரவர்க ளியற்றியது.

இது மிக்க பிரமையை யுண்டாக்கும் அற்புத சம்பவங்கள் நிறைந்த நாவல். ஒரு மனிதன் சுய நம்பிக்கையும், நேர்மையான நடக்கையும், ஊக்கமு முடையவனுயிருந்தால், அவன் தான் கோரிய காரியத்தில் கட்டாயம் ஜெயம் பெறுவான் என்பதும், எத்தகைய ஆபத்துக்களிலும் தப்பித்துக்கொண்டு கீர்த்தியும் மேலான பதவியும் அடைவானென்பதும் இதில் நன்முய் நிருபிக்கப்பட் டிருக்கின்றன. அசம்பாவிதமெனத் தோன்றும் அநேகம் சம்பவங்கள் இதில் உண்மையாகவே நடைபெறுவது வாசிப்போர்க்கு அளவற்ற மனமகிழ்ச்சியை யளிக்கும். 2-பாகமும் விலை ரூபா 4.

இராஜாமணி

அல்லது

ஓர் அபூர்வ மர்மம்

கற்புக்கரசியாகிய ஓர் உத்தமியின் சரித்திரத்தை மெத்தத் தெளிவாக விளக்கிக் காட்டக் கூடியது. இராஜாமணி யென்னும் பெண்மணி, பெருந்திருட்டும், மிகுந்த கொலைத் தொழிலுமுடைய ஒருவனுக்கு மகளாயிருந்தும், அவனைப்போலவே பெரும் பாதகச் செயல்களையுடைய ஒரு மூடனுக்குச் சகோதரியாயிருந்தும் அவர்களிடம் அகப்பட்டுப் பெரிய ஆபத்திற் சிக்கிய பூபாலம்பிள்ளை, யென்பவரைக் காப்பாற்றி அவருடன் தானும் வெளியேறி அவரை மணந்து தொன்வதும், மிக்க அதிசயம் பொருந்திய செயல்களாயும் டிபப்போர் மனத்தைக் கவரக்கூடியதாயும் இருக்கும்.

இதன் விலை ரூபா 2-0-0.

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை, மதராஸ்.

8-DEC

அதன்படியே அவர்கள் அத்தோட்ட விருந்தில் தனியாகச் சந்தித்தபோது அவன், ஆறு பிரபுக்களுக்குள் அவள் சம்பந்தமாய் ஏற்பட்டிருக்கும் போட்டியைப்பற்றியும், மற்ற பிரபுக்களைப்பற்றிக் கேவலமாகவும் கூறித் தன்னை அவள் மணந்துகொள்ள வேண்டுமென்றும், இன்றேல் தனக்கும் அவளுக்கும் முன்னரே சம்பந்தமுண்டென பொய்க்கதை கட்டி அவளை அவமானப்படுத்துவதாகவும் மிரட்டினான். இதற்கெல்லாம் அவள் பயப்படாமல் அவனை லட்சியமே செய்யாமல் அவனுடைய யோசனையை நிராகரித்து அவனை வெறுப்புடன் நோக்கினாள். இறுதியாக அவனும் அவளை ஒரு கை பார்த்துக்கொள்வதாக மிரட்டிவிட்டுப் போனான். எனினும் இதையெல்லாம் கபூர் கிருஷ்ணன் மறைந்திருந்து கேட்டு அவளுக்கு உதவி செய்ததால் அவள்மீது எத்தகைய பழிச்சொல்லும் ஏற்படமுடியாமல் போய்விட்டது.

இச்சமயத்தில் ஒரு முக்கிய சம்பவத்தை விவரிக்க வேண்டியது அவசியமாகிறது. அதாவது அந்த புதன்கிழமை தான் ஜகதீசன் கோமளவல்லியின் கடிதத்தை எடுத்துக் கொண்டு கற்பகவல்லி தனது கடிதத்தில் குறிப்பிட்டிருந்த பத்மாவதியம்மாள் வீட்டுக்கு வந்து பச்சையப்பபிள்ளை இருக்கிறாரா என விசாரித்தான். யார் வந்து பச்சையப்பபிள்ளை என்பவரைக் கேட்டாலும் அவரும் அவரது சகாக்களும் வெளியூருக்குப் போயிருப்பதாகச் சொல்லிவிடும்படி பத்மாவதியம்மாள் தன் ஆட்களிடம் கட்டளையிட்டிருந்தாள். ஆகவே ஜகதீசன் வந்து கேட்டபோதும் அவ்வீட்டின் வேலைக்காரர்கள் அவ்வாறே கூறி 'நாளைவரலாம்' என அறிவித்துவிட்டார்கள். அவனும் அப்படியே மறுநாள் வந்த போது ஒரு அழகிய அறையில் அவனை அழைத்துச் சென்றார்கள். அங்கு கற்பகவல்லி உட்கார்ந்திருந்ததை ஜகதீசன்

186562

கண்டு சந்தோஷமடைந்தான். இருவரும் பரஸ்பரம் பல விஷயங்களைப்பற்றிப் பேசினார்கள். கோமளவல்லி தனக்கு இதற்குமுன் கடிதங்களில் ஜகதீசனைப்பற்றி எழுதியிருந்த படியே அவன் நல்ல அழகுடையவனாகவும், நற்குண நல்லொழுக்கங்களுடையவனாயும் இருப்பது கண்டு சந்தோஷமடைந்தாள். பச்சையப்பபிள்ளையும் அவரது மனைவியும் மிக்க வயோதிகர்களாதலாலும், முன்னாள்வரை சற்றுப் பிரயாணம் செய்ததாலும் அயர்ந்திருப்பதாகவும், ஆகவே அவனை அறிமுகம் செய்து வைக்காததற்காக மன்னிக்க வேண்டுமென்றும் கூறிவிட்டாள். அவனும் அவ்விஷயத்தில் அதிக சிரத்தைகாட்டாமல் அவளிடம் விடைபெற்றுக்கொண்டு வெளியேறினான். ஆனால், ஆ! அவன் சென்றதும் மதனவல்லிக்குப் பழைய நிலைமையும் தற்கால நிலைமையும் ஞாபகத்துக்கு வரவே கண்ணீர்விட்டழுதாள். தன் நிலைமைக்காக வருந்தினாள். ஆனால் அதையெல்லாம் சமாளித்துக்கொண்டு உடனே தன் மாளிகைக்குப் புறப்படத் தயாரானாள்.

ஜகதீசனைக் கண்ட மதனவல்லிக்குப் பல பழைய நிலைமைகளெல்லாம் ஞாபகத்துக்கு வந்ததென்றாலும் அதைப் பற்றி அதிகமாக நினைத்து வருந்தக்கூடிய சாவகாசமும் சந்தர்ப்பமும் அவருக்குக் கிடைக்கவில்லை. ஏனெனின் அவள் மிக அவசரமாகத் தன் மதனவிலாசம் என்னும் மாளிகைக்குச் செல்லவேண்டியதாயிருந்தது. அன்று பிரபுக்கள் ஏற்படுத்திக்கொண்டிருந்த முறைப்படி நாலாவது தினமாகும். அந்த தினம்தான் முக்கியமான தினமாகும். அதாவது அன்றுதான் இளவரசர் விஜயம் செய்யும் தினம். ஆகவே அவள் தன் மாளிகைக்குச் சென்று ஆவலுடன் இளவாசரை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். அப்படியே இளவரசரும்

[library stamp]

அங்குச் சென்றதும் அவர்களிடையே நடந்த விஷயங்களும் முன்பே கூறப்பட்டிருக்கின்றன. சுருங்கக் கூறுமிடத்து இளவரசருடைய காதலுக்கு முதலில் அவள் இணங்காதது போல் காட்டிக்கொண்டாலும் பிறகு பட்டம், பதவி, செல்வம், கௌரவம், அந்தஸ்து முதலியவைகளையெல்லாம் அளிக்க வேண்டுமென்னும் நிபந்தனையின்மீதும், அவளுக்கும் பேர் கெடாமலிருக்கும் பொருட்டும் இளவரசர்மீதும் பழி ஏற்படாமலிருப்பதற்காகவும் அவள், தன்னிஷ்டப்படி நடப்பதை அனுமதிக்கிற யாரேனும் ஒருவரை மணந்துகொள்ள வேண்டுமென்றும், எனினும் உடனே இளவரசர் அவளுடைய காதலை அனுபவிக்க விரும்பியதால் மறுநாள் வெள்ளிக்கிழமை இரவு 9-மணிக்கு இளவரசருடைய வண்டி நகர உத்தியான வனத்தின் வடக்குமூலையில் இருப்பதென்றும், மதனவல்லி நெடுக முக்காடிட்டுக்கொண்டு அங்கே வந்து அதில் ஏறிக் கொண்டால் இளவரசர் மாளிகையின் பின்பக்கத்தின் வாயில் வழியே அவள் அம்மாளிகைக்குச் செல்வதென்றும் ஏற்பாடு செய்துகொண்டார்கள். மதனவல்லியும் தான் ஒரு விவாகம் என்று செய்துகொண்டு விட்டுப் பின்னால் எதுசெய்தாலும் பழி ஏற்படாதென்றும், அதற்குத் தகுந்த ஆள் செல்லப்பனே என்றும், பத்மாவதியம்மாளிடம் சொல்லிவிட்டால் சரியாய்விடுமென்றும் தீர்மானித்துக்கொண்டாள். பத்மாவதியம்மாளுக்கும் எப்படியாவது மதனவல்லி இளவரசரின் அந்தரங்கக் காதலியாய்விட வேண்டியதுதான் நோக்கம். ஆதலின் அவளும் இந்த ஏற்பாட்டுக்கு இணங்குவாள் என்பதில் சந்தேகமில்லை. செல்லப்பனோ உண்மையிலேயே நல்லவன். அவனுக்கு மதனவல்லியிடம் தணியாக் காதல் ஏற்பட்டிருந்ததால் அவள் சொல்லும் நிபந்தனைகளுக்கெல்லாம் இணங்கியும் அவளை மணந்துகொள்ள அவன் சம்மதிப்பானென்பதிலும் ஆட்சேபமில்லை.

இளவரசன் மறுநாள் மதனவல்லி தன் மாளிகைக்கு வரவேண்டுமென்று ஏற்பாடு செய்தாரென்றாலும் அவர் அதற்குமுன் சுகசிங்கம் பிரபுவினிடம் ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டிருந்தார். அப்போது இளவரசர் மதனவல்லியைப்பற்றிக் கேள்விப்பட்டிருந்தாரே யொழிய நேரில் பார்த்து அவளது அழகையும் ரூபலாவண்யத்தையும் மனதை வசிகரிக்கும் சக்தியையும் அறியாராதலால் தான் மதனவல்லியை அனுபவிக்காமல் சுகசிங்கம் பிரபுவுக்கே விட்டு விடுவதாகவும், அவர் வேறொரு காரியத்தைத் தனக்கு முடித்துத் தரவேண்டுமென்றும் இருவரும் பரஸ்பரம் ஏற்பாடு செய்துகொண்டிருந்தனர். ஆகவே உடனே இளவரசர் சுகசிங்கம்பிரபுவின் வீட்டுக்குச்சென்று அந்த ஒப்பந்தத்தை ரத்து செய்துவிடவேண்டுமென்று ஒருவாறு வழவழப்பாகச் சொல்லிவிட்டு வீண் பெருமையால் மறுநாள் இரவு மதனவல்லி தன்மாளிகைக்கு வரப்போவதாகவும், இன்னின்ன ஏற்பாடு செய்திருப்பதாகவும் சொல்லிவிட்டுச் சென்றார். கிழவன் சுகசிங்கம்பிரபுவோ பெண்ணாசையென்னும் பேய் பிடித்து அலைகிறவன். ஒருமாதைப் பெறுவதற்காக எத்தகைய அயோக்கியத்தனமான காரியங்களையும் செய்வான். ஆகவே அவன் இளவரசர்வண்டி வருவதற்குமுன் தன் வண்டியையும் ஆட்களையும் நகர நந்தவனத்தின் வடக்கு மூலைக்கு அனுப்பி எல்லா விஷயங்களையும் சொல்லி வைத்திருந்து சூட்சியாக மதனவல்லியைத் தன் மாளிகைக்கு இழுத்துவிட்டான். அன்று இரவு சுகசிங்கம்பிரபுவின் மாளிகையில் நடந்த விவரங்கள் அதாவது முதலில் மதனவல்லி தந்திரமான இயந்திர நாற்காலியில் சிக்கிக்கொண்டதும் அவள் சாமர்த்தியமாய் சுகசிங்கம்பிரபுவுக்கு ஆசை வார்த்தைகளைக்காட்டி மயக்கி விடுவித்துக்கொண்டதும் பிறகு அவள் சாமர்த்தியமாய் அதே இயந்திரநாற்காலியில் அப்பிரபுவைத் தள்ளிவிட்டு

உடனே வாடகைவண்டியில் இளவாசர் மாளிகைக்குச் சென்று சுகசிங்கம் பிரபுவீட்டில் நடந்ததைச் சொல்லிவிட்டு அங்கும் அதிககோமிராமலும், அன்றையதினமே இளவாச னுக்கு உடன்படாமலும், தன் மாளிகைக்கு விரைவில் போய்ச் சேர்ந்ததும் முன் அத்தியாயங்களில் விவரிக்கப்பட் டிருப்பதை நேயர்கள் மறந்து விட்டிருக்கமாட்டீர்கள்.

மதனவல்லி இளவாசர் மாளிகையினின்றும் தன் மாளி கைக்கு வந்ததும் இச்செய்திகளையெல்லாம் விவரமாக பத்மா வதியம்மாளுக்கு ஜயதேவியின்மூலம் சொல்லியனுப்பவில்லை. ஆனால் தனக்கும் இளவாசருக்கும் சில நிபந்தனைகள் ஏற்பட் டிருப்பதாகவும், தான் இளவாசரின் காதலியாக இருப்ப தாக ஏற்பாடு செய்திருப்பதாகவும் மட்டும் சொல்லியனுப் பினாள். இவ்வாறு அவள் செய்ததற்குக் காரணம் யாதெனில் மறுநாள் செல்லப்பனே தன்னிடம் வரவேண்டியதினமாத லால் அவன் வந்து எவ்வாறு நடந்துகொள்கிறான் என்று தெரிந்துகொண்டு பிறகுதான் அவனிடம் தான் ஏதேனும் பேசலாமென்று கருதியதேயாகும். மேலும் பத்மாவதியம் மாள் தன் வளர்ப்புப் புத்திரனாகிய செல்லப்பனுக்கு முன் எச்சரிக்கையாக ஏதும் சொல்லிக்கொடுத்துவிடக் கூடா தென்பதும் மதனவல்லியின் எண்ணமாகும். அவள் எதிர் பார்த்தபடியே மறுநாள் செல்லப்பன் மதனவல்லியின் மாளிகைக்கு வந்தான். அவன் வரும்போதே மற்ற பிரபு களைப்போல் தன்னைப்பற்றி ஏதும் பிரமாதமாகப் பேசிக் கொள்ளாமல் தான் அவளுடைய காதலைப் பெறுவதற் குரிய யோக்கியதை சிறிதுமில்லாதவனென்றும், ஆயினும் தனக்கு அவள்பால் தணியாக் காதல் ஏற்பட்டிருப்பதாக வும் கூறிக்கொண்டான். அவனுடைய குணங்களையெல்லாம் மதனவல்லி நன்கு அறிவாளாதலின் அவனுடன் தாராள மாகவும் அன்புடனும்பேச ஆரம்பித்தாள். நாம் முன்னமே

கூறியபடி செல்லப்பனுக்கு மதனவல்லியிடம் அதிக ஆர்வம் ஏற்பட்டிருந்தபடியால் அவள் கூறிய நிபந்தனைகளையும் பொருட்படுத்தாமல் அவளைக் கலியாணம் செய்துகொள்வதாக ஒப்புக்கொண்டான்.

அவர்களிருவருக்குள் இவ்வாறு ஒப்பந்தம் ஏற்பட்ட பிறகு மதனவல்லி இச்சங்கதிகளையெல்லாம் பத்மாவதியம்மாளுக்குத் தெரிவித்தாள். அவளும் சந்தோஷமடைந்தாள். பிறகு மதனவல்லி எவ்வாறு செல்லப்பனை மணந்துகொண்டாளென்பதும், எப்படி செல்லப்பனுக்குப் பிரபுபட்டம் கிடைத்ததென்பதும்; பின்னர் எவ்வாறு அத்தம்பதிகளிருவரும் இளவரசர் மாளிகையில் வசிக்க ஆரம்பித்தார்களென்பதும் வாசக நேயர்களுக்குத் தெரிந்தவிஷயம். இப்போது மற்றொரு விஷயம் விளக்கவேண்டியது என்னவென்றால் இளவரசர் ஒரு விருந்து நடத்தி அதற்கு செல்லப்பப்பிரபு, சுகசிங்கம்பிரபு, சர்தார் சூரியநாயகம், குமாரவேல்பிரபு ஆகியோர் வந்திருந்தபோது இளவரசரும் சுகசிங்கம்பிரபுவும் ஏதோ இரகசியமாகப் பேசிக்கொண்டதை மதனவல்லி மறைவாக இருந்து கேட்டுவிட்டாள். அதனால் அவளுக்கு மூன்று விஷயங்கள் தெரியவந்தன. முதலாவது ஜகதீசன் என்பது உண்மையில் யார் என்பது தெரிந்துவிட்டது. அதனால் அவளுக்குச் சந்தோஷமே ஏற்பட்டது. ஏனெனின் தன் சகோதரி கோமளவல்லி அப்படிப்பட்ட பெருமை வாய்ந்த ஒருவனிடம் காதல் கொண்டிருப்பதில் அவளுக்குத் திருப்தியே ஏற்பட்டது. ஆனால் அவர்களுடைய சம்பாஷணையினால் அந்த ஜகதீசன் என்பவன் பரிதிபுரத்தில் மாகதவல்லியின் புத்திரிகளின் சூழ்ச்சியாலும் தந்திரத்தாலும் சிறையிலடைபட்டிருக்கிறானென்றும் தெரிந்தது. மேலும் தன் சகோதரி கோமளவல்லியும் வீட்டிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டுப் பரிதிபுரத்துக்கு

அழைத்துச் செல்லப்பட்டுப் பின்னர் இப்போது ரத்தின புரிக்கு அழைத்து வரப்பட்டிருக்கிறுள் என்றும் தெரிந்து கொண்டாள். இதனல் அவளுக்குச் சிறிது மனவருத்தம் ஏற்பட்டது. முக்கியமாகத் தன் சகோதரி படுபாவி சுகசிங் கம்பிரபுவின் வீட்டில் வைக்கப்பட்டிருக்கிறுள் என்று அறிந் ததும் அவள் மனம் புண்ணுய்விட்டது. ஏனெனின் அவ னுடைய குணங்களையெல்லாம் அவள் நன்கு அறிவாள். இதுமட்டுமா? மற்றெரு விஷயம் சுகசிங்கம்பிரபுவின் வாயால் கேட்டதும் மதனவல்லியின் தேகம் வியர்த்துவிட்டது. அதென்ன? கோமளவல்லியின் சகோதரி யாரோ இரத்தின புரியில் இருப்பதாகவும், அவள் விலாசம் தெரியவில்லையென் றும் சுகசிங்கம்பிரபு சொன்னதுதான். இதையெல்லாம் கேட் டதும் மதனவல்லிக்கு பயமும் கோபமும் ஆத்திரமும் அதி கரித்துவிட்டது. ஆகவே அவள் ஒன்றும் தோன்றுதவளாய் உடனே சரேலென்று விருந்து நடக்குமிடத்தை விட்டுத் தன் அறைக்குப் போய்விட்டாள்.

அங்கு அவள் தன் நிலைமையைப்பற்றித் தீர யோசித்து விட்டு உடனே தன் அந்தரங்கத் தோழியை அழைத்து பத்மாவதியம்மாளிடம் சென்று, தன்னைப்பற்றித் தன் சகோ தரி புலன் விசாரிக்க ஆரம்பித்திருப்பதாகவும் பத்மாவதியம் மாள் மிக ஜாக்கிரதையுடன் இருந்து இரகசியத்தை வெளி யிடலாகாதென்றும் சொல்லிவிட்டு வரும்படி அனுப்பினுள். இவ்வாறு ஒரு விஷயத்தில் எச்சரிக்கை :எடுத்துக்கொண்ட பின்னர் மற்ற விஷயங்களில் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்பதுபற்றி யோசிக்கலானுள். இப்போது அவள் இரு வேலைகளைக் கவனிக்கவேண்டும். முதலாவது சுகசிங் சிங்கம்பிரபுவின் தொல்லையினின்றும் தன் சகோதரி கோம ளத்தை விடுவிப்பது ஒன்று. பரிதிபுரத்தில் சிறையிலிருக்

கும் ஜகதீசனை விடுவிப்பது மற்றொன்று. இவ்வேலைகளில் ஈடுபடுவதென்றால் அவள் மிக்க சாமர்த்தியமாகவும் தைரிய மாகவும் நடந்துகொள்ள வேண்டியதாயிற்று. கோமள வல்லியை சுகசிங்கம் பிரபுவின் மாளிகையி னின்றும் விடுவிக்கும் வேலையில் சர்தார் சூரியநாயகம்பிரபுவை அமர்த்த முயன்றாள். ஆனால் அவன் அவ்வேலையைச் செய்வதானால், அவனுக்கு ஏதேனும் ,சன்மானம் அளிக்கவேண்டுமல்லவா? அவன் மதனவல்லியின் இன்பத்தை அனுபவிப்பது தவிர வேறு எத்தகைய சன்மானத்தையும் அவன் லட்சியம் செய்யமாட்டான். ஆகவே அவள் சிறிது யோசித்து முன் னமே தன் கற்பு கெட்டுவிட்டதால் தன் காரியத்தை உத் தேசித்தேனும் இந்த ஒருவனுக்கும் தன் மானத்தை விற்று விடுவதில் ஒன்றும் குடிமுழுகிப் போவதில்லை என்று துணிந்துவிட்டாள். ஆனால் அவள் சர்தார் சூரியநாயகத் துக்கென்று எழுதிய கடிதத்தை அறியாமல் தற்செயலாக குமாரவேல் பிரபுவினிடமும், குமாரவேலுக்கு எழுதிய கடி தத்தை சர்தாரிடமும் கொடுத்துவிட்டாள் என்பதும், அத னால் அன்றிரவு வரவேண்டிய சர்தார் சூரியநாயகத்துக்குப் பதிலாக் குமாரவேல்பிரபு வர நேரிட்டதென்பதும் முன் னரே கூறப்பட்டிருக்கிறது. ஆகவே குமாரவேல்பிரபு முத லில் மதனவல்லியின் இன்பத்தை அனுபவிக்கும் பாக்கியம் பெற்றான். இதற்கும் அவள் விசனப்படவில்லை. ஏனெனின் எப்படியிருந்தாலும் தன் இன்பத்தை அளிப்பதாக இருந் தால் சர்தார் சூரியநாயகம் மதனவல்லிக்காக எக்காரியத்தை யும் செய்யத்தயாராக இருக்கிறான் என்பது தெரிந்தவிஷ யம். மதனவல்லிக்கு குமாரவேல்பிரபுவின் ஒத்துழைப்பும் துணையும் வேண்டியிருந்தது. அதைப் பெறுவதற்கு வழி ஏற்பட்டுவிட்டதுபற்றி அவள் சந்தோஷமே யடைந்தாளே யொழிய புதிதாக மற்றொருவனுக்கும் தன் மானத்தை

விற்க நேரிட்டதே என்பதுபற்றிக் கவலை கொள்ளவேயில்லை. இது உலகத்தில் காணப்படும் சகஜமான நடவடிக்கை. எவரும் ஒரு தவறான காரியத்தைச் செய்யலாகாதென்று கண்டிப்பான கட்டுப்பாட்டுடன் இருக்கும் வரையில்தான் அக்காரியம் செய்யாமல் இருக்கமுடிகிறது. கட்டுப்பாட்டைத் தளர்த்திவிட்டு ஒருமுறைதானே என்று செய்துவிட்டால் பிறகு மேலும் அதே தீயகாரியத்தில் இறங்கும்படிதான் மனிதன் தூண்டப்படுகின்றான். உதாரணமாக மதுபானத்தை எடுத்துக்கொள்வோம். அது பஞ்சமகா பாதகங்களில் ஒன்று என்று நினைத்துக் கண்டிப்பாக இருக்கும்வரைதான் ஒருவன் அப்பழக்கத்துக்கு ஆளாகாமலிருக்கிறான். அதை விடுத்து நண்பர்கள் தாட்சண்யத்துக்குட்பட்டோ, மருந்து என்னும் காரணங்களைக் கூறிக்கொண்டோ ஒன்று அல்லது இரண்டுமுறை மதுபானம் செய்வானானால் பிறகு அவன் நாளடைவில் பெருங்குடியனாகிச் சொத்தையும் மானத்தையும் இழந்து ஊரார் சிரிக்கும்படியான நிலைமைக்கு வந்து விடுகின்றான். ஆதலின் எந்த தவறான காரியத்திலும் கண்டிப்பாக ஒருமுறையும் இறங்காமல் மனோ உறுதியுடன் இருக்கவேண்டும். அதுவே உயரிய லட்சியம்.

மதனவல்லி தன் சகோதரியாகிய கோமளவல்லி தனக்கு எழுதிய கடிதங்களின்மூலம் பரிதிபுரத்தில் இளவரசிக்கு எவ்வளவு கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதையும், மரகதவல்லியின் குமாரிகளால் எவ்வளவு சூழ்ச்சி நடைபெறுகிறதென்பதையும் தெரிந்துகொண்டிருந்தாள். ஜகதீசனும் இளவரசியைக் காப்பாற்ற வேண்டுமென்னும் நல்லெண்ணத்துடனேயே பரிதிபுரம் சென்று இவ்வளவு கஷ்டங்களை அனுபவிக்கிறான் என்பதும் தெரிந்தது. இப்போது மதனவல்லி இளவரசிக்கோ ஜகதீசனுக்கோ ஏதேனும் நன்மை செய்ய

வேண்டுமென்றால் அது இளவரசருக்கே விரோதமாகச் செய்யப்படும் காரியமாகவன்றோ முடிகின்றது. ஆதலின் அவள் மிக முன் எச்சரிக்கையையும் சர்வ ஜாக்கிரதையையும் அனுஷ்டிக்க வேண்டியதாயிற்று. மேலும் தன்னைக் காட்டிக் கொடுத்துவிடாத அவ்வளவு நம்பிக்கைக்குப் பாத்திரமான ஒருவரை இக்காரியத்தில் தூதாக அனுப்பவேண்டியதாயிற்று. ஆகவே குமாரவேல்பிரபுவிடம் தற்செயலாய் அக்கடிதம் கிடைத்து அப்பிரபுவும் மதனவல்லியிடம் சென்று இன்பம் அனுபவிக்க நேர்ந்ததுபற்றி மதனவல்லி விசனப்படவில்லை.

குமாரவேல்பிரபு பலகாலமாக அலைந்துகொண்டிருந்த வேலை முடிந்துவிட்டதால் மிகச் சந்தோஷத்துடன் அவள் சொல்லும் காரியங்களையெல்லாம் செய்வதாக ஒப்புக்கொண்டான். உடனே அவன் கபூர் கிருஷ்ணனையும் எச்சனையும் துணையாக அழைத்துக்கொண்டு பரிதிபுரம் சென்று நாம் இதற்கு முன்னமே விவரித்திருக்கிறபடி ஜகதீசனைச் சிறையினின்றும் விடுவித்துவிட்டான். ஆனால் தன்னை விடுவிக்கக் காரணமாய் இருந்தது யார் என்னும் விவரமொன்றும் ஜகதீசனுக்குத் தெரியாது. வேண்டுமென்றே அவ்விஷயம் மதனவல்லியின் விருப்பத்துக்கிணங்க மறைத்து வைக்கப்பட்டது.

இதற்கிடையில் சர்தார் சூரியநாயகத்தை சுகசிங்கம் பிரபுவின் மாளிகையினின்றும் விடுவிக்கும் வேலையில் மதனவல்லி அமர்த்திவிட்டிருந்தாள். சுகசிங்கம்பிரபு, தன்னிடம் கோமளவல்லி தெரிவித்த விலாசத்துக்குப்போய் பச்சையப்பபிள்ளை குடும்பத்தைப்பற்றியும், கோமளவல்லியின் சகோதரியைப்பற்றியும் விசாரிக்கலாமென்று சென்றதில் அந்தக் குறிப்பிட்ட விலாசத்தில் தன் பழைய நட்பினளான பத்மாவதியம்மாள் அங்கே இருக்கக்கண்டு மிக சந்தோஷத்

துடன் முழு விவரங்களையும் அவளை விசாரித்தான். இதைக் கேட்ட பத்மாவதியம்மாள் மனக்கலக்க மடைந்ததுடன், கோமளவல்லி தன் சகோதரியைத் தேடவேண்டுமென்னும் ஆவலினால் எப்படியாவது விஷயத்தைக் கண்டுபிடித்துவிடுவா ளென்றும், அவ்விஷயத்தில் சுகசிங்கம்பிரபுவும் அவளுக்குத் துணை செய்வானென்றும் கருதித் தான் மறைத்து வைப்பதில் பிரயோசனமில்லை என நினைத்து பத்மாவதியம்மாள் எல்லா விஷயங்களையும் தனது பழைய சினேகிதராகிய சுகசிங்கம் பிரபுவினிடம் கூறிவிட்டு, அவற்றைக் கோமளவல்லியிடம் சொல்லவேண்டாமென்றும், அவள் இதைப்பற்றி அதிகமாக விசாரணை செய்யாதபடி அவளது கவனத்தை வேறு விஷ யத்தில் திருப்பிவிடும்படியும், மதனவல்லியின் இரகசியத்தை எங்குமே வெளியிட வேண்டாமென்றும் கேட்டுக்கொண் டாள். தன்னைச் சிறிதும் லட்சியம் செய்யாத, ஆனால் சதா தன் மனக்கண்முன் தோன்றிக் காதலை எழுப்பிக்கொண் டிருக்கும் மதனவல்லியின் பெரிய இரகசியம் தனக்குத் தெரிந்துவிட்டதுபற்றி சுகசிங்கம்பிரபு உள்ளுக்குள் குதூ கலமடைந்தான். இந்த இரகசியத்தைக் கோமளவல்லி யிடமோ அல்லது மற்றவர்களிடமோ வெளியிடுவதால் அவ னுக்கென்ன லாபமுண்டு. ஆனால் அதை மறைத்து வைத் தால் சமயத்தில் அதைச் சுட்டிக்காட்டி மதனவல்லியைத் தன் வழிக்கு இழுக்க முயற்சிக்கலாம். ஆகவே சுகசிங்கம் பிரபு இதைப்பற்றி எங்கும் பிரஸ்தாபிப்பதில்லையெனப் பத்மா வதியம்மாளிடம் வாக்களித்துவிட்டுச் சென்றான்.

சுகசிங்கப்பிரபு தன் வீட்டிலிருந்த கோமளவல்லியிடம் தான் பச்சையப்பபிள்ளை என்பவரைப்பற்றி விசாரித்ததாக வும், அவர்கள் கற்பகவல்லியுடன் வெளியூருக்குச் சென் றிருப்பதாகவும் கூறிவிட்டான். இதற்கிடையில் பத்மாவதி

யம்மாள் இச்செய்தியை மதனவல்லிக்கு அறிவித்து விட்டாள். ஆகவே மதனவல்லி சர்தார் சூரியநாயகத்தினிடம் தன் சகோதரி கோமளத்தை விடுவித்து உடனே பத்மாவதியம்மாள் வீட்டுக்கு அழைத்துவரும்படி சொல்லி யனுப்பினாள். அப்படியே சர்தாரும், கோமளவல்லியை நல்ல சமயத்தில், அதுவும் படுபாவி சுகசிங்கம் அவளையும் கெடுக்கமுயன்ற சமயத்தில் விடுவித்துத் தன் வண்டியிலேயே பத்மாவதி யம்மாளின் வீட்டுக்கு அழைத்துச்சென்றான். இதற்குள் மதனவல்லியும் எளிய உடையை அணிந்து கற்பகவல்லியாகி அங்கு தன் சகோதரியைக் காணக் காத்திருந்தாள். அப்போது அச்சகோதரிகளிருவரும் பேசியதைச் சிறிது கவனித்தல் அவசியமாகும். கற்பகவல்லி தன் சகோதரியிடம் ஜகதீசனைப்பற்றிச் சிலாக்கியமாகக்கூறி அவன் உயர்ந்த அந்தஸ்தை யுடையவனென்றும், ஜகதீசன் என்பது அவனது உண்மைப் பெயரல்லவென்றும், அவனே பின்னால் கோமளத்தினிடம் தான் ஏன் அவ்வாறு மாறுபெயர் வைத்துக் கொள்ள நேர்ந்தது என்பதை விளக்கிக்கூறிச் சமாதானம் செய்வானென்றும், அவன் சிறிதும் குற்றமற்ற பரிசுத்தமானவனென்றும், அவனையும் சிறையிலிருந்து மீட்க ஏற்பாடாயிருப்பதாகவும், கோமளம் கவலையின்றி இருக்கலாமென்றும் தெரிவித்தாள். பிறகு தன்னைப்பற்றி ஏதேனும் சொற்ப விஷயங்களையாவது தன் சகோதரி அறிந்திருத்தல் நலமெனக் கருதித் தனக்கு விவாகமாய் இருக்கிறதென்றும், தான் ஒரு பிரபுவின் மனைவியென்றும், இளவரசர் மாளிகையில் தன் கணவன் பெரிய உத்தியோகத்தில் இருப்பதாகவும், கோமளவல்லியிடம சொல்லலாமென யோசித்தாள். ஆனால், இதற்குள் கள்ளங்கபடமற்ற கோமளவல்லி ஆத்திரப்பட்டுத் தான் சுகசிங்கம்பிரபுவின் வீட்டில் தெய்வயானையென்னும் மாதின் மூலம், அந்நகரில் மதனவல்லி என்று ஒரு அழகிய மாது வந்

திருப்பதாயும் அவள் இப்போது செல்லப்பப்பிரபு என்ப வரை மணந்துகொண்டு இளவரசரின் அந்தரங்கக் காதலியாக இருப்பதாகவும் அறிந்த சங்கதியைத் தன் சகோதரி கற்பக வல்லியிடம் கூறவே, தன்சங்கதி வேறுவகையில் தன் சகோ தரிக்குத் தெரிந்திருப்பதை அறிந்து இச்சமயத்தில் தானும் ஏதேனும் சொன்னால் உண்மை வெளியாய்விடும் என்று அறிந்து தான் ஒன்றும் வெளியிடாமல் தனக்கு ஏதோ அவ சாகாரிய மிருப்பதாகச் சொல்லித் தன்சகோதரியைக் கந்த புரிக்கு சர்தார் சூரியநாயகத்தின் துணையுடன் அனுப்பிவிட் டாள். ஏதோ காரணங்காட்டி இம்முறையும் பச்சையப்பப் பிள்ளை முதலியவர்களைக் கோமளவல்லிக்குக் காண்பிக்கவே யில்லை.

பின்னர் நாம் வாசகர்களுக்கு விளக்கவேண்டிய விஷய மொன்றுண்டு. அதாவது இளவரசர் மாளிகையில் பிரத்யேக நாடகமொன்று நடந்தபோது இளவரசர் பேட்டியைக் காண வேண்டி ஜகதீசன் அங்குச் சென்றபோது தன் காதலியின் சகோதரியாகிய கற்பகவல்லியே இரத்தினபுரி எங்கும் புகழ் மணக்கும் மதனவல்லியாய் இருப்பதை உணர்ந்ததேயாகும். அதை அவன் தெரிந்துகொண்ட மாத்திரத்தில் மிகமிக ஆச் சரியமடைந்தான். கோமளத்துக்கு அவளது மூத்த சகோ தரி எழுதிவரும் கடிதங்களிலிருந்து கற்பகவல்லியின் விஷ யங்களொன்றும் கோமளத்துக்குத் தெரியாதென்பதையும் அறிந்துகொண்டான். தனது காதலியின்சகோதரி இவ்வாறு மதனவல்லி என்னும் பெயரால் கெட்டுப் போனதற்காக அவன் உண்மையில் வருந்தினனென்றாலும் தான் கந்தபுரிக் குச் செல்லும்போதும் இந்த இரகசியத்தைக் கோமளத்தி னிடம் சொல்வதில்லையென்றே தீர்மானித்தான். தான் மறு படியும் பரிதிபுரம் சென்றால் திரும்பிவர ஏழெட்டு மாதங்க

ளாகுமென்று அவன் அறியவில்லை. விரைவில் திரும்பிவந்த பிறகு எல்லா விவரங்களையும் சொல்லலாமென நினைத்துக் கொண்டான். அப்போது அவன் மதனவல்லியையும் கண்டு பேசவில்லை. ஆனால் ஒரு நீண்டகடிதம் எழுதிவிட்டுச் சென்றான். அக்கடிதமே அவளுக்கு எவ்வளவோ மனத்துயரை அளித்தது.

ஜகதீசனுடைய கடிதம் கிடைத்த அதே சமயத்தில் தான் சுகசிங்கம்பிரபு அனுப்பிய முத்துமாலையும் கடிதமும் கூடக்கிடைத்தது என்பதை நேயர்கள் மறந்திருக்கமாட்டீர்கள். ஜகதீசன் தனது கடிதத்தில் சகோதரமுறையில் மதனவல்லியைப் பலமாகக் கண்டித்திருந்தான். தன் சகோதரி கோமளத்துக்கும் ஒன்றும் அறிவிக்காமல் அவள் அவ்வாறு தவறான நடத்தையில் ஈடுபட்டதற்காகக் குறைகூறி இருந்தான். ஆனால் தன் சகோதரியையும் அவள் தன்னைப்போன்ற வாழ்க்கைக்கு இழுத்துவிடாமல் விட்டுவைத்ததற்காக அவளைப் பாராட்டினான். தான் இளவரசரின் மனைவிக்கு எதிராகச் செய்யப்படும் சூழ்ச்சியினின்றும் இளவரசியைக் காப்பதற்காகத் தான் மிக அவசரமாகப் பரிதிபுரம் செல்லவேண்டுமென்பதையும் திரும்பி வரும்போது அவளை நேரில் கண்டு பேசுவதாகவும் அறிவித்திருந்தான்.

இதையெல்லாம் வாசித்த மதனவல்லிக்கு தன் இனத்தைச்சேர்ந்த இளவரசியிடம் ஒருவித அனுதாபம் உண்டாயிற்று. மேலும் இப்போது அவள் ஜகதீசன் தன்காரியத்தில் எளிதில் வெற்றி பெறும்படி ஏதேனும் காரியங்களைச்செய்து இளவரசியை ஆபத்தினின்றும் விடுவித்தால் ஜகதீசனுக்குத் தன்னிடம் திருப்தி ஏற்படுமென்றும், அப்போதேனும் அவன் தன் இரகசியத்தை வெளிவிடாமல் துணைபுரிவா

னென்றும் கருதினள். ஆனல் தான் அவ்வேலையை மேற்கொண்டால் தனக்கு இவ்வளவு சுகசௌகரியங்களையும் அளித்துத் தன்னிடம் தனியாக்காதலுடன் இருக்கும் இளவாசருக்கு விரோதமாக இருக்குமல்லவா? அவருக்கு இச்செய்தி தெரிந்துவிட்டால் அவர் அளித்த எல்லாவற்றையும் பிடுங்கிக்கொண்டு ஓட்டாண்டியாக நடுத்தெருவில் அனுப்பி விட்டால் என்னசெய்வது? என்றெல்லாம் ஆலோசித்தாள். கடைசியில் குமாரவேல் பிரபுவையும், தற்செயலாய்த் தன் தயவை எதிர்பார்த்துத் தன்னை நாடிவந்த கர்னல் மாரப்பனையும் பரிதிபுரத்துக்கு அனுப்பி அவர்களிருவரும் எப்படியாவது, இளவரசிக்குத் தொந்தரை செய்துவரும் மரகதவல்லியின் குமாரிகளை அங்கிருந்து அப்புறப்படுத்தி விட வேண்டும் என்று கட்டளையிட்டாள். கர்னல் மாரப்பன் மிக அயோக்கியன் என்பதையும், அவன் தன் காரியத்தைச் சாதித்துக்கொள்ளும்பொருட்டு எப்படிப்பட்ட அயோக்கியத்தனமான வேலைகளையும் செய்வான் என்பதையும் மதனவல்லி அறிந்திருந்தும், அவன் இப்போது மிகவும் நொந்துபோய் அவளுடைய தாட்சண்யத்துக்குக் காத்திருந்தபடியால் அவனைத் தன்காரியம் சாதித்துக்கொள்ள ஒருகருவியாக உபயோகித்துக் கொள்ளலாம் என்று நினைத்தே அவனை அனுப்பினள்.

மதனவல்லியைப்பற்றி எல்லா விஷயங்களும் விளக்கியாய்விட்டது. மற்ற விஷயங்களெல்லாம் இதற்கு முன் அத்தியாயங்களில் விவரிக்கப்பட்டிருக்கின்றன. அவள் இளவாசரின் காதலியாக மாளிகைக்கு வந்ததுமுதல், தன்னை அத்தொழிலுக்குத் தயாராக்கியவளும், தனக்காக மூவாயிரம் பவுன் மூலதனம் போட்டவளுமான பத்மாவதியம்மாளுக்கு வேண்டிய எல்லா உதவிகளையும் சௌகரியங்களையும்

இளவரசரிடம் தனக்குள்ள செல்வாக்கினுல் செய்துவைத் தாள். இளவரசரும் அவள் கேட்டதையெல்லாம் மறுமொழி கூறுமல் அளித்துவந்தார். அவள் கந்தபுரிக்கு வந்து விடுவ தற்குமுன் கடைசி முறையாக பத்மாவதியம்மாளுக்காக இள வரசரிடம் கோரியது என்னவென்ருல் அவளையும் உபகாரச் சம்பளப்பட்டியில் சேர்த்துவிட வேண்டுமென்பதே. பத்மா வதியம்மாள் செல்லப்பப்பிரபுவின் வளர்ப்புத் தாயாதலால் மதனவல்லி அவ்வாறு கேட்டதில் இளவரசருக்கு எத்தகைய விகல்பமான எண்ணமும் உண்டாகவில்லை. அப்படியே வருஷவாரி எழுநூறு பவுன் உபகாரச்சம்பளம் கிடைக்கும் படி ஏற்பாடு செய்யப்பட்டது. அவ்வாறு கொடுப்பதற்கு ஏதேனும் காரணம் காட்டவேண்டுமல்லவா? பத்மாவதியம் மாளின் தந்தை ஏதோ ஒருகாலத்தில் இரத்தினபுரி சேனை யில் உண்மையுடன் உழைத்ததற்காகப் பென்ஷன் தருவ தாகச் சொல்லப்பட்டது. அவளுடைய தந்தை சேனையில் வேலைசெய்தது உண்மையே. ஆனுல் ஏதோ உபாயமான வேலையில் இருந்தாரேயொழிய எதிரிகளின் துப்பாக்கிப் பிர யோகத்தையும் அவர் நேரில் கண்டதில்லை. செல்வாக்கு இருந்தால் எல்லாம் நடந்துவிடுகிறது.

இவ்வாருக பத்மாவதியம்மாள் மதனவல்லியை எந்தத் தொழிலில் நியமித்தாளோ அத்தொழிலில் நல்லவெற்றி ஏற் படும்படி மதனவல்லியென்னும் கற்பகவல்லி தன் சாமர்த்தி யத்தாலும், இனிய குணங்களாலும், எல்லாவற்றையும் விட முக்கியமாய்த் தன் ரூபலாவண்யத்தாலும் செய்துவிட்டாள். ஆதலின் பத்மாவதியம்மாளின் எண்ணம் பூர்த்தியாக வெற்றி யுடன் நிறைவேறிற்று என்றே கூறவேண்டும். அவள் கற்பக வல்லியை நம்பிப்போட்ட மூலதனம் வீணுகாமல் ஒன்றுக் குப் பத்தாக லாபத்தைக் கொடுத்துவிட்டது. கற்பகவல்லி

யும் எல்லா சுகங்களேயும் அனுபவித்த பின்னர் மானங் கெட்ட அவ்வாழ்க்கையை வெறுத்துவிட்டுக் கள்ளங் கபட மற்ற பரிசுத்த இருதயமுடைய கற்பரசியாகிய தன் தங்கை கோமளவல்லியிடம் எளிய வாழ்வு வாழவந்து சேர்ந்துவிட் டாள். மனித வாழ்க்கையில் எதிர்பாராத மாறுதல்கள் ஏற் படுவது சகஜமே.

168 - வது அத்தியாயம்

நமது கற்பகவல்லி கந்தபுரியிலுள்ள தனது வீட்டுக்கு வந்துவிட்டாள். ஆனல் பழைய எளிய கற்பக வல்லியாக மட்டும் இப்போதில்லை. பிரபு பட்டம் பெற்ற செல்லப்பனின் மனைவியாகவும், விலையுயர்ந்த ஆடை ஆபர ணுதிகளேயுடையவளாயும் இருக்கின்றுள். அவளேக் கண்ட மாத்திரத்தில் அவளே, இரத்தினபுரியில் மதனவல்லியாய் விளங்கியவள் என்று உணர்ந்துகொண்ட கோமளவல்லி திக் பிரமையால் மூர்ச்சையானுள் என்று முன்னமே கூறியிருக் கிருேம். கற்பகம் தன் சகோதரியை வாரி எடுத்து மார்போ டணைத்துக்கொண்டு தேற்றினுள். இதையெல்லாம் பார்த் துக்கொண்டே மதுரைநாயகம்பிரபு நின்றுகொண்டிருந்தான். சற்று தூரத்தில் அச்சகோதரிகளின் தாயின் சகோதரிகளான மரகதவல்லியும், லீலாவதியும் நின்று சகோதரிகளின் அன் பைக் கவனித்துவந்தார்கள். கோமளவல்லி ஸ்மரணை பெற்ற தும் அருகில் நின்றிருந்த மதுலைநாயகம் இன்ன உறவினனுக இருக்கவேண்டுமென்பதை யூகித்துணர்ந்து அவனேயும் அன் புடன் வரவேற்றுள். பிறகு அனைவருமாக மேல்மாடிக்குச் சென்றுர்கள். அங்கே நீண்டகாலமாக பாரிச நோயுடன்

கிடந்து திடீரென்று சொஸ்தமடைந்த சுந்தரம்மாள் கற்பக வல்லியை ஆவலுடன் கட்டித் தழுவிக்கொண்டாள்.

அன்று மாலை கற்பகவல்லி தன் தாயின் சகோதரிகள் மூவரையும் ஒன்றாக உட்கார வைத்துக்கொண்டு தன் வரலாறு பூராவையும் விவரமாகக் கூறினாள். அதற்கு முன்னாள் இரத்தினபுரியில் இளவரசர் மாளிகையில் மதுரைநாயகம் பிரபுவிடம் சொல்லிக்கொண்டதுபோலவே இங்கும் சொல்லிக்கொண்டாள். தான் செல்லப்பப்பிரபுவை மணந்துகொண்டதும், இளவரசரின் அந்தரங்கக் காதலியாக இருந்தது, பத்மாவதியம்மாளின் ஏற்பாட்டின்படி எல்லாம் நடந்தது முதலிய பல விஷயங்களையெல்லாம் கூறினளே யொழிய அவள் கற்பை அந்த இரு ஆடவர்மட்டுமே யன்றி வயதான கிழவன் சுகசிங்கம்பிரபு, அயோக்கியர்களில் தலைசிறந்த கர்னல் மாரப்பன், குமாரவேல்பிரபு, சர்தார் சூரியநாயகம் ஆகியவர்களுக்கும் தன் மானத்தை விற்றுவிட்டதை அவள் தெரிவிக்கவேயில்லை. இதைத் தெரிவிப்பதைவிட உயிரை விட்டு விடுவதே மேல் என்று அவள் கருதினாள். கற்பகவல்லி இதையெல்லாம் தன் தாயின் சகோதரிகளிடம் கூறியபோது கோமளவல்லி அங்கே இருக்கவில்லை. ஆகையால் அன்று விளக்குவைக்கும் நேரத்தில் சகோதரிகள் இருவர் மட்டுமே அவ்வீட்டைச் சேர்ந்த தோட்டத்தில் உல்லாசமாக உலாவிக்கொண்டிருந்தபோது கோமளம் கற்பகத்தின் விருத்தாந்தங்களை விசாரித்து அறிந்துகொண்டாள். கற்பகவல்லியும் எந்த எந்த விஷயங்களைச் சொன்னால் களங்கமற்ற தன் சகோதரியின் மனம் திகிலடையுமோ அதையெல்லாம் மறைத்துவிட்டு முக்கியமான சில விஷயங்களைமட்டும், குறிப்பாக அவள் இளவரசரின் காதலியாக இருந்தாளென்பதை மறைக்காமல், சொல்லிமுடித்தாள். கோமளவல்லி இயற்கையிலேயே எதை

யும் மன்னிக்கும் சுபாவமுடையவளாயும், பெருந்தன்மை யோடு கூடிய தாராள நோக்கமுடையவளாயும் இருந்ததால் தன் மூத்த சகோதரிக்கு இவ்வாறெல்லாம் எதிர்பாராமல் நேர்ந்ததற்கு ஏதோ காரண மிருக்கவேண்டுமென்று வேதாந்த முறையில் சமாதானப் படுத்திக்கொண்டுவிட்டாள்.

தான் மட்டும் தனக்குள் சமாதானம் செய்துகொள்ளா மல் கோமளவல்லி தன் சகோதரியிடம் பின்வருமாறு கூறி னாள்:—"அன்புள்ள கற்பகவல்லி! நீ பச்சையப்பபிள்ளையைத் தேடப்போய் அவர் அகப்படாமல் அலைந்து திரிந்து ஊருக் குத் திரும்பலாமென வண்டிகள் நிற்குமிடத்துக்கு வந்த போது உன் கையிலிருந்த சொற்ப பணமும் களவு போய் விட்டதென்றால், கையில் காலணாவுமில்லாமல், இரத்தினபுரி ரஸ்தாவில் திக்கின்றி நின்ற உன் மனம் என்ன பாடுபட்டிருக்கு மென்பதை நான் என் மனக்கண்ணால் யூகிக்கின்றேன். அந்தோ, பயங்கரம்! பரிதாபமான நிலைமையே. மேலும் என்னையும், அப்போது பாரிசநோயால் தாக்கப்பட்டு அவஸ் தைப்பட்டுக்கொண்டிருந்த நமது பந்துவையும் வறுமை என் னும் ஆழ்கடலில் ஆழ்த்திவிடாம லிருக்கும்பொருட்டே நீ அந்த பத்மாவதியம்மாள் கூறிய நிபந்தனைகளுக்கெல்லாம் ஒப் புக்கொண்டதாக இப்போது கூறினாயே. ஆம்; வாஸ்தவமே. நீ அப்போது பணம் அனுப்பியிராமல், நீயும் வெறுங்கை யுடன் திரும்பி வந்துவிட்டிருந்தால் எங்கள் கதி யாதாயிருக் கும் என்பதைச் சிந்திக்கும்போதே என் உடல் நடுங்குகின் றது. ஆகவே அப்படிப்பட்ட ஆபத்தான நிலைமையில் ஒன் றும் தோன்றாமல் நீ எத்தகைய செயலில் ஈடுபட்டுவிட்டிருந் தாலும் அதற்காக உன்மீது யாரும் தோஷம் கூறமுடியாது. அதிலும் நான் உன்னைச் சிறிதும் கண்டிக்கவோ, தூற்றவோ மாட்டேன். சகோதரியே! சென்றது செல்க. சென்றதை

யுன்னிக் கன்றுவது நன்றன்று. அதைப்பற்றி நாம் மறந்துவிடுவோம். இனியேனும் நீ அந்த இளவரசர் மாளிகையின் பக்கமும் திரும்பிப்பார்ப்பதில்லை என்று திடமாக உறுதி செய்துகொள். இவ்வாறு நீ தீர்மானித்துக் கொண்டுவிட்டால் பிறகு நான் எல்லையில்லா சந்தோஷமடைவேன். சென்றதைப்பற்றிக் கனவிலும் கருதேன்."

கற்பகவல்லி:—கோமளம்! நீ இப்போது பேசுவது ஏதோ தேவலோகத்து மாது என் எதிரில்நின்று பேசுவது போல் இருக்கிறது. கிட்டே வா! என்னைத் தழுவிக் கொள். நான் இன்றுகாலை இளவரசர் மாளிகையை விட்டு வெளிவரும்போதே இனி இக்கட்டடத்துக்குத் திரும்புவதில்லை யென்று மனமார உறுதிசெய்து கொண்டு வெளியேவந்தேன். அந்த உறுதி எக்காலமும் நிலைத்திருக்கும்.

கோமளவல்லி:—அன்புள்ள சகோதரியே! இத்தீர்மானத்தை நீ உறுதியாகக் கடைப்பிடித்து இனி உன் வாழ்க்கையில் அத்தகைய தீயவழிகளில் இறங்காமலிருந்துவிட்டால் அதுவே பழைய செயல்களுக்குப் பாவமன்னிப்புத் தேடிக்கொண்டதுபோலாகும்.

கற்பகம்:—ஓ, தடையில்லாமல் நான் என் வாக்குறுதியை நிறைவேற்றுவேன். நமது அத்தையிடமும் நான் இவ்வாறே உறுதிமொழி அளித்திருக்கிறேன். அவளும் என்னை மன்னித்து விட்டதுடன் பழைய சங்கதிகளை மறந்துவிடுவதாகவும், எதிர்காலத்திலேனும் நான் உத்தம வாழ்க்கையை அனுஷ்டிக்க வேண்டுமென்றும் கூறினாள். நான் எத்தகைய சுகங்களை அனுபவிக்க வேண்டுமென்று ஆசைகொண்டேனோ, அவற்றையெல்

லாம் அனுபவித்தாய்விட்டது. இரத்தினபுரி இராஜ மாளிகையிலேயே நான் நடுநாயகமாய் விளங்கிவிட்டேன். அவ்வளவு பெரிய நகரில் என்னைவிட ரூபலாவண்யமுடையவர் எவருமில்லையென்னும் புகழும் பெற்றேன். நவீன நாகரீகப்படி இவ்வுலக வாழ்க்கையில் அனுபவிக்கக்கூடிய இன்பங்களையெல்லாம் அனுபவித்து அவற்றினிடம் வெறுப்பும் கொண்டுவிட்டேன். ஆகவே இனி எனக்கு அந்த டாம்பீக வாழ்க்கையும், ராஜமாளிகையும் வேண்டவே வேண்டாம். என்னை மணந்து கொண்ட பிரபு நல்ல இனிய குணாதிசயங்களை யுடையவர். என்னிடம் அதிக அன்பும் ஆர்வமும் உண்டு. அவரும் என்னைப்போலவே இனி ஆபாசம் நிரம்பிய நகர வாழ்க்கையைவிட்டு நாட்டுப்புறத்தில் எளிய வாழ்வு பரிசுத்தமாக வாழவிரும்புவாரென்றே நிச்சயமாக நம்புகிறேன். ஏதோ எங்களுக்கென்று ஒரு அந்தஸ்தும் தக்கசொத்தும் கிடைத்துவிட்டது. அதுவே எங்கள் வாழ்க்கைக்குப் போதுமானது. என் மனமும் பல தொல்லைகளிலிருந்து விடுதலைபெற்று நிம்மதியடைந்திருக்கிறது. அப்போதிருந்த நிலைமையைவிட இப்போது தான் நான் அதிக சந்தோஷமுடையவளாக இருக்கிறேன். கோமளம்! என் வாழ்க்கையில் பெரிய மாறுதலை ஏற்படுத்திய இந்நாள் என் சரித்திரத்தில் ஒரு முக்கியநாளாகும். இன்றுதான் உன் மூத்தசகோதரி உனக்குக் கிடைத்தாள். அதுமட்டுமா? இன்று நான் நமக்கென உயர்ந்த குணாதிசயங்களையும் பெருந்தன்மையையுமுடைய ஒரு சகோதாரைச் சம்பாதித்து அழைத்து வந்திருக்கிறேன். நமது பிறவியின் இரகசியமும் இன்று வெளியாகப்போகிறது. ஆதலின் இந்த தினம் மிக்க விசேஷமான நாளாகும்.

கோமள:—ஆம், இன்று நமது குடும்ப சரித்திரத்திலேயே ஒரு முக்கியநாள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் நீ மட்டும் இன்றுமுதல் உன் உறுதி மொழியில் அதிக கவனம்செலுத்தி நவீன நாகரீகவாழ்க்கையை மறந்து எளிய குடும்பவாழ்க்கையை நடத்த ஆரம்பித்துவிட்டால் நான் இன்னும் அதிக சந்தோஷமடைவேன்.

கற்ப:—என் தீர்மானம் முடிவான தீர்மானமே. உன்னை விரைவில் விவாகம் செய்து கொள்ளப்போகும் அந்த கண்ணிய புருஷன், உத்தம குணங்களையுடையோன் என்னைத் தன் சகோதரியாகக்கொள்ள இசைவானோ?

கோமள:—அதில் சந்தேகமென்ன? கட்டாயம் சம்மதிப்பார். அவர் விஷயத்தில் நீ இப்படிப்பட்ட சந்தேகத்தைக் கொள்வதும் தவறு. அவருடைய பெருந்தன்மையை அறியாதவர்களன்றோ அவ்வாறு சந்தேகப்படவேண்டும்.

கற்ப:—ஆம்; அவன் உனக்காக எதையும் செய்வான் என்பது எனக்குத்தெரியும். நீ என்னுடைய உறுதியான தீர்மானங்களையெல்லாம் அவனிடம் சொல்லி நான் பாவமன்னிப்புத் தேடிவிட்டதாக அறிவித்தால் அவன் உன்னை நம்புவதுடன் என்னிடமும் அபிமானத்துடனும் ஆதரவுடனும் நடந்துகொள்வான் என்பதில் சந்தேகமில்லை. என் மனதில் ஒரு இரகசியம் இருக்கிறது. ஆனால் நான் இப்போது அதைச் சொல்லவில்லை. அவனே எது தக்க சமயமென்று நினைக்கிறானோ அப்போது தன் உண்மைப்பெயர் என்ன என்பதையும், தான் ஏன் இவ்வாறு மாறுபெயருடன் இருக்கிறானென்பதையும் உன்னிடம் விவரமாக அறிவிப்பான்.

கோமள:—ஆம்; அதுதான் அவருடைய இரகசியமாக இருக்கிறது. அது அவருடைய வாயிலிருந்தே என்னிடம் வெளிவரட்டு மென்றுதான் நானும் இருக்கிறேன். அதை உடனே அறிந்துகொண்டுவிட வேண்டுமென்னும் மிதமிஞ்சிய ஆவல் எனக்குக் கிடையாது. சமூக வாழ்வில் அவருடைய அந்தஸ்து யாதாயினும் அதைப் பற்றி எனக்குக் கவலையில்லை. உண்மையான காதல் பரஸ்பரம் இருவரிடையே தோன்றிவிடுமாயின் அது எக்காரணங்கொண்டும் சிதைவுறாது என்பதை எனக்குப் போதித்தவர் அவரே.

கந்தபுரியிலுள்ள பவுண்டன் ஓட்டலில் தங்கியிருந்த மீனும்பாளை அழைத்துவரும்படி அனுப்பப்பட்டிருந்த ஆள் அவளை அழைத்துக்கொண்டு வரும்வரை இவ்விரு சகோதரிகளும் இவ்வாறு சம்பாஷித்துக்கொண்டிருந்தார்கள். மீனும்பாள் வந்ததும் கோமளவல்லியைத் தழுவிக்கொண்டு நாம் இருவரும் ஒன்றுவிட்ட சகோதரிகளல்லவா? என்றுள். கோமளத்தின் சகோதரி கற்பகவல்லியே மதனவல்லியாக இரத்தினபுரியில் வாழ்ந்துவந்தாள் என்பதைக் கேட்டமாத்திரத்தில் மீனும்பாளுக்கும் அதிக ஆச்சரியமும் திக்பிரமையும் உண்டாய்விட்டது. மேலும் மதுரைநாயகம்பிரபு அச்சகோதரிகள் இருவரின் சகோதர முறையில் இருக்கிறுர் என்பதையறிந்து இன்னும் சந்தோஷப்பட்டாள். சுருங்கக் கூறுமிடத்து அக்குடும்பத்தைச் சேர்ந்த அனைவருமே அங்கு ஒன்றுகக் கூடிவிட்டார்கள். அதுவும் எதிர்பாராத முறையில் தெய்வச்செயலாக, என்றே கூறவேண்டும். பலரும் ஒன்றுகக் கூடியதால் அவரவருக்கும் ஏற்பட்ட பல கஷ்டநஷ்டங்கள் அவர்களுக்குத் துயரத்தை அளித்ததென்றுலும் அனைவரும் ஒன்றுசேர்ந்த ஆனந்தம் அவர்களை அத்துயரத்தை மறக்கச்செய்து சந்தோஷத்தை யளித்தது.

கற்பகவல்லி, தன் சகோதரியை விட்டுச் சிறிதும் பிரிய லாகாதென்னும் எண்ணத்துடன் அவ்வீட்டிலேயே தானும் வசிப்பதெனத் தீர்மானித்தாள். மாகதம்மாள், மீனும்பாள், மதுரைநாயகம்பிரபு ஆகியோர் கந்தபுரியிலுள்ள பவுண்டன் ஓட்டலுக்குச் சென்றனர். லீலாவதி மடாலயத்துக்கருகி லுள்ள ஏழை விவசாயியின் வீட்டில் வழக்கப்படி தங்கப் போய்விட்டாள். மறுநாள் கற்பகவல்லி அனேக மணி கோரத் தைக் கடிதம் எழுதுவதிலேயே போக்கினள். அவள் இள வாசருக்குச் சுருக்கமாக ஒரு கடிதம் எழுதி, அதில் தான் அவரிடமிருந்து விலகியிற்க நிரந்தரமான விடைபெறுவதாக வும், அவரிடமிருந்து தான் பெற்ற பல நன்மைகளுக்காகவும், சௌகரியங்களுக்காகவும், அன்பின் செயல்களுக்காகவும் அவருக்கு மனப்பூர்வமான வந்தனம் செலுத்துவதாகவும், இனி அவர் தன்னை எதிர்பார்ப்பதில் பிரயோசனமில்லையென் றும், தான் ஏன் இவ்வாறு திடீரென்று ஆடம்பர வாழ்க் கையையெல்லாம் விட்டுவிட்டு எளியவாழ்வை மேற்கொண் டாள் என்பதன் காரணத்தைத் தன் கணவன் செல்லப்பப் பிரபு விளக்குவாரென்றும் அறிவித்திருந்தாள். பத்மாவதி யம்மாளுக்கு ஒரு கடிதம் எழுதித் தான் அம்மாவின் ஆலோ சனையைக் கேட்டு மேற்போட்டுக்கொண்ட நாடகத்தை நன்கு எல்லாரும் திருப்தியும் பலனும் அடையும்படி நடித் துக் காட்டிவிட்டதாகவும் ஆனால் அந்நாடகம் ஒருவாறு முடி வடைந்து விட்டதென்றும், இனி தன்னை யாரும் எதிர் பார்க்க முடியாதென்றும், மற்ற விவரங்களைச் செல்லப்பப் பிரபு அறிவிப்பாரென்றும் தெரிவித்துவிட்டாள்.

பின்னர் அவள் தன் கணவன் செல்லப்பப்பிரபுவுக்கு ஒரு நீண்ட கடிதம் எழுதினள். அதில் அவள் தனக்கும் மதுரைநாயகம் பிரபுவுக்கும் சந்திப்பு ஏற்பட்ட பின்னர் தன் மனம் எவ்வாறு மாறியதென்பதை நன்கு விளக்கியதோடு,

இதற்குமுன் பல சந்தர்ப்பங்களில் அவர்கள் கணவனும் மனைவியும் மட்டும் தனியே இருந்தபோது ஆடம்பாமும் டாக்பீகமும் அசத்தியமும் அபரிசுத்தமும் நிரம்பிய இந்நாக ரீக வாழ்வைவிட கணவனும் மனைவியும் பரிசுத்தமாக வெளி யூரில் எங்கேனும் எளியவாழ்வு வாழ்வது சிலாக்கியமென்று பரஸ்பரம் பேசிக்கொண்டதை ஞாபகப்படுத்தியதுடன் செல் லப்பப்பிரபுவும் இளவாசரிடம் செய்யும் ஊழியத்தை விட்டு விட்டு இயற்கையோடியைந்த இன்பவாழ்க்கையைக் கந்த புரியில் அனுபவிப்பதற்காக உடனே தன் சொத்துகளுடன் வந்துவிடும்படி பல ஆதாரங்களையும் மேற்கோள்களையும் காட்டி வற்புறுத்தி இருந்தாள். மேலும் செல்லப்பப்பிரபு வுக்கு இருக்கும் கடனைப்பற்றி அவர் வருந்தத் தேவையில்லை யென்றும், தன் ஒன்றுவிட்ட சகோதானுகிய மதுரைநாயகம் பிரபு எல்லாக் கடன்களையும் ஏற்றுக்கொண்டு தீர்த்துவிடுவா னென்றும், அதைப்பற்றி அவனிடம் பிரஸ்தாபித்தபோது சந்தோஷத்துடனும் தாராள நோக்கத்துடனும் அதைத் தீர்க்க ஒப்புக்கொண்டதாகவும், ஆகவே எவ்வித யோசனையு மின்றி கந்தபுரிக்கு வந்துவிட்டால் எதிர் காலத்தைப்பற்றிய திட்டம் போடலாமென்றும், தான் இளவாசருக்கும் பத்மா வதியம்மாளுக்கும் சுருக்கமாகக் கடிதம் எழுதியிருப்பதாக வும், அவர்களுக்கு விவரத்தை அறிவித்துவிட வேண்டுமென் றும் எழுதியிருந்தாள்.

அன்று அக்கடிதங்கள் எழுதிமுடிக்க அதிகநேரமாய் விட்டதால் மாலைக்குமேல் குடும்பத்தினர் அனைவரும் ஒன் ருகச் சேர்ந்து நடந்துபோன பழைய சங்கதிகளைப் பற்றியும், இனி எதிர்காலத்தில் நடக்கவேண்டிய விஷயங்களைப்பற்றியும் சம்பாஷித்துச் சந்தோஷமாகக் காலங்கழித்தனர். அதற்கு மறுநாள் மாகதவல்லியும், மீனம்பாளும் அவர்களிடம் விடை

பெற்றுக்கொண்டு கடல்கடந்து பரிதிபுரம் செல்வதற்காகத் துறைமுக நகருக்குச் சென்றனர். மதுரைநாயகம் பிரபு கற்பகவல்லி கொடுத்த கடிதங்களையெல்லாம் எடுத்துக்கொண்டு அவர்களிடம் விடைபெற்று இரத்தினபுரிக்குச் சென்றான். லீலாவதி அன்று அங்குவந்து சிறிதுநேரம் இருந்துவிட்டுப் போய்விட்டாள்.

சகோதரிகளின் அத்தை என்று கருதப்பட்ட ஆனால் உண்மையில் அவர்களின் தாயின் மூத்தசகோதரியாகிய சுந்தரம்மாள் என்னும் மாறுபெயரையுடைய கமலம் தன் பாரிசநோயினின்றும் இறைவனருளால் திடீரென்று எதிர்பாராத வண்ணம் விடுதலையடைந்து சொஸ்தமடைந்தாள். தன் சகோதரியின் புத்திரிகளாகிய தன்னால் அன்புடன் வளர்க்கப்பட்ட கற்பகவல்லியும், கோமளவல்லியும் தான் நோய் வாய்ப்பட்டுக்கிடந்த மூன்றுவருஷ காலத்துக்குள் அதிக அழகுடனும் கம்பீரத்துடனும் வசீகரத்தன்மையுடனும் வளர்ந்திருப்பதைக்கண்டு மகிழ்ச்சியடைந்தாள்.

இப்போது நாம் கந்தபுரியைவிட்டு நவீன நாகரீகத்திற் சிறந்து விளங்குவதும் பற்பல விஷயங்களை விளக்கப் பாக்கியிருக்கிறதுமான இத்தினபுரிக்குச் செல்லவேண்டும். ஏனெனின் நாம் இக்கதையை முடிப்பதற்குள்ளாக இரத்தினபுரியில் பல விஷயங்களை விளக்கிவிடவேண்டியது அவசியமாக இருக்கிறது.

169 - வது அத்தியாயம்

கந்தபுரியை விட்டுப் புறப்பட்ட நாம் இப்போது இரத்தினபுரியில் சுகசிங்கம்பிரபுவின் மாளிகைக்குச் செல்ல வேண்டும். அங்கே அவருடைய சகோதரரின் புத்திரியான தெய்வயானை, தானப்பன் அவளுக்கிழைத்த கொடுமையின் காரணமாக உயிர் துறக்கக்கூடிய அவ்வளவு தேக அசௌக்கியத்துடன் இருக்கிறாள். அவளது பரிதாப நிலைமையை உணர்ந்த சுகசிங்கம்பிரபு அந்நகரிலுள்ள பிரபல டாக்டர்கள் இருவரை வரவழைத்து அவள் நிலைமையைப் பரிசோதிக்கும்படி சொல்லியிருந்தார். அவர்களும் எல்லாரையும் வெளியே அனுப்பிவிட்டுத் தெய்வயானையின் நோயையும், அதன் நிலைமைகளையும் பரிசோதித்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் என்ன சொல்வார்களோ என்று தெரிந்துகொள்ள சுகசிங்கம்பிரபு மிக்க ஆவலுடன் வேறொரு அறையில் காத்திருந்தார்.

ஆனால் நவீன டாக்டர்கள் லேசானவர்களா? அவர்களில் பலர் உண்மையுடன் நோயாளிகளின் நிலைமையையும் சௌகரியத்தையும் உத்தேசித்து சிகிச்சை செய்து சௌக்யப் படுத்துகின்றனர். வேறு பலர் நோயாளிகள் பணக்காரர்கள் என்று தெரிந்தால் எப்படியாவது அவர்களிடமிருந்து அதிக பணத்தைப்பிடுங்க வழி பார்ப்பது சகஜமாயிருக்கிறது. தனிப்பட்ட செல்வர்கள் பலரும் தங்கள் செல்வத்தை நாட்டின் நலத்துக்கும் ஏழைகளின் நன்மைக்கும் பயன்படுத்த வேண்டுமென்று சிறிதும் கருதாமல் தங்கள் சுயநலத்தையே பெரிதாகக் கருதி தாங்களோ தங்கள் குடும்பத்தாரோ மட்டும் இன்பமாகக் காலங்கழிக்க விரும்புகின்றபடியால் அப்

படிப்பட்டவர்களுடைய பணம் டாக்டர்கள் முதலிய அநாவசிய செலவுகளுக்குப் பிரயோசனப்படுவதில் ஆச்சர்யமொன்றுமில்லை. ஆனால் பணக்காரர்களிட மிருந்து அதிக பணத்தை வாங்கும் டாக்டர் முதலியவர்கள் ஏழைகளிடம் கருணையுடன் நடந்துகொண்டால் நலமாக இருக்கும். இவ்வாறே தெய்வயானை தேகஸ்திதியைப்பற்றிப் பரிசோதிக்க வந்த டாக்டர்கள் இருவரும் சுகசிங்கம் பிரபுவினிடமிருந்து எவ்வளவு அதிகமான பணத்தை வாங்கமுடியுமோ அவ்வளவையும் வாங்குவதற்கு என்னவழி என்று யோசித்துக்கொண்டிருந்தார்கள். அந்த அறையில் மரியாதைக்காக டாக்டர்களின் சிற்றுண்டிக்கென பல பழங்களும் பலகாரங்களும் பான வகைகளும் வைக்கப்பட்டிருந்தன. டாக்டர்கள் அவற்றை அருந்திக்கொண்டே நகரில் நடக்கும் பல விஷயங்களைப்பற்றிப் பலவாறு பேசிக்கொண்டு தெய்வயானையையும் கவனித்துக்கொண் டிருந்தார்கள். அவர்கள் ஏதேதோ பேசிக்கொண்டிருந்தபோது ஒவ்வொருவரும் தான் மட்டுமே மிகச் சமர்த்தரென்றும், பலபேருடைய சினேகம் பெற்றிருப்பதாகவும் கூறிக்கொண்டார்கள்.

அவர்கள் அவ்வாறு சம்பாஷித்துக்கொண்டிருக்கையில் தெய்வயானை ஸ்மரணைதப்பி யிருந்ததால் ஜுரத்தின் வேகத்தில் தனக்கும் தெரியாமல் ஏதேதோ உளறிக் கொண்டாள். உடனே டாக்டர்கள் அதை மிக ஊக்கத்துடன் கவனித்தனர். அவள் அந்த உளறலில் இளவரசரின் பெயரையும், தன்னால் ஒருவர் இறந்துபோய் அவருடைய பிரேதம் தன் கணவனால் இரகசியமாகப் புதைக்கப்பட்டதையும், தான் கணவனுக்குத் துரோகமாக நடந்துகொண்டதையும், தானப்பனுடைய தொல்லையைப்பற்றியும் ஏதேதோ ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாமல் சில வார்த்தைகளைச் சொல்லிவிட்டாள்.

அதன் விவரம்பூராவும் அவர்களுக்குத் தெரியவில்லையென்று ம் அதைக்கொண்டே சுகசிங்கம்பிரபுவை மிரட்டி அதிக பணம் வாங்க முயன்றார்கள்.

அப்போது டாக்டர்களில் ஒருவர், "நாம் இவ்வறையில் புகுந்து நெடுநேரமாகிவிடவில்லையா? சுகசிங்கம்பிரபு நம்முடைய முடிவைத் தெரிந்துகொள்ள மிக ஆவலுடன் காத்திருப்பார். ஆதலின் என்ன யோசனை செய்திருக்கிறீர்?" என்று கேட்டார். அதற்கு மற்றவர், "ஏன்? நமக்குத்தான் ஒருவிஷயம் அகப்பட்டுவிட்டதே. அம்மாது சொன்னதெல்லாம் நமக்குத் தெரியாவிட்டாலும் இளவரசர் என்னும் பெயரைப் பலமுறை உச்சரித்தாளல்லவா? இம்மாதிரி பிரபுக்களின் குடும்பத்தைச் சேர்ந்த மாதர்கள் இக்காலத்தில் கற்புடன் உத்தமிகளாக இருப்பது வழக்கமில்லை. அவர்களிடம் தான் ஒழுக்கக்கேடுகள் நிறைந்திருக்கும். ஆதலின் சுகசிங்கம்பிரபு வந்ததும் அவருடைய சகோதரியின் புத்திரியினுடைய மானம் எங்கள் கையிலிருப்பதாகவும் பணம் கொடுக்கும் விஷயத்தில் மிக்க தாராளமாக நடந்துகொண்டாலொழிய அவை வெளிப்படுத்தப்படுமென்றும் பயமுறுத்தினால் பணம் வந்துவிடுகிறது. ஆகவே மணியடித்து பிரபுவை வரவழைப்போம்" என்று சமாதானம் கூறினர்.

அவர்களிருவரும் இவ்வாறு பேசிக்கொண்ட பிறகு உடனே மணியடித்துவிட்டு அந்த அறையின் ஜன்னலருகில் சென்று இருவரும் ஒருகாலை ஜன்னல் படியின்மீதும், மற்றொருகாலைத் தரையிலும் வைத்துக்கொண்டு எதிர் எதிரில் நின்றுகொண்டு ஒருவருடைய கோட் பொத்தானை மற்றவர் பிடித்துக்கொண்ட வண்ணம், ஏதோ அதிகம் சிந்தனையில் மூழ்கியிருப்பதுபோல் பேசிக்கொண்டிருந்தார்கள். மணியடித்த சத்தம்கேட்டதும் டாக்டர்கள் என்ன சொல்வார்

களோ அதைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்னும் மிக ஆவலுடன் சுகசிங்கம்பிரபு அவ்வறைக்கு ஓடோடியும் வந்தார். அவர் வந்ததையும் அறியாதவர்போல் டாக்டர்கள் இருவரும் தங்கள் தலையை அசைத்துக்கொண்டே ஆழ்ந்த சிந்தனையிலிருப்பதுபோல் சிறிதுநேரம் பாவனை செய்துவிட்டு உடனே ஒருவர், "ஓ, இதோ பிரபு வந்திருக்கிறாரே" என்றார்.

உடனே சுகசிங்கம்பிரபு மிக ஆவசரத்துடன், "கனவான்களே! என்னிடம் என்ன சங்கதி சொல்லப்போகிறீர்கள்? என் சகோதரர் புத்திரியின் தேகநிலைமை எப்படி இருக்கிறது?" என்று கேட்டார். அப்போது டாக்டர்களில் ஒருவர், "ஐயா, இப்போது உமது சகோதரர் புத்திரியிடம் சதா இருந்து அம்மாதின் சௌகரியங்களைக் கவனித்து வரும் தாதியையும், வேலைக்காரியையும் நீங்கள் உறுதியாக நம்ப முடியுமா?" என்று வினவினர்.

டாக்டரின் கேள்வியின் மர்மத்தை உணரமுடியாத சுகசிங்கம்பிரபு அவர்களால் ஏதேனும் ஆபத்துவருமோ என நினைத்து திக்பிரமையுடன் டாக்டர்களைப் பார்த்து, "ஏன் அவ்வாறு கேட்கிறீர்கள்? எனக்கு விஷயம் ஒன்றும் விளங்கவில்லையே" என்று கேட்டார். அதற்கு அந்த டாக்டர், "ஐயா! பிரபுவே, இதில் விசேஷமிருக்கிறது. ஜுரத்தின் போது ஸ்மரணை தப்பி உளறுவதுண்டல்லவா? அப்படிப்பட்ட உளறல் சம்பந்தமாக நன்றாக ஆராய்ச்சி செய்தவர்கள், அதில் எது உண்மையாகவே இருக்கவேண்டும் என்பதைக் கண்டுபிடித்துவிடுவார்கள். அத்தகைய தேர்ச்சி பெற்றவர் தான் எனது நண்பராகிய மற்றொரு டாக்டர்" என்று கூறினார்.

அதற்கு சுகசிங்கம்பிரபு, "அப்படியானால் எனது சகோதரர் புதல்வி தன் உளறலில் ஏதேனும் உண்மையான இரகசியத்தை வெளியிட்டுவிடுகிறாள் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?" என்று கேட்டார். அப்போது டாக்டர், "ஆம்; உண்மையைக் கூறவேண்டுமாயின் நாங்கள் கூறுவது அது தான். அம்மாது ஜுரத்தின் வேகத்தில் உளறும்போது பல இரகசியங்களை வெளியிடுகிறாள். ஆதலால் தாதியும், வேலைக்காரியும் அதைக் கேட்டிருந்து பிறகு வெளியில் சொல்லாமல் இருக்கும்படி பார்த்துக்கொள்ளவேண்டும். பிரபுவே பணத்தாலாகாத காரியமும் ஒன்று இருக்கிறதோ? பணமென்றால் பிணமும் வாயைத்திறக்குமல்லவா? பணத்தைக் கொடுத்து அவர்களைச் சரிப்படுத்தி விடுங்கள்," என்று யோசனை கூறினர்.

அந்த யோசனையைக் கேட்ட சுகசிங்கம்பிரபு, "ஆ, அப்படியா? என் வீட்டு வேலைக்காரி விஷயத்தில் எனக்குச் சிறிதும் சந்தேகமில்லை. அவள் எப்படிப்பட்ட இரகசியமாயினும் வெளிவிடமாட்டாள். தாதியைத்தான் சரிப்படுத்த வேண்டும். நீங்கள் யோசனை கூறியபடி அவளுக்கு நிறையப் பணம் கொடுத்துவிட்டால் அவளும் வாயைமூடிக்கொண்டு கிடக்கப்போகிறாள். உங்களைப்பற்றிக் கூறவேண்டியதேயில்லை. டாக்டர் தொழில் செய்பவர்களிடம் எவ்வளவோ ஜனங்களுடைய பல ரகசியங்களெல்லாம் வெளியாகும். அவற்றை அவர்கள் வெளியிடாமல் இருப்பதுதான் அவர்களுடைய தொழிலுக்குக் கௌரவம் தரும். ஆதலின் நீங்கள் உங்கள் தொழில் முறைப்படி இப்போது ஏதேனும் இரகசியம் வெளியாயிருந்தால் அதை வெளியிடமாட்டீர்களென்று நம்புகிறேன்," என்று கூறிமுடித்தார்.

அப்போது இரு டாக்டர்களும் ஒருவருக்குப்பின் ஒருவராக "ஆஹா, அதில் என்ன ஆட்சேபம்? நாங்கள் எங்கள்

தொழில் முறைப்படி இப்படிப்பட்ட விஷயங்களை யெல்லாம் வெளியிடத்தான் மாட்டோம். ஆயினும் இரகசியம் எங்களுக்குத் தெரிந்திருக்கிறது என்னும் அச்சம் தங்களைப்போன்றவர்களுக்கு இருக்குமல்லவா?" என்று மிக சாதுர்யத்துடன் பேசினர். அதை ஒருவாறு உணர்ந்துகொண்ட சுகசிங்கம் பிரபு பக்கத்து அறைக்குச்சென்று நூறுபவுன் பெறுமான நோட்டுகள் இரண்டைக் கொண்டுவந்து ஒவ்வொரு டாக்டருக்கும் ஒவ்வொரு நோட்டுவீதம் கொடுத்துவிட்டு, "நான் உங்கள்பால் நம்பிக்கை வைக்கிறேன். நீங்கள் கௌரவமாக நடந்துகொள்வீர்கள் என்று நம்புகிறேன்" என்று கூறினர்.

பெருந்தொகையைக்கண்ட டாக்டர்கள் மிக்க சந்தோஷமடைந்து தாங்கள் ஒருபோதும் இரகசியத்தை வெளியிடுவதில்லை என உறுதிகூறி தெய்வயானை மிக ஆபத்தான நிலைமையில் இருப்பதாகவும், மிகவும் கவனத்துடன் அம்மாளைக் கவனிக்கவேண்டுமென்றும், தாங்கள் நாள் ஒன்றுக்கு மூன்றுமுறை வந்து பார்த்துவிட்டுப்போவதாகவும், அவசாமாக அவர்களுடைய உதவி தேவைப்பட்டால் ஆளை அனுப்பினுல் வருவதாகவும் அறிவித்து சுகசிங்கம்பிரபுவுக்கு வந்தனம் செலுத்திவிட்டுச் சென்றனர்.

டாக்டர்கள் சென்றபின்னர், சுகசிங்கம்பிரபு மிக துக்கத்துடன் தெய்வயானையின் படுக்கையினருகில் சென்று பார்த்தார். அவள் நன்ருக அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தாள். ஆகவே அவளை எழுப்ப மனமின்றி அவளே விழித்துக்கொள்ளும்போது அவளுடன் பேசவேண்டுமென்று நினைத்து அவள் எப்போது விழிப்பாளோ என்னும் ஆவலுடன் அவளது படுக்கையினருகில் உட்கார்ந்து கொண்டிருந்தார். தெய்வயானையின் வேலைக்காரியும் தாதியும்கூட

அதே அறையில் ஏதோ தங்கள் வேலையைக் கவனித்துக் கொண்டிருந்தார்கள். அங்கிருந்த ஒரு மேஜையின்மீது பல மருந்து புட்டிகளும், இதரவைத்திய சாமான்களும் இருந்த தால் அவ்வறையில் அதிக நோயுடன் வருந்தும் ஒருவர் இருக்கிறார் என்பதையே அவை ருஜுப்பித்தன.

சுகசிங்கம்பிரபு, தெய்வயானையின் படுக்கையினருகில் உட்கார்ந்து, தூங்கிக்கொண்டிருக்கும் அவளது முகத்தைக் கவனித்தார். ஆ, என்ன மாறுதல்! உண்மையிலேயே அவரது மனம் அனலிலிட்ட மெழுகுபோல் உருகிற்று. தெய்வயானையின் அழகே அழகு. அவள் இன்னவளென்று தெரியாதமுன் இளவரசரும் சுகசிங்கம்பிரபுவும் அவள் அழகைக் கண்டு மோகித்து அவள்மீது காதல்கொள்ளவில்லையா? அவ்வளவு ரூபலாவண்யத்துடன் இருந்த அவளது தோற்றம் மாறிச் சவம் கிடப்பதுபோல் இருக்கவே பிரபு மனங்கலங்கினார். கொலைகார தானப்பன் அவளை இம்சித்துச் சொற்ப தினங்களே ஆகியிருந்தும் நீண்டகாலமாக அந்த விசனத்துடனும் அதிர்ச்சியுடனும் கஷ்டப்படுவதுபோல் காணப்பட்டாள். அவளது முகத்தில் ஒருவித விகாரம் தோன்றிவிட்டது. அழகிய உறுப்புக்களெல்லாம் உருக்குலைந்துபோயிருந்தன. பவழம்போன்ற அவளுடைய உதடுகள் கருத்துப்போய் ஒட்டிக்கொண்டிருந்தன. இவைகளெல்லாம் ஒரு சில தினங்களுக்குள் ஏற்பட்ட விசித்திர மாறுதல்கள்!

அந்த அறையே ஏதோ மரணம் சம்பவித்த அறைபோல் தோற்றமுடையதாயிருந்தது. சுகசிங்கம்பிரபு அவள் படுக்கையினருகில் உட்கார்ந்து யோசித்துக்கொண்டிருந்த போது பலவகை எண்ணங்கள் அவர் மனதில் உதித்தன. அவர் இதற்குமுன் ஒருமுறை தனியாக தெய்வயானையைச் சந்தித்து அவள் மனதிலுள்ள தயக்கங்களை விவரித்துக் கூறும்

படி கேட்டபோது அவள் தனக்கேற்பட்ட கவலையினாலும் அச்சத்தாலும் தானப்பன் சம்பந்தமாய்ச் சொல்லவேண்டிய எல்லா விஷயங்களையும் ஒன்றுகூடவிடாமல் சொல்லிவிட்டு அத் தானப்பனே தனக்கு எமனாக வந்து சேர்ந்திருக்கிறான் என்று அறிவித்திருந்தாள். ஆதலால், அவள் தேக அசௌக்கியத்தினின்றும் டாக்டர்களுடைய உதவியால் சொஸ்தமடைந்தாலும், அவள் தனக்கேற்பட்டுள்ள மனக்கவலையாலும் அச்சத்தாலும் சதா வருந்திக்கொண்டிருப்பாளே யொழிய இன்பமாக வாழமுடியா தல்லவா என்று சிந்தித்தார். அப்போது சுகசிங்கம்பிரபுவின் மனதில் ஒரு விஷயம் தோன்றியது. அதாவது தெய்வயானையின் கணவனான தேவராயன் தூக்குமேடையில் இறந்துபோனதும் அவளை இந்நகர வாழ்வில் வசிக்கவிடாமல் கிராமத்துக்கு அனுப்பி பரிசுத்தமான விதவையின் வாழ்க்கையை அனுஷ்டிக்கும்படி செய்திருந்தால் இவ்வளவு தொல்லைகளும் அபகீர்த்திகளும், மனக்கவலைகளும் ஏற்பட்டிராதல்லவா என்று நினைத்தார். அவர் அப்படிச் செய்யாமல் இரத்தினபுரியிலுள்ள தனது மாளிகையில், காமவிகாரத்தை உண்டாக்கக்கூடிய படங்களும், மற்றும் இதர வசதிகளும் நிரம்பிய தன் மாளிகையில், வைத்துக்கொண்டு நகரவாழ்வின் இன்பங்களையெல்லாம் அனுபவிக்கும்படி அனுமதித்ததுடன், தானே அவளைத் தன் காமச் செயல்களுக்கு ஒரு கருவியாக உபயோகித்துக்கொண்டு, கற்பிற்சிறந்த உத்தம கோமளவல்லியைக் கெடுக்க நினைத்ததில் தெய்வயானையின் துணையையும் கொண்டதால் அவளும் அத்தகைய தீய எண்ணங்களால் தூண்டப்பட்டுப் பல கெட்ட நடத்தைகளில் இறங்கி இறுதியில் சவம்போல் தன் மாளிகையின் ஒரு அறையிலேயே அவள் கிடப்பதைக் காணும்படி நேரிட்டதே என்றும் நினைத்துத் துக்கித்தார்.

நமது சுகசிங்கம்பிரபு மேற்கண்டவாறு நினைத்ததில் தவறு எதுமில்லை. உண்மையிலேயே சமய சந்தர்ப்பங்களும் அண்டை அயலில் நடக்கும் காரியங்களும், நடத்தும் வாழ்க்கை ரீதியுமே ஒருவரைக் கெடுத்துவிடுகிறது, அல்லது நல்ல நிலைமையில் வைக்கிறது என்பதில் ஆட்சேபமேயில்லை. தெய்வயானை விதவையாதலின் நாமும் நம் தேசத்தில் தற்காலத்தில் எங்கும் நிறைந்து காணப்படும் பாலிய விதவைகளைப்பற்றி நமது அனுபவத்தில் காணும் சில முக்கிய விஷயங்களை நேயர்களுக்கு அறிவிக்க விரும்புகின்றோம். தக்க யௌவனம் வாய்ந்த விதவைகளை ஒழுக்கத்திலும், கடவுள் பக்தியிலும் சிறந்த பெரியார்களுடன் வாழச்செய்தால் அவர்களுக்கு இவ்வுலகத்தில் காணப்படும் தீயநெறிகள் ஒன்றும் தெரியாமல் அவர்கள் பரிசுத்த வாழ்வையே நடத்துவார்கள். அவர்களுடைய ஆகாரமும், நடை உடை பாவனைகளும், எளிய வாழ்வையும் பரிசுத்தத்தன்மையையும் தரக்கூடியதாக இருக்கவேண்டும். அவர்களைச் சுற்றிலும் நடைபெறும் காரியங்களும் அவர்களுக்குத் தீய எண்ணத்தில் மனம் செல்லாதபடி தடுக்கக்கூடியதாக இருக்கவேண்டும். ஒழுக்கத்தையும், பக்தியையும், நற்குணத்தையும் போதிக்கும் நூல்களை வாசிக்க வேண்டும். அல்லது வாசித்துக் காட்டவேண்டும். காலையில் படுக்கையைவிட்டு எழுந்ததுமுதல் இரவில் படுக்கப் போகும் வரையில் சதா ஏதேனும் நற்காரியங்களிலேயே ஈடுபட்டுச் சிறிதும் சோம்பேறித்தனமின்றியும், இதர பெண்களுடனே ஆண்களுடனே வீண்வம்பு பேச சந்தர்ப்பமின்றியும் வாழ்வு நடத்தவேண்டும். சுருங்கக் கூறுமிடத்து அவர்கள் காண்பதும், கேட்பதும், படிப்பதும், செய்வதும் எல்லாம் பரிசுத்தத்தன்மை வாய்ந்ததாகவே இருக்கவேண்டும். அப்போது அவர்கள் மனத்தூய்மை யுடையவர்களாய் எவ்வித கலங்கமுமின்றி, நல்ல வாழ்க்கையையே நடத்துவார்கள்.

உதாரணமாக கதையல்ல, உண்மையில் இப்போது நம் கண் எதிரே நடப்பதைக் கவனிப்போம். மிக்க யௌவனமும் அழகும் வாய்ந்த ஆங்கிலமாது மிஸ். சிலேட் என்பார் பெரிய பணக்காரரின் குமாரியாக இருந்தும், இளம் வயதினராய் இருந்தும், சொற்ப வருஷங்களுக்குமுன் இவ்வுலகில் அனுபவிக்கக் கூடிய எல்லா இன்பங்களையும் அனுபவித்தவராய் இருந்தும் ஏகோ இறைவன் கட்டளையால் அவருக்கு நமது தேசத்தின் மாபெரும் தலைவர், உலகம் போற்றும் உத்தமர் மகாத்மா காந்திபடிகளிடம் மதிப்பு ஏற்படவும், அவருடன் அவரது சிஷ்யையாக வாழவேண்டுமென்று தோன்றவும் அவர் இந்தியாவுக்கு வந்து மகாத்மாவினிடம் தனது விருப்பத்தைத் தெரிவிக்க அவரும் அப்படியே இருக்கலாமெனக் கூறித் தமது ஆசிரமத்தில் வைத்துக்கொண்டார். ஆனல் என்ன செய்தார்? இவ்வுலக சம்பந்தமான இச்சைகள் தோன்ருமலிருக்கும் பொருட்டு அம்மாது விதவையின் வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டுமென்றுகூறி, அம்மாது தலையை மொட்டை யடித்துக்கொள்ள வேண்டுமென்றும், இராஜச, தாமச குணங்களைத் தாக்கூடிய ஆகார வகைகளை விட்டு சாத்விகத்தையே தாக்கூடிய ஆசிரம விதிகளுக்குட்பட்ட ஆகாரத்தையே உட்கொள்ள வேண்டுமென்றும், இரவில் மிருதுவான படுக்கையை உபயோகியாமல் பாய்மீதே ஒரு சிறு தலையணையுடன் படுக்கவேண்டுமென்றும் கட்டளையிட்டார். அம்மாதும் அதற்கெல்லாம் இசைந்து உலகம் ஆச்சர்யப்படத்தக்க வகையில் பரிசுத்த வாழ்வை நடத்திவருகிருர். மகாத்மா காந்தியைப்போன்ற உத்தமர்களுடன் வாழ்கிறவர்கள் எவ்வாறு தீய எண்ணங்களேனும் சிந்திக்கமுடியும்? இதுமட்டுமா? அம்மாது காந்தியடிகளைப்

போலவே வலுவில் வறுமையை ஏற்றுக்கொண்டவராதலால் தனக்குத் தன் தாயின்மூலம் கிடைக்கவேண்டிய பெருஞ் செல்வத்தையும் திரணமாக மதித்து வேண்டாமென்று புறக்கணித்துவிட்டார்.

ஆனால் நகரங்களில் வசிக்கும் நம்நாட்டு யௌவன விதவைகளின் வாழ்க்கை நிலையென்ன? பெரும்பாலோர் கூந்தல் களையாமல் நவீன ஆடை அலங்காரங்களால் தங்களை அழகு படுத்திக்கொள்கின்றனர். அவர்கள் உட்கொள்ளும் ஆகாரமும், நடை உடை பாவனைகளும் சாத்விகத்தை அறவேயொழித்து இராஜச, தாமசகுணங்களையே தாக்கூடியவையாயிருக்கின்றன. அதுமட்டுமா? அவர்கள் நாடகம், சினிமா முதலியவைகளைக் கண்டு களிக்கவும், கண்டவர்களால் எழுதப்பட்ட நல்லதும் கெட்டதுமான நாவல்களைப்படித்து ஆனந்திக்கவும் சிறிதும் பின்வாங்குவதில்லை. இன்னும் அவர்களைச் சுற்றிலும் நடக்கும் காரியங்களோ மிக ஆபாசமானவை. நடந்துசெல்ல இரண்டுகால்கள் போதாதென்று மூன்றுவது காலாக கைத்தடியை ஊன்றிநடக்கும் வயோதிகத் தன்மை வாய்ந்த தந்தை விதவையான தன் பெண்ணுக்குத் தெரிந்தே விபசாரியின் வீட்டுக்குச் செல்கிறார். அவளுடைய சகோதரர்களும் சகோதரிகளும் தங்கள் மனைவியருடனும், கணவன்மாருடனும் இன்பமாகக் காலங்கழிக்கின்றனர். விதவை யௌவன வயதுடையவள்தானே என நினைத்து அக்கம் பக்கத்திலுள்ள யோக்கியர்கள் அவள்மீது கண் போடுகின்றனர். இந்த நிலைமையில் விதவைகள் தீயசிந்தனை யற்றவர்களாய்ப் பரிசுத்தமான வாழ்க்கையை நடத்தமுடியுமென்று எப்படி எதிர்பார்க்கமுடியும்? ஆனால் சில உத்தமிகள் இவ்வளவு இடையூறுகளிடையேயும் பொறுமையுடன் பரிசுத்தமானவர்களாக இருக்கலாம். அப்படிப்பட்ட மாது சிரோன்மணிகளை உலகம் போற்றுமென்பதில் ஐயமில்லை. ஆனால் அவர்களும்

பலவிதமான உணர்ச்சியைப் பெற்று அவற்றைத் தங்கள் அறிவாலும் ஆற்றலாலும் அடக்கிக்கொண் டிருப்பதைவிட அத்தகைய உணர்ச்சியே உண்டாகாதபடி தடைசெய்வது உத்தமமல்லவா? என்பதே நமது கேள்வி. தனிப்பட்ட வித வைகள்மீதோ மற்றவர்மீதோ குற்றம் சுமத்துவதில் பய னில்லை. சமூகத்தலைவர்கள் அப்போதைக் கப்போது கால தேச வர்த்தமானங்களுக் கேற்ப சமூகத்தைத் திருத்தி அமைத்து சமூகவாழ்வில் எத்தகைய குற்றங் குறைகளும் இல்லாதபடி செய்யவேண்டும் என்பதே எமது வேண்டு கோள்.

நிற்க, சுகசிங்கம்பிரபுவைக் கவனிப்போம். அவர் தெய்வயானை விழித்துக்கொண்டால் அவளுடைய பழைய நடத்தையைப்பற்றி அவளைப் பலமாகக் கண்டிப்பதெனத் தீர்மானித்தார். அவர் இரண்டுமணி நேரமாகக் காத்திருந்தும் அவள் விழித்துக்கொள்ளாமையாலும், அவர் இரவில் சாப் பிடவேண்டிய வேளை வந்துவிட்டதாலும் அவ்வறையை விட் டுச் சமையலறைக்குச் சென்று பசிதீர உண்ட பின்னர், தெய்வயானையின் வேலைக்காரியிடம் சென்று எப்போது தெய்வயானை விழித்துக்கொள்கிறாளோ அப்போது தனக் குத் தெரிவிக்கும்படி சொல்லிவிட்டுத் தன் படுக்கை யறைக் குச்சென்றார்.

அன்றிரவு ஒன்பதுமணி சுமாருக்குத் தெய்வயானை விழித்துக்கொண்டாள். ஜுரம் நன்றாகவிட்டிருந்தது. ஆயி னும் பலஹீனம் அதிகம். உடனே அவளுக்கென டாக்டர் கொடுத்து விட்டுப்போன மருந்து கொடுக்கப்பட்டது. உடனே வேலைக்காரி சுகசிங்கம்பிரபுவுக்குச் சொல்லியனுப் பினாள். அவர் வந்ததும் தான் தனியாக தெய்வயானையுடன் பேசவேண்டுமென்றும் மற்றவர்கள் வெளியே போகலா

மென்றும் சொன்னர். அவர்கள் வெளியே சென்ற பின்னர் சுகசிங்கம்பிரபு தெய்வயானையின் அருகில் உட்கார்ந்து அவளுடைய கையைத் தன்கரத்தால் பிடித்துக்கொண்டு, "எனது அருமையுள்ள தெய்வயானை! நீ அதிக காயலாவாய் இருந்தாய். இப்போதும் நீ மிக்க தேக அசௌக்கியத்துடனேயே இருக்கிருய்'' என்று அனுதாபத்துடன் கூறினர்.

தெய்வயானை:—ஆம்; எனக்கு மாணமே சம்பவிக்கும் போலத் தோன்றுகிறது. அவ்வளவு அசௌக்கியமாக இருக்கிறேன்.

சுகசிங்கம்பிரபு:—அப்படி தைரியத்தையும் நம்பிக்கையையும் இழந்துபேசாதே. உன் மனதில் எப்படிப்பட்ட கவலை இருந்தாலும் அதை அறிந்துகொண்டு உன்னைச் சமாதானப்படுத்தி அக்கவலையைத் தீர்க்கும் எண்ணத்துடனேயே நான் இங்குவந்திருக்கிறேன். என்னிடத்தில் நீ எதையும் ஒளியாமல் பேசவேண்டுமென்னும் எண்ணாலேயே தாதியையும் வேலைக்காரியையும் கூட வெளியே அனுப்பிவிட்டேன். நீ தாராளமாக உன் மனத்திலுள்ள கவலையைத் தெரியப்படுத்தலாம்.

தெய்வ:—ஆ! எனது அன்புள்ள பெரிய தந்தையே! அப்படியானல் நான் நிச்சயமாகவே மாணத்தருவாயில் இருப்பதாக நீர் கருதுகிறீர்! உங்கள் பார்வையிலிருந்தே நீங்கள் அவ்வாறு கருதுவதாகவே நான் நினைக்கவேண்டியிருக்கிறது. ஒருகால் அந்த டாக்டர்கள் உங்களிடம் அவ்வாறு கூறினர்கள்போலும்! நானும் அப்படித்தான் நினைக்கிறேன். எனக்கு மாணகாலம் சமீபித்துவிட்டது. நான் என் ஜுரத்தில் என்னென்னமோ உளறுகிறேன் போலிருக்கிறது. அப்போது நான் ஏதேனும் இரகசியத்தையும் வெளியிட்டுவிடலாம். நான் அவ்வாறு எப்

போதோ வெளியிட்டுவிட்டதைத் தாங்கள் கேட்டுத் தான் என்னை அன்று அந்த இரகசியத்தைப்பற்றி விசாரித்தீர்கள் தாங்கள் கேட்டாலும் பாதகமில்லை. வேறு யாராவது கேட்டுவிட்டிருந்தால் என்ன செய்வது?

சுகசிங்:—தெய்வயானை! அதைப்பற்றிக் கவலைப்படாதே. ஆறுதலடைந்து நிம்மதியாக இரு. நீ உன் ஜுரத்தில் உளறியதைச் சமீபத்தில் இருந்து கேட்டவர்களுக்கு அதைப்பற்றிக் கவலையில்லை. மேலும் அதிக ஜுரத்தால் கஷ்டப்படுகிறவர்கள் ஸ்மாணை தப்பியிருக்கும்போது உள்ளதையும் இல்லாததையுமாகப் பீதியால் ஏதேதோ உளறுவதுண்டு. அவையெல்லாம் மெய்யேயென்று எப்படி நினைக்கமுடியும்?

தெய்வ:—ஆம், பீதியில் உள்ளதையும் இல்லாததையும் வெளியிடுவது வழக்கம்தான். ஆனால் நான் உளறிய போது வெளியிட்டதெல்லாம் உண்மையை அஸ்திவாரமாகக்கொண்ட விஷயங்களாயிற்றே. நானும் என் கனவில் பல பயங்கரமான காட்சியையெல்லாம் காண்கிறேன். என்கணவன் தூக்கு மேடையினின்றும் என்னை பயங்கரமான முகத்துடன் பார்த்துப் பயமுறுத்துவதுபோல் கனவுகண்டேன். அப்பா! அப்பார்வையைப் பார்க்கும்போதே பயமாக இருக்கிறது.

சுகசிங்:—அம்மா! இப்படியெல்லாம் நீயாகப் பீதியடைந்து மறுபடியும் மயக்கத்தில் விழுந்துவிடாதே. மனதை சாந்தப்படுத்திக்கொண்டு நிதானமாக இரு. பயங்கரமான எண்ணங்களை மனதில் புகவிடாதே. இவ்வாறு நீ செய்வதால் அயர்ச்சி யடைந்துவிடுவாய்.

தெய்வ:—ஐயோ, நான் என்னசெய்வேன்? அவ்வெண்ணங்கள் தானுகவே என் மனதில் பலவந்தமாகப் புகுந்து

கொள்கின்றன. நான் என் கணவனைமட்டும் கண்டதாக நினைக்கிறீரா? அல்ல; அல்ல. அந்தப் படுபாவி அவன் பெயர் சொல்லவும் என் நா எழவில்லை. எவன் என்னை மானபங்கப்படுத்தியதால் என் உயிரே போவதற்குக் காரணமாயிற்றோ அப்பாவியைக் கண்டது போலும் கனவு கண்டேன். அந்த மானபங்கத்தைப் பற்றி நினைக்கும்போதே உடலினின்றும் உயிர்விலகிச் செல்வதுபோல இருக்கிறது. ஆ! அப்படிப்பட்ட ஆபாசமான, கேவலத்தன்மை வாய்ந்த மானபங்கத்தைப் பொறுத்துக்கொண் டிருப்பதெப்படி? (இவ்வாறு கூறியபோது அவள் அயர்ச்சியடைந்தாள்).

சுக:—அம்மா! நீ அந்த எண்ணத்தையே மாற்றிக்கொள்ள வேண்டும். ஆதலின் நாம் இதைவிட்டு வேறு விஷயத்தைப்பற்றிப் பேசுவோம்.

தெய்வ:—சற்று பொறும். எனக்கு இதேஞாபகம் அதிகமாக இருக்கிறது. நான் என் மனதிலுள்ளதைத் தங்களிடம் முறையிட்டுக்கொண்டு விடவேண்டும். ஒருநாள் இரவு நான் விழித்துக்கொண்டு பார்த்தபோது தாதி சாய்வு நாற்காலியொன்றில் படுத்துறங்கிக்கொண் டிருந்தாள். விளக்கு மங்கலாக எரிந்துகொண்டிருந்தது. அறையில் எங்கும் நிசப்தமே அதிகமாக இருந்தது. நான் நன்றாக விழித்துக்கொண்டு அறைமுழுதும் சித்தஸ்வாதீனத்துடன் கவனித்தேன். திடீரென்று அறையின் கதவு திறக்கப்படுவதுபோல் தோன்றியது. எனது வேலைக்காரிதான் என்னிடம் உத்தரவு வாங்கிக்கொண்டு போக வருகிறாள் என்று நினைத்தேன். ஏனெனின் அப்போது நடுநிசி என்று எனக்குத் தெரியவில்லை, ஆனால் ஒரு ஆடவன் அடிமேல் அடிவைத்து மெது

வாக நடந்துவருவதைக் கண்டதும் ஆ, என் அடிவயிற்றில் நெருப்புவிழுந்த மாதிரி பீதியடைந்து திக்குமுக்காடினேன். அம்மனிதன் மெதுவாக என் படுக்கையினருகில் வந்துவிட்டான். என்னால் கூச்சலிடவோ முடியவில்லை. என் எதிரில் தோன்றிய பூதம் எது என்று நான் எளிதில் தெரிந்துகொண்டுவிட்டதால் நான் அச்சத்தின் மிகுதியால் மெய்மறந்துவிட்டேன். என் கண்களிரண்டும் அவனையே உற்றுப் பார்ப்பதையும், நான் பீதியடைந்து வாய்மூடி மௌனியாய் இருப்பதையும் கண்ட அவன், நான் எவ்வளவுதூரம் அச்சத்தால் பீடிக்கப்பட்டிருக்கிறேன் என்பதைத் தெரிந்துகொண்டுவிட்டான். என்னைப் பழிவாங்க வேண்டுமென்று நினைத்து அவன் அடைந்த ஆத்திரத்தாலும் கோபாவேசத்தாலும் அவனது கண்களும் முகமும் அடைந்த பயங்கரத்தோற்றத்தை நான் என்றென்றும் மறக்கமுடியாது. அவன் ஒரு நிமிஷம் அவ்வாறே என்னைப் பயமுறுத்தும் பார்வையுடன் பார்த்துக்கொண்டேயிருந்து பிறகு என்னைச் சமீபித்து மெதுவான குரலில், "நீ என்னைக்கொல்ல முயற்சிக்கவில்லையா? நான் சிறுகச்சிறுகச் சாகும்படி நீ என்னை அந்த இயந்திர நாற்காலியில் சிக்கவைத்துச் சிறிதும் கவலையின்றி வெளியேறிவிடவில்லையா? என் அதிர்ஷ்டவசத்தால் சுகசிங்கப்பிரபுவும் மதனவல்லியும் அங்கேவர நேரிட்டதால் நான் தப்பிப்பிழைத்தேன். இப்போது நீ சாகப்போவது நிச்சயம். கொலைக்காரனான தானப்பனுடைய காமத்தைத் தீர்க்கும் கருவியாக நீ உபயோகப்பட்டதால் அவமானத்தால் இறந்துகொண்டேயிருக்கிறாய். என் கையால் தூக்கிலேற்றப்பட்ட உன் கணவனிடம் நீயும் போய்ச் சேர்வது நிச்சயம். நீ இறவாமல் பிழைத்

தால் நான் உன்னைத் தொந்திரவு செய்யாமல் விடப் போவதில்லை. நான் இன்னும் இரண்டு மூன்று தினங் களில் இங்கே வருவேன். என் நன்மையை உத்தேசித் தேனும் இவ்வாறு நான் வரப்போகிறேன் என்பதை நீ யாரிடமும் சொல்லமாட்டாய் என்று நிச்சயமாக நம்பு கிறேன். அவ்விஷயத்தில் எனக்குப் பயமில்லை. நாளைய தினம் நீ இப்போது கண்டகாட்சியைக் கனவென்று நினைக்காமல் இருக்கும்பொருட்டு இதோ ஒரு ருஜு வைக் காட்டுகிறேன்" என்று கூறிவிட்டுத் தன் பள பளப்பான கத்தியை அதன் உறையினின்றும் எடுத்துக் காட்டிவிட்டு, வரும்போது வந்ததுபோலவே அடிமேல் அடிவைத்து மெதுவாக மறைந்துவிட்டான். இக்காட் சியைக் கண்ட நான் அச்சத்தால் அப்படியே மயக்க மடைந்தேன்.

சுகசிங்:—ஐயோ கடவுளே! நான் கேட்பதெல்லாம் என்ன? உண்மைதானா? அந்தப்பையல் இப்படியும் இங்கு வந்து உன்னைத் துன்புறுத்தத் துணிவானா? இதெல்லாம் வெறும் கனவாகவே இருக்கவேண்டுமேயன்றி உண் மையில் நடந்ததாக இருக்கமுடியாது.

தெய்வ:—இல்லை, இல்லை. நான் கூறுவது கனவல்ல. உண் மையில் நடந்த விஷயத்தையே கூறுகிறேன். இதோ பாரும். அவன் அக்கத்தியை உறையினின்றும் எடுத்து எனக்குக் காட்டியபோது தற்செயலாக அது என் படுக்கையைச் சுற்றியுள்ள கொசுவலையில் பட்டதால் அதுவும் சிறிது கிழிந்திருக்கிறது.

சுகசிங்:—ஆ, அப்படியா? ஆம், அதோ கிழிந்தபாகம் தெரி கிறது. அவன் இவ்விடம் வந்திருக்க வேண்டுமென்றே

தோன்றுகிறது. அவன் மறுபடியும் இங்கு வாராமலிருக்க என்ன செய்வதென்று தோன்றவில்லை. அவன் எப்படிப்பட்ட கதவையும், தாழ்ப்பாள்களையும், சுவர்களையும் இலட்சியம் செய்யாமல் எப்படியோ எப்படிப்பட்ட பெரிய மாளிகைகளிலும் புகுந்துவிடுகின்றான். ஆயினுமென்ன? எப்படியாவது அவனைத் தடுக்க ஏற்பாடு செய்கிறேன். இரண்டு சேவகர்கள் இரவுமுழுதும் குண்டுடன்கூடிய துப்பாக்கியுடன் கீழ்க்கட்டில் ரோந்து கொடுத்துக்கொண்டிருக்கவேண்டுமென்றும், யார் திருட்டுத்தனமாக உள்ளே வந்தாலும் உடனே யோசியாமல் சுட்டுவிட வேண்டுமென்றும் கட்டளையிடுகிறேன்.

தெய்வயானை:—ஆம்; அப்படியே செய்யுங்கள். ஏதாவது செய்து அக்கொடும்பாவி மறுபடியும் இங்கு வாரதபடி செய்துவிட்டால் அதுவே எனக்குப் போதுமானது. அப்போதுதான் நான் மனநிம்மதியுடன் இருக்கமுடியும்.

சுக:—குழந்தாய்! நீ ஏன் முன்னமே இவ்விஷயத்தை என்னிடம் அறிவித்திருக்கக்கூடாது? இப்போது நான் செய்யப்போகும் ஏற்பாட்டை முன்னமே செய்து அவன் இங்கு வரமுடியாதபடி தடுத்துவிட்டிருப்பேனல்லவா?

தெய்வ:—என்னமோ அச்சத்தாலும் இதர காரணங்களாலும் சொல்லமுடியவில்லை. ஆனால் இம்முறையிலும் சொல்லாமலிருந்தால் என்கதி அதோகதியாகத்தான் போய்விடுமென்றும் நானே உணர்ந்ததால் தைரியத்துடன் சொல்லிவிட்டேன். தாங்கள் எப்படியாவது செய்து என்னை அப்படுபாவியின் தொல்லையினின்றும் விடுவித்

தால்தான் என் மனம் நிம்மதியடையும். நான் இனி இப் படுக்கையினின்றும் பிழைத்து எழுந்திருப்பே னென்று நினைக்கவேயில்லை. நான் விரைவில் உயிர் துறப்பது நிச்சயம். ஆதலின் கடைசியாக ஒரு வேண்டு கோள்.

சுக:—அம்மா! உடனே உன் வேண்டுகோளைத் தெரிவி. என் னால் முடிக்கக்கூடிய காரியமாக அது இருக்குமானால் கட்டாயம் அதைக் கூடியவிரைவில் முடித்தே தீரு வேன். நீ கவலைப்படாமல் உன் வேண்டுகோளைத் தெரிவி.

தெய்வ:—நான் இறப்பதற்குமுன் எனது சகோதரன் கேசவ நாதனைப் பார்க்கவேண்டுமென்று மிக ஆவலுடையவ ளாக இருக்கிறேன். ஆகையால் உடனே அவனை அழைத்துவரும்படி தக்க ஆள் ஒருவரை அனுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சுக:—தெய்வயானை! அவன் வெளிதேசம் சென்றிருக்கிறு னென்றும், அவன் மற்றும் என்னென்ன காரியங்கள் செய்துகொண் டிருக்கிறுனென்றும் நான் முன்னமே உன்னிடம் கூறியிருக்கிறேனல்லவா?

தெய்வ:—ஆயினும் நல்ல நம்பிக்கையான மனிதனை யனுப்பி அவன் இரவும்பகலும் விடாமல் தொடர்ச்சியாகப் பிர யாணம்செய்து விரைவில் என் சகோதானைச் சந்தித்து அழைத்து வரும்படி ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் தாங்கள் என்சகோதா னுக்கு அனுப்பும் கடிதத்தில் நான் மாணப் படுக்கையில் இருப்பதாக அறிவித்தால் அவன்விரைந்து ஓடி வரு வான். ஆம்; கேசவநாதன் தாராளமும் பெருந்தன் மையுமுள்ள ஹிருதயத்தை யுடையவன். ஆதலால்

அவன் கட்டாயம் வருவான். தாங்கள்மட்டும் தயவு செய்து என்னுடைய இக்கோரிக்கையை நிறைவேற்றி வைத்துவிடுங்கள். அவனை அழைத்துவர ஆள் அனுப்பப்பட்டுவிட்டதாக எனக்குத் தெரிந்தால் என்மனம் எவ்வளவு ஆறுதலடையும் தெரியுமா?

சுகசிங்:—ஒரு நிமிஷமும் தாமதம்செய்யாமல் நான் ஆளை அனுப்புவது நிச்சயம். நீ கவலைப்படாதே.

என்று இவ்வாறு கூறிக்கொண்டே சுகசிங்கம்பிரபு எதிரில் இருந்த மணியை அடித்தார். உடனே தெய்வயானையின் வேலைக்காரி எதிரில் வந்துநின்றாள். பிரபு அவளைப்பார்த்து, "நீ உடனே வேலன், முருகன் ஆகிய இருவேலைக்காரர்களிடம் சென்று அவர்கள் உடனே பிரயாணம்செய்யத் தயாராகவேண்டுமென்றும், நான்கு குதிரை பூட்டிய வண்டி சித்தப்படவேண்டுமென்றும் தெரிவித்துவிட்டு உடனே நான் ஒருகடிதம் எழுதுவதற்கு வேண்டிய சாமான்களைக்கொண்டு வா" என்று கட்டளையிட்டார். அவ்வேலைக்காரி அவ்வறையைவிட்டுச் சென்றதும் சுகசிங்கம்பிரபு தெய்வயானையைப் பார்த்து, "நான் என்னுடைய இரு நம்பிக்கையான வேலைக்காரர்களை அனுப்புகின்றேன். ஏனெனின் அவர்கள் பரிதிபுரம் சென்றதும் ஒருவன் ஒருவழியாகவும் மற்றவன் மற்ற வழியாகவும் சென்றால் கேசவநாதன் ஊருக்குத் திரும்புவதாக இருந்தாலும் அவனைக் கண்டுபிடித்துவிட முடியும். நான் ஒரே மாதிரியான இருகடிதங்களை எழுதி ஒவ்வொரு வேலைக்காரனிடம் ஒருகடிதம் வீதம் அனுப்புகிறேன்," என்று கூறினான்.

சுகசிங்கம்பிரபு அவ்வாறு கூறிமுடிக்கும் சமயத்தில் வேலைக்காரியும் கடிதம் எழுதுவதற்கு வேண்டிய சாமான்களுடன் வந்துசேர்ந்தாள். சுகசிங்கம்பிரபுவும் மேஜையினரு

கில் உட்கார்ந்து கீழ்க்கண்டவாறு கடிதம் எழுதிமுடித்தார்:—“அன்புள்ள கேசவநாதனுக்கு, உன் சகோதரி தெய்வயானை அதிக காயலாவாக இருக்கிறாள். நீ உடனே என் வீட்டுக்குவந்து அவளைக் காணவேண்டுமென அவள் மிக ஆவலுடையவளாக இருக்கிறாள். எவ்வளவு முக்கியமானவேலையில் நீ ஈடுபட்டிருந்தபோதிலும் அதை விட்டுவிட்டு உடனே புறப்படுவதுடன் வழியிலும் எங்கும் தங்காமல் நேரே என்வீட்டுக்கே வரவேண்டியது. நீ இரவும் பகலும் தொடர்ச்சியாகப் பிரயாணம்செய்து விரைவில் வரவேண்டும். இன்றேல் தெய்வயானையின் முகத்தை நீ பார்ப்பதே அரிதாய்விடும்.

இப்படிக்கு,

உன் அன்புள்ள, சுகசிங்கம்பிரபு.

சுகசிங்கம்பிரபு இவ்வாறு இரு கடிதங்கள் எழுதி அவற்றை நன்றாகச் சீல்செய்து கேசவநாதன் என்று எழுதாமல் அவன் வேறு எந்த மாறுபெயர் வைத்துக்கொண்டிருந்தானோ அப்பெயரை அக்கடிதங்களின் உறைகளின்மீது எழுதி முடித்தான். இதற்குள் வேலைக்காரி வந்து வேலனும் முருகனும் தயாராக வந்திருப்பதாகத் தெரிவித்தாள். உடனே சுகசிங்கம்பிரபு அச்சேவகர்களுக்கு அறிவிக்கவேண்டிய விஷயங்களை அறிவிப்பதற்காகவும், செலவுக்கு வேண்டியபணம் கொடுப்பதற்காகவும் மாடியைவிட்டுக் கீழே இறங்கிவந்தார். அவர் வேலைக்காரர்களிடம் சொல்லவேண்டியதைச் சொல்லிக் கடிதம் கொடுத்து அனுப்பிவிட்டார். அவர்களும் இரவென்றும் பகலென்றும் பாராமல் புறப்பட்டுச் சென்றார்கள்.

சுகசிங்கம்பிரபு மீண்டும் மாடிக்குச் சென்று தெய்வயானையின் அறையை அடைந்தார். இதற்குள் தாதி அவ்வறைக்குச் சென்றிருந்தாள். பிரபு அவர்களை வெளியே

போகச்சொல்லித் தெய்வயானையுடன் இன்னும் அரைமணி நேரம் பேசப்போவதாகத் தெரிவித்தார். அவர் அந்த அரை மணிநேரமும் தெய்வயானைக்குச் சமாதானம் சொல்வதிலும், ஆறுதல் உண்டாக்குவதிலுமே காலங்கழித்தார். பிறகு இரவு சுமார் பதினொருமணிக்கு அவர் அங்கிருந்து தன் படுக்கை யறைக்குச் செல்ல நினைத்துத் தாதியையும் வேலைக்காரியை யும் கூப்பிடமுயன்று அறையின் கதவின்பக்கம் திரும்பிய போது அக்கதவு மெதுவாகத் திறக்கப்படுவதைக் கண்டார். உடனே எதிரில் கொலைக்காரப்பாவி தானப்பன் நிற்பதை யறிந்து அச்சமும் கோபமும்கொண்டு தனக்கும் தெரியாமல் வாய்விட்டுக்கத்தினர். நாமொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைக்கும் என்பதுபோல சகசிங்கம்பிரபு தெய்வயானைக்கு ஆறுதல் உண்டாக்கப் பலவகையிலும் முயற்சி செய்துகொண் டிருக்கையில் 'கிணறுவெட்டப் பூதம் புறப்பட்டதுபோல்' தெய்வயானையின் எமனாகிய தானப்பன் அங்குத் தோன்றி னன்.

170 - வது அத்தியாயம்

சகசிங்கம்பிரபு அச்சத்துடனும் கோபத்துடனும் தனக் குத் தெரியாமல் கத்தியதை, படுக்கையில் உட்கார்ந் திருந்த தெய்வயானை கேட்டதும் அதற்குக் காரணம் யாதா யிருக்கலாமென்பதை விரைவில் யூகித்தறிந்தாள். உடனே வாயிலின் பக்கம் நோக்கத் தனக்கு எமனாக வாய்த்திருக்கும் தானப்பன் நிற்பதைக்கண்டு அப்படியே படுக்கையில் சாய்ந் தாள். அப்போது சகசிங்கம்பிரபு சிறிது தைரியத்துடன், "அயோக்கியப்பயலே! இங்கு ஏன் வந்தாய்?" என்று மிரட் டினர். அப்பிரபு இருப்பதை முதலில் அறியாத அவன்

சிறிது திடுக்கிட்டானென்றாலும் பிறகு சமாளித்துக்கொண்டு, "யார் அங்கே சுகசிங்கம்பிரபுவா? நாம் இருவரும் பழைய நண்பர்கள்தானே" என்று மிக அவமரியாதையாகப் பேசினான். ஆகவே அதிக கோபமடைந்த சுகசிங்கம்பிரபு, "என்னடா? நாம் இருவரும் நண்பர்களா? என்ன தைரியத்துடன் இவ்வாறு பேசத்துணிந்தாய்? ஆனால் விவாதிப்பதற்கு இது தக்க இடமல்ல. என்னுடன் வா," என்று கட்டளையிட்டார்.

அதற்குத் தானப்பன் சிறிதும் அஞ்சாதவன்போல், "நான் தெய்வயானையுடன் ஒரு வார்த்தையாவது பேசிய பிறகுதான் இவ்விடத்தை விட்டுப் புறப்படமுடியும்," என்றான்.

க:—ஐயோ கடவுளே! நீ உடனே இங்கிருந்து புறப்படு. நான் கேட்டுக்கொள்வதுபோலச் செய். நான் பணம் கொடுப்பதில் தாராளமாக நடந்துகொள்வேன் என்பது உனக்குத் தெரியாத விஷயமல்ல. ஆகையால் உடனே வா. நான் சொல்கிறபடி கேள்.

தானப்:—சரி; பணம் தாராளமாகக் கொடுக்கப்படும் என்று சொல்வதால் உன்னிஷ்டப்படியே வருகிறேன். நீ முன்னே வழிகாட்டிச் செல். ஆனால் ஐயனே! என்னை ஏமாற்றலாமென்றோ; சூச்சலிட்டு என்னைக் காட்டிக் கொடுக்கலாமென்றோ நினைக்கவேண்டாம். அப்படி ஏதேனும் நீ செய்வதாயிருந்தால் நானும் என் வேலையை ஆரம்பித்துவிட்டேனாகில் உலகம் முழுதுமே உங்கள் குடும்பத்தின் பெயர் அடிபடும் என்பது ஞாபகத்திலிருக்கட்டும்.

சுக:—சரி, போதும்; உன் பயமுறுத்தல்களை யெல்லாம் நிறுத்து. நமக்குள் எதுநடந்தாலும் எல்லாம் இரக

சியமாகவே இருக்கவேண்டும். பேசாமல் என்னைத் தொடர்ந்து வா.

சுகசிங்கம்பிரபு அவனை, சாதாரணமாக எவரேனும் வந்தால், மரியாதையாக உட்காரவைத்துப் பேசும் அறைக்கு அழைத்துச் சென்று, "தானப்பா! நீ இங்கேயே சிறிதுநேரம் உட்கார்ந்திரு. நான் சென்று வேலைக்காரியையும் தாதியையும் தெய்வயானையிடம் அனுப்பிவிட்டு வருகிறேன். மணியடித்தாலொழிய யாரும் அவளது அறையில் வரக்கூடாதென்று சொல்லியிருந்தேன். இப்போது நான் அவசரத்தில் மணியும் அடிக்காமல் வந்துவிட்டபடியால் நான்போய் யாரையாவது அனுப்பிவிட்டு வருகிறேன். அவள் தனியாக இருப்பாளல்லவா?" என்று கூறினன்.

தானப்:—என்னை இங்கே உட்காரவைத்துவிட்டுச் செல்லும் நீ உடனே விரைவில் சென்று சில போலீஸ்காரர்களை அழைத்துக்கொண்டு வரமாட்டாய் என்பதற்கு என்ன உறுதிமொழி இருக்கிறது.

சுக:—ஏன்? நான் அப்படிச் செய்பவனுக இருந்தால் இப்போதே மணியடித்து இரண்டு சேவகர்கள் துணையைக் கொண்டு உன்னை ஏதேனும் செய்யமாட்டேனு? ஆகையால் நீ இவ்வாறு சந்தேகப்படுவது சிறிதும் சரியல்ல.

தானப்:—நீ சொல்வதும் சரிதான். ஏதேனும் கலவரம் நடந்தால் உங்கள் குடும்பரகசியமே வெளிப்பட்டுவிடும் என்னும் பயம் உனக்கும் இருக்குமல்லவா? ஆதலின் நீ உன் இஷ்டப்படியே போய்வா. ஆனல் அதிகநேரம் போய்விடாதே. ஆயினும் இன்னெரு விஷயம். நீ வெளியில் போயிருக்கும்போது யாரேனும் உன் சேவகர்கள் இங்கேவந்து என்னைப்பார்த்து நான் உன் பழைய நண்பன் என்பதை யறியாமலும், நான் என்ன

சொன்னாலும் கேட்காமலும் என்னை வெளியில் இழுத்துக்கொண்டுபோய் காவற்கூடத்தில் வைத்துவிட்டால் என்னசெய்வது? இது சங்கடமான விஷயமல்லவா? இதற்கேனும் வழி செய்துவிட்டு நீ போகலாம்.

சுகசிங்:—சரி, நீ கூறுவதும் சரியான யோசனைதான். இந்த மெழுகுவர்த்தி விளக்கை எடுத்துக்கொண்டு அதோ அந்த அறைக்குச்சென்றிரு. இதற்குமுன் நீயும் அவ்வறையைப் பார்த்திருக்கிறாய். அங்கே என் வேலைக்காரர்கள் சாதாரணமாக என் உத்தரவின்றி வரமாட்டார்கள்.

என்று இவ்வாறு கூறிக்கொண்டே சுகசிங்கம்பிரபு பக்கத்து அறையின் பூட்டைத்திறந்து அதில் செல்லும்படி தானப்பனிடம் கூறினார். அவன் உள்ளேசென்றதும் அப்பிரபு மீண்டும் அக்கதவை வெளிப்புறத்தில் சாத்திக்கொண்டு, "ஆ! நான் என்னசெய்யவேண்டுமென்று நினைத்திருக்கிறேனோ அதற்குச் சாதகமாகவே ஒவ்வொரு காரியமும் நடந்துவருகின்றது. சரி, இத்துடன் இவனை ஒழித்துவிட வேண்டியது தான்'' என்று மனதில் நினைத்துக்கொண்டே தன் காரியத்தை நோக்கிச்சென்றார். அவர் உடனே வேலைக்காரியையும் தாதியையும் தெய்வயானையின் அறைக்கு அனுப்பிவிட்டுத் தான் தன்னுடைய உடைகள் அணியும் அறைக்குச் சென்று மிக இரகசியமாக இரண்டு கைத்துப்பாக்கிகளை கெட்டித்து மறைவாக உட்சட்டையின் பையில் போட்டுக்கொண்டு, "இதுதான் தானப்பன் கடைசிமுறையாக இங்கு வருவதாக இருக்கவேண்டும். இக்கொடியோனுடைய துன்பங்களை இனியும் சகித்துக்கொண்டிருக்க முடியாது. நான் அடிக்கடி அவனுக்குப் பணம்கொடுத்துச் சமாதானம்செய்து கொள்ளுகிறேன் என்று தெரிந்தால் அவனும் அடிக்கடி வந்து தொந்தரைசெய்கிறான். ஆகவே ஒருநாயைச் சுட்டுத்

தள்ளுவதுபோல அவனையும் சுட்டுவிடுகின்றேன். அவன் இக்கோத்தில் திருட்டுத்தனமாகப் பிரவேசித்திருக்கிறபடியால் என்மீது எத்தகைய குற்றமும் சாராது. திருடன் வந்தான் சுட்டுவிட்டேன் என்று கூறிவிடலாமல்லவா? ஆதலால் அயோக்கியனே! உன் ஆயுள் இந்த நிமிஷத்துடன் முடிந்து விட்டது. என் சகோதாரின் புத்திரியை நீ இச்சித்தாயல்லவா? அதற்குப் பழிவாங்கி விடுகிறேன். இதில் ஒரு நிமிஷமும் காலதாமதம் செய்யமாட்டேன்," என்று தன் மனதுக்குள் நினைத்துக்கொண்டார்.

இவ்வாறு நினைத்துக்கொண்டு அவர் உடனே அங்கிருந்து புறப்பட்டு தானப்பன் காத்திருந்த அறைக்குச் சென்ருர். தானப்பன் அவ்வறையில் ஒரு வெல்வெட்டு சோபாவில் சாய்ந்துகொண்டிருந்தான். சுகசிங்கம்பிரபு வந்ததையறிந்தும் அக்கேவல மனிதன் தன் அகம்பாவத்தால் அவரைச் சிறிதும் பொருட்படுத்தாமல் அப்படியே சாய்ந்திருந்தான். பிரபுவும் அதை ஒருபொருட்டாகக் கவனிக்கவில்லை. பிரபுவும் அவர் குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் யோக்கியமாக நடந்துகொண்டு குற்றமற்றவர்களாக இருந்திருப்பின் இப்படிப்பட்ட அற்பர்களுக்கெல்லாம் கண்டு பயந்திருக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டிராது. ஆனல், அவர்களுடைய நிலைமை அப்படியில்லை. எவ்வளவுதான் செல்வாாயினும், உயர்ந்த ஜாதியாராயினும் ஒரு குற்றத்தைச் செய்துவிட்டு அதைத் தாழ்ந்தவனெருவன் கண்டுவிடுவானுயின் உடனே அவர் அவனுடைய தாட்சண்யத்துக் காளாகிவிடுகிருர். ஆதலின் வாழ்க்கையின் ஒவ்வொரு நிமிஷத்தையும் சர்வ ஜாக்கிரதையுடன் கழிக்கவேண்டும்.

சுகசிங்கம்பிரபு தானப்பனைக்கண்டு, "உனக்கு என்ன வேண்டும்? என்னிடமிருந்து எவ்வளவு தொகை எதிர்பார்க்

கிருய்?'' என்று கேட்டுக்கொண்டே தான் எங்கு உட்கார்ந்தால் வாட்டமாக அவனை எளிதில் சுடமுடியுமோ, அவன் திடீரென்று பாய்ந்து கைத்துப்பாக்கியைப் பிடுங்கிக்கொள்ளாம லிருக்கமுடியுமோ, அங்கு உட்காரநினைத்துத் தக்க இடத்தைச் சரிப்படுத்திக்கொண்டார்.

சோபாவின்மீது சாய்ந்திருந்த தானப்பன் எழுந்து உட்கார்ந்துகொண்டு, "தெய்வயானையை ஒரே அடியாகப் பழி வாங்க நான் உத்தேசித்திருக்கிறேன் என்பது உனக்குத் தெரிந்திருக்கும். அவள் எல்லா விவரங்களையும் உன்னிடம் சொல்லியிருப்பாளென்று நம்புகிறேன்'' என்று கூறினன். அப்போது சுகசிங்கம்பிரபு அதிக கோபமடைந்து, "ஆம், எல்லாவற்றையும் சொன்னுள். நீ துராக்கிரமாக அவள் கற்பைக் கெடுத்ததையும்கூடக் கூறினுள்'' என்று சொல்லி முடிப்பதற்குள் தானப்பன் மிக வெறுப்புடன், "துராக்கிரகம் தான். அவள்செய்த அக்கிரமங்கள் உனக்குத்தெரியாதா? முதலில் நகரத்தின் வெளியிலுள்ள பெரிய பாலத்தினடியில் கத்தியால்குத்தி என்னைக் கொல்லமுயன்ருள். பிறகு இதோ உன் மாளிகையில் மற்றொரு அறையிலுள்ள இயந்திர நாற்காலியில் தந்திரமாய்ச் சிக்கவைத்துக் கொல்லமுயன்ருள்,'' என்று ஏதோ கூறமுயன்ருள். இதற்குள் சுகசிங்கம்பிரபு, ''அயோக்கியப்பையலே'' என்று கூறிக்கொண்டு தன் சட்டைப்பையிலிருந்த கைத்துப்பாக்கியை மிக விரைவில் எடுத்துத் தானப்பனுடைய முகத்துக்குச் சரியாகக் குறிபார்த்துப் பிடித்தார். ஆனால் சிறிது அச்சத்தால் பிரபுவின்கை நடுக்க மெடுக்கவே அதைச் சுட்டபோது குறி சிறிது தவறிவிட்டது. இதற்குள் தானப்பன் மனே உறுதியுடன் சிறிதும் அஞ்சாமல் புலியைப்போல் சுகசிங்கம் பிரபுவின்மீது பாய்ந்து அப்பிரபுவைக் கீழேதள்ளி அவர் கூச்சலிடாம லிருக்கும்

பொருட்டு அவர்வாயைத் தன் ஒரு கையால்மூடி மற்ருெரு கையால் அவரிடமிருந்த மற்ருெரு கைத்துப்பாக்கியைப் பிடுங்கினுன்.

பிறகு தைரியத்துடன் தானப்பன் சுகசிங்கம்பிரபுவைப் பார்த்து, "அடா கிழப்பிணமே! இப்போது உன்னைச் சுட்டுத் தள்ளுவதினின்றும் என்னைத் தடுக்கக்கூடியது என்ன இருக்கிறது. ஆனுல் நான் உன்னைச்சுடமாட்டேன். வேறு வகையில் உன்னைத் தண்டிப்பதாகத் தீர்மானித்திருக்கிறேன். எழுந்திரு. என் பின்னே வா. வாயைத்திறந்து கத்தப் போகிருய். ஜாக்கிரதை! அல்லது சேவகர்களைக் கூப்பிட மணியடிக்கலாமா என்றும் நினைக்காதே. அப்படி ஏதேனும் செய்யமுயன்ருல் உன் ஆயுதத்தைக்கொண்டே உன்னைச் சுட்டுத் தள்ளிவிடுவேன். உஷார்," என்று கூறிக்கொண்டே தானப்பன் சுகசிங்கம்பிரபுவின் கழுத்தில் போட்டிருந்த காலர் என்னும் ஆடையைப்பற்றித் தூக்கி நிற்கவைத்து அடுத்த அறைக்கு இழுத்துச்சென்று அங்கே அப்பிரபுவினுல் கள்ளங் கபடமற்ற கன்னியர்களின் கற்பை அழிப்பதற்காக நிர்மாணிக்கப்பட்டிருந்த இயந்திர நாற்காலியில் பிடித்துத்தள்ளினுன். சுகசிங்கம்பிரபு அந்த நாற்காலியின்மீது விழுந்ததும் அது வழக்கப்படி அவருடைய கைகால்களையும் இடுப்பையும் பற்றிக்கொண்டது.

இவ்வாறு தான் எதிர்பாராமல் தனக்கு நேரிட்ட துன்பத்தைக்கண்டு சுகசிங்கப்பிரபு திக்பிரமை யடைந்து ஒரு நிமிஷம்வரை வாயெடுத்துப் பேசமுடியாமல் மனக்குழப்ப மடைந்தான். இவ்வளவு விரைவில் நடந்த இச்சம்பவங்களெல்லாம் கனவோ என்று நினைத்தார். ஆனுல் நிதானம் வர ஆரம்பித்தபிறகு தான் இயந்திர நாற்காலியில் அகப்பட்டுக்கொண்டிருப்பதையும் எதிரில் தானப்பன் மிகக் குரூர

மான பார்வையுடன் நிற்பதையும் அறிந்தார். ஆனால் அந்த அறையில் விளக்கு இல்லாமல் இருந்தபடியாலும், அடுத்த அறையிலிருந்த விளக்கின் வெளிச்சம் சிறிது மங்கலாகத் தெரிந்தபடியாலும் அந்த உபாய வெளிச்சத்தில் சுகசிங்கம் பிரபு மெதுவாகத் தானப்பனைப் பார்த்து மிகப் பணிவுடன், "தானப்பா! என்மீது கோபித்துக் கொள்வதற்குரிய காரணங்கள் பல உனக்கு இருக்கின்றன. ஆயினும் நாம் ஒரு வித சமரசத்துக்கு வருவது நல்லதல்லவா என்று யோசித்துப்பார்" என்று கேட்டுக்கொண்டார். அவர் என்செய்வார் பாவம்! அவருடைய நிலைமை அவ்வளவு பரிதாபகாமானதாய்விட்டது. விதியில்லாமல்தான் அவர் அவ்வாறு பணிந்து தானப்பனுடன் பேசவேண்டியதாயிற்று.

அப்போது இரக்கமென்பதே சிறிதும் அறியாத தானப்பன் மிக அருவருப்புடன், "என்ன சமரசம்! உன்னைப் போன்ற ஒரு சூழ்ச்சிக்காரனுடனா நான் சமரசம் செய்து கொள்வது. இனி ஒருகாலும் அதுமுடியாது. உன்னை இத்துடன் விடப்போவதில்லை. உன் சட்டையிலும் தேகத்திலுமுள்ள விலையுயர்ந்த சாமான்களையும் விடமுடியாது" என்று கூறிக்கொண்டே அவரருகில் சென்று அவருடைய சட்டைப்பை முதலியவற்றைத் தேடி அவருடைய தங்கக் கடிகாரத்தையும், தங்க சங்கிலியையும், வைர குண்டூசியையும், விரலில் இருந்த மோதிரங்களையும், ஒரு கட்டு நோட்டுகளையும் எடுத்துக்கொண்டான்.

இதையெல்லாம் கவனித்துக்கொண்டிருந்த சுகசிங்கம் பிரபு மிகப் பீதியடைந்து தானப்பனிடம், "நீ என்னை விலக்கி விட்டால் ஆயிரம் பவுன்களை உனக்குச் சன்மானமாகத் தருவேன்" என்று கூறினன். அப்போது தானப்பன், "ஆயிரம் பவுன்கடல்ல; பதினயிரம், இருபதினயிரம் பவுன்களைக்

கொடுப்பதாக இருந்தாலும் எனக்கு வேண்டாம். உன்னை விடமுடியாது. நீ ஏதோ சூழ்ச்சிசெய்ய நினைத்திருப்பாய்'' என்று தாட்சண்யமின்றிக் கூறிவிட்டான். அதற்கு சுகசிங்கப்பிரபு, "அப்படியல்ல, நான் ஒரு கண்ணியம் வாய்ந்த பெரிய மனிதனல்லவா? நான் சத்தியமாகக் கூறுவதை நம்பு. நான் இனி உன்னை நம்புவேன். நீயும் நம்பு. பரஸ்பரம் சினேகத்துடன் இருப்போம்,'' என்று மன்றாடிக் கேட்டுக் கொண்டார்.

அப்போது தானப்பன் மிக்க கண்டிப்பாக, "நான் இனி உன்னை நம்பவேமுடியாது. நாம் இனி பரஸ்பரம் சினேகமாயிருக்கமுடியாதபடி நிலைமை அவ்வளவு மோசமாய்ப் போய்விட்டது. நீ என்னைச் சுட்டுவிடுவதென்று எப்போது தீர்மானித்தாயோ அப்போதே இனி நிலைமை சமாளிக்கமுடியாதென்று நினைத்தல்லவோ அவ்வாறு முடிவு செய்திருக்க வேண்டும். நான் உங்களைப் பழிவாங்குவதில் பூரா காரியத்தையும் முடித்துவிட்டதாக நினைக்கவேண்டாம். இந்த மாளிகையையே அடியோடு அழித்துவிட்டால்தான் என் மனம் திருப்தியடையும்'' என்று கூறிக்கொண்டே பக்கத்து அறைக்குச் சென்று அங்கிருந்த மெழுகுவர்த்தி விளக்கைக் கொண்டுவந்து ஏதுநேருமோ என்னும் அச்சத்தால் பீதியடைந்திருந்த சுகசிங்கப்பிரபுவின் எதிரில் வெளிச்சத்தைக் காட்டிக்கொண்டே நின்று, "ஒரேயடியாக உன்னையும் தெய்வயானையையும் எமனுலகம் அனுப்பிவிட்டு மனப்பூர்த்தியாகப் பழி தீர்த்துக்கொள்வதென்று நிச்சயித்துவிட்டேன். அப்போதுதான் எதிர்காலத்தில் எனக்குக் கஷ்டமில்லாமல் இருக்கும். இன்றேல் பிரபுக்களாகிய நீங்கள் என்போன்ற ஏழைகளைக் கெடுத்துவிடவேண்டுமென்று நினைத்தால் எப்படியாவது சூழ்ச்சிசெய்து அழித்துவிடுவீர்கள். உனக்கு என்னகஷ்டம் வந்தாலும் சரி, என்னைச் சுட்டுவிடுவது என்று

நீ தீர்மானித்தபோதே இனி என்னை இவ்வுலகில் வைத்திருக்கக்கூடாதென்று முடிவு செய்திருக்க வேண்டுமல்லவா?" என்று கூறிவிட்டு உடனே அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டுச் சுகசிங்கம்பிரபுவின் ஆடை ஆபரணங்களும், விசித்திர சாமான்களும் இருக்கும் இடங்களுக்கெல்லாம் சென்று அவைகளுக்கெல்லாம் நெருப்பு வைத்துவிட்டான். கல்நெஞ்சினனான அவன் இவ்வாறெல்லாம் செய்வான் என்பதை உணர்ந்த சுகசிங்கப்பிரபு, தான் இயந்திர நாற்காலியில் அகப்பட்டுக் கொண்டவண்ணம் தானப்பன் பெயரைச்சொல்லிப் பலமுறை கூப்பிட்டார். தன்னை விடுவிக்கும்படியும், தான் நிறைய பணம் கொடுத்து அவன் சொல்கிற நிபந்தனைகளுக்கெல்லாம் உட்பட்டு சமாசம் செய்துகொள்வதாகவும் கெஞ்சிக் கேட்டுக்கொண்டார். ஆனால் அவன் அதையெல்லாம் காதில் போட்டுக்கொள்ளவேயில்லை.

அவன் மற்றும் சில முக்கியமான இடங்களில் தீ வைத்துவிட்டு ஒருவரையும் சந்திக்காமல் மேல்மாடிக்குச் சென்று அங்கிருந்து பக்கத்திலிருந்த இடிந்துபோன மாளிகைக் கட்டடத்தில் இறங்கி அத்தெருவின் கோடிக்குச் சென்று வெகு தூரத்தில் நின்றுகொண்டு தான் நெருப்பு வைத்துவிட்டு வந்தது என்ன ஆகிறதென்று பார்த்துக்கொண்டு நின்றான். இதற்குள் வீட்டிலுள்ள பலரும் ,நெருப்பு, நெருப்பு என்று கத்திக்கொண்டே வெளியில் ஓடிவந்தனர். நெருப்பும் அகாண்டமாகப் பற்றி எரிய ஆரம்பித்துவிட்டது. சமீபத்திலும் யாரும் போகமுடியவில்லை. இதை தூரத்திலிருந்து பார்த்துக்கொண்டிருந்த தானப்பன், தான் பழிவாங்கிவிட்டதில் திருப்தியடைந்து தான் அங்கேயே சுற்றிக்கொண்டிருந்தால் தன்மீது ஏதேனும் சந்தேகம் வருமெனக்கருதி அங்கிருந்துதன் இருப்பிடம் சென்றுவிட்டான்.

மறுநாள் மாலை சுமார் மணி ஐந்து இருக்கும். நான்கு குதிரைகள் பூட்டிய ஒரு வண்டி மிக வேகமாகவந்து இரத்தினபுரி எல்லையின் வெளிப்புறத்திலுள்ள டோல்கேட்டுக் கருகில் நின்றது. அந்த வண்டியில் மிக அழகாகவும் பெருந்தன்மையுடனும், விலையுயர்ந்த ஆடை ஆபரணங்களுடனும் ஒரு வாலிபன் உட்கார்ந்திருந்தான். அதன் முன்பாகத்தில் இரு சேவகர்கள் அமர்ந்திருந்தனர். வண்டி நின்றதும் முன்பு உட்கார்ந்திருந்த சேவகர்களில் ஒருவன் கீழே இறங்கி மிக அவசரமாகப் பாஸ் ஒட்டி வண்டியைவிடும்படி கேட் கண்டிராக்டரிடம் கேட்டுக்கொண்டான்.

அப்போது கண்டிராக்டர் தான் உட்கார்ந்திருந்த ஆசனத்தினின்றும் எழுந்து வண்டிக்கருகில் வந்துநின்று, "நீங்கள் மிக அவசரமாகப் போகவேண்டியிருக்கிறதுபோலும்!" என்று கூறிக்கொண்டே உள்ளே உட்கார்ந்திருந்த வாலிபர் ஏதேனும் சிற்றுண்டி வாங்குவாரோ என்னும் எண்ணத்துடன் அவரைக்கவனித்தான். அச்சமயம் வேலைக்காரன், "ஆம், மிக அவசரமாகத்தான் போகவேண்டும். சுகசிங்கம் பிரபுவின் சகோதாருடைய புத்திரர் கேசவநாதப்பிரபு தமது சகோதரி தெய்வயானை மாணத்தருவாயில் இருப்பதைக் காண மிக ஆவலுடன் சென்றுகொண்டிருக்கிறார்" என்றான்.

அதைக்கேட்ட கண்டிராக்டர், "ஓ அப்படியானல் அந்தவாலிபர் சுகசிங்கம்பிரபுவின் குடும்பத்தைச்சேர்ந்தவரா? அக்குடும்பத்தின்கதி நேற்று எவ்வாறாக முடிந்துவிட்டதென்பது உனக்குத் தெரியாதுபோலும்" என்றான். இதனல் பீதியடைந்த வேலைக்காரன், "என்ன நேர்ந்துவிட்டது? ஏதேனும் அசம்பாவிதமிருந்தால் உடனே தெரியப்படுத்தவும்" என்று கேட்டுக்கொண்டான். அதற்குக் கண்டிராக்டர், "நேற்று இரவு சுகசிங்கப்பிரபுவின் வீடுமுழுதும் தீப்பற்றிக்

கொண்டு எரிந்துபோனதாகக் கேள்விப்பட்டதை அறிவிக்க மிகவும் வருந்துகிறேன்'' என்று தெரிவித்தான்.

இச்சம்பவத்தைக் கேட்ட வேலைக்காரன் மிக துக்கத்துடன், "ஐயோ, கடவுளே! அத்தீயில் அகப்பட்டுக்கொண்டு யாரேனும் இறந்துவிட்டார்களா? அதைப்பற்றி உங்களுக்கு ஏதேனும் தெரியுமா?'' என்று மிக ஆவலுடன் கேட்டான். அதற்குக் கண்டிராக்டர், "அப்படித்தான் சொல்லப்படுகிறது. எனக்கு விவரமொன்றும் தெரியாது. இன்று காலை பத்திரிகையில் ஏதோ உபாயமாகத்தான் சமாசாரம் வெளியாயிருந்தது. இவ்வழியே போன சில வண்டிக்காரர்கள் அம்மாளிகையில் சுகசிங்கப்பிரபுவும், ஒருமாதும், இரண்டு மூன்று சேவகர்களும் இருந்து எரிந்துபோனதாகச் சொல்லிக்கொண்டார்கள். ஆனால் எனக்கு நிச்சயமாக ஒன்றும் தெரியாது,'' என்று அலட்சியமாகச் சொன்னான்.

உடனே வேலைக்காரன் வண்டியினருகில் சென்று உள்ளே உட்கார்ந்திருந்த கேசவநாதம் பிரபுவினிடம் தான் கண்டிராக்டர் மூலமாகக் கேட்டதையெல்லாம் தெரிவித்தான். அதைக்கேட்ட கேசவநாதன் துக்கத்தால் இரு காங்களையும் கோத்துக்கொண்டு, "ஐயோ எனது சகோதரியே! உன் கதி இப்படியா ஆய்விட்டது. வேலைக்காரா! கொஞ்சம் அதிகம் பணத்தைக்கொடுத்தாவது வண்டியை உடனே விடும்படி கண்டிராக்டரிடம் சொல்'' என்று கூறினான்.

இதற்குள் கண்டிராக்டரும் பணத்தை வாங்கிக்கொண்டு பாலை வண்டியின்மீது ஒட்டிவிட்டான். சேவகன் வண்டியில் ஏறி உட்கார்ந்துகொண்டு வண்டியை வேகமாகச் செலுத்தும்படி சாரதிகளிடம் கட்டளையிட்டான். எனினும் அங்கிருந்து அவ்வண்டி சுகசிங்கப்பிரபுவின் மாளிகை இருந்த

இடத்துக்குச் செல்ல முக்கால்மணி நேரம்பிடித்தது. அந்த நேரத்துக்குள் கேசவநாதன் வண்டியில் உட்கார்ந்தபடியே எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி எண்ணி ஏழைநெஞ்சம் புண்ணானான். இதற்கிடையில் நாம் வாசகர்களுக்கு அறிவிக்கவேண்டிய விஷயம் ஒன்றுண்டு. அதாவது அன்று காலை அவர்கள் துறைமுகநகரம்சென்று கப்பலில் ஏற டிக்கட் வாங்கமுயன்றபோது அப்போதுதான்பரிதிபுரத்திலிருந்து அத்துறைமுகத்துக்கு வந்துசேர்ந்த கப்பலிலிருந்து கேசவநாதம் பிரபு இறங்கிவருவதை வேலைக்காரர்கள் வேலனும் முருகனும் கண்டார்கள். ஆகவே அவர்கள் தங்கள் பிரயாணத்தை நிறுத்திக்கொண்டு உடனே கேசவநாதத்தை சந்தித்துத் தாங்கள் கொண்டுபோன கடிதத்தை அவனிடம் கொடுத்தார்கள். அவன் அதைப் பார்த்துவிட்டு உடனே அவர்களுடன் இரத்தினபுரிக்குப் புறப்பட்டான். ஆனால் வழியில் வண்டி கந்தபுரிக்குச் சமீபத்தில் சிற்றுநேரம் வழக்கப்படி நின்றதால் அச்சமயத்தில் அவன் அங்கிருந்த ஒருவருக்காக ஒரு கடிதம் எழுதி அதைச் சமீபத்திலிருந்த ஒரு ஓட்டல் வேலைக்காரனிடம் கொடுத்து விலாசதாரிடம் கொடுத்துவிடும்படி சொல்லித் தாராளமாகப் பணத்தையும் கொடுத்துவிட்டுவந்தான். உடனே வண்டியும் புறப்பட்டது. இரத்தினபுரி நகரத்தின் எல்லைப்புறத்திலிருந்த டோல்கேட்டில்தான் அசம்பாவிதத்தைப்பற்றிக் கேள்விப்பட்டார்கள். ஆகவே சுகசிங்கம்பிரபுவின் மாளிகை இருந்த தெருவில் வண்டி நுழையும்போதே கேசவநாதன், வேலன், முருகன் ஆகிய மூவரின் மனமும் துடிதுடித்தது. ஏதோ என்னமோ என்னும் அச்சத்துடன் அங்கே சென்றார்கள்.

சுகசிங்கம்பிரபுவின் அழகிய மாளிகை காணப்படவில்லை. எரிந்துபோன பாழடைந்த கட்டடமே காணப்பட்டது.

அவன் எதிரில் பல ஜனங்கள் கும்பலாகக் கூடிக்கொண்டு எதை எதையோ சொல்லிக்கொண்டிருந்தனர். வண்டியிலிருந்து கேசவநாதன் கீழேகுதித்ததும் அருகிலிருந்த ஒருவரிடமிருந்து, சுகசிங்கம்பிரபு, தெய்வயானை, இரண்டு வேலைக்காரர்கள் ஆகியோர் தீயில் அகப்பட்டுக்கொண்டு இறந்தனர் என்று தெரிந்துகொண்டான்.

மேலும் கேசவநாதனிடம் அம்மாளிகை எரிந்துபோனது பற்றி அருகிலிருந்த ஒருவர் பின்வருமாறு விவரித்துக்கூறினார்:—அந்த மாளிகையில் ஏககாலத்தில் பல இடங்களில் தீ வைத்ததுபோல ஒரேயடியாய் எங்கும் நெருப்புமயமாய் பகீரென்று பற்றி எரியவே வீட்டிலிருந்த சிலர் மற்றவர்களைப் பற்றிக் கவனியாமல் தங்கள் உயிர்தப்பினால் போதுமென்று வெளியே ஓடிவந்துவிட்டார்கள். நெருப்பின் தீட்சண்யம் அதிக கடுமையாக இருந்ததால் யாரும் அதனருகில் செல்லவும் முடியவில்லை. சிலர் மாடியின் அறையில் நோயுடன் இருந்த தெய்வயானையை அப்புறப்படுத்த எவ்வளவோ முயன்றும் முடியவில்லை. வேறு சிலர் சுகசிங்கம்பிரபுவையும் தேடினார்கள். ஆனால் அந்தோ அவருடைய நிலைமையைப் பற்றி என்னென்று கூறுவது? இத்தீ எரிந்த வேகத்தால் கட்டடத்தின் உள்பாகம் நன்றாகத் தெரிந்தது. அப்படித் தெரிந்தபோது பார்த்ததில் ஒரு அறையில் இருந்த ஏதோ ஒரு நாற்காலியில் அவர் உட்கார்ந்திருந்ததும், ஆனால் என்ன காரணத்தாலோ தெரியவில்லை, அவர் அந்த நாற்காலியிலிருந்து எழுந்திருக்கமுடியாமல் எரிகிற தீ தன்னை நோக்கிவர அவர் உயிருக்கு மன்றாடியது மிகப் பரிதாபமான காட்சியாக இருந்தது. சொற்பநேரத்தில் நெருப்பு அவரைச் சூழ்ந்துகொள்ளவே அவர் உயிர் துறந்தார். அவர் போட்ட கூச்சல் வெளியிலிருந்து பார்த்துக்கொண்டிருந்த ஜனங்களுக்குக்

கேட்டதென்றாலும் அவர்களால் செய்யக்கூடியது ஒன்று மில்லை. கட்டடம் முழுதும் எரிந்து ஆனபிறகு அம்மாளிகையிலிருந்து தப்பிப்பிழைத்த ஒருவர் இருவரை விசாரித்ததில் சுகசிங்கம்பிரபு, தெய்வயானை, தாதி, வேலைக்காரி, காவல்காரன் ஆகியோர் அதில் இறந்துவிட்டதாகத் தெரிந்தது.

இவ்வாறு அம்மாளிகையில் திடீரென்று தீப்பற்றியதன் காரணம் இன்னதென்று அறிய யாராலும் முடியவில்லை. மாளிகை முழுதும் எரிந்துபோனதால் ஏதும் ஆராய்ச்சி செய்தும் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆகவே ஏதோ எதிர்பாராத சம்பவத்தால் இவ்வாறு நேரிட்டிருக்க வேண்டுமென்று பொதுஜனங்கள் பேசிக்கொள்ளலாயினர். ஆனால் தானப்பன் மட்டும் ஜாடித்தீவிலுள்ள தன் குடிசையில் உட்கார்ந்துகொண்டு தான் பழிவாங்கி விட்டதைப்பற்றிச் சந்தோஷப்பட்டுக்கொண்டிருந்தான்.

கேசவநாதம்பிரபு தன் தந்தையின் சொத்துக்களுக்கு வாரிஸ்தாரனாக இருந்ததுடன் அவனது சிறிய தந்தை சந்ததியில்லாமல் இறந்ததால் அவருடைய சொத்து, பட்டம் முதலிய அந்தஸ்துகளுக்கும் அவனே வாரிஸ்தாரனானான். அவன் தனக்கு இவ்வளவு கௌரவங்களும், அந்தஸ்தும், சொத்தும் கிடைத்ததற்காகச் சந்தோஷப்படவில்லை. ஆனால் தன் சகோதரி தெய்வயானை உயிருடன் இருக்கும்போதே வந்து அவளைப் பார்க்கமுடியாமற் போயிற்றே என்னும் கவலையும், தனது சகோதரியும், சிறிய தந்தையும் இவ்வாறு பரிதாபகரமான மரணத்தை யடையநேரிட்டதே என்னும் துக்கமுமே அவனை அதிகம் வாட்டியது. "அடாது செய்பவர் படாதுபடுவர்" என்பதுபோல சுகசிங்கம்பிரபு தன் மாளிகையின் அந்தரங்க அறையொன்றில் வேண்டுமென்றே இயந்திர நாற்காலியை அமைத்து கள்ளங்கபடமற்ற பெண்

களை எப்படியாவது அதில் சிக்கவைத்து அவர்கள் தன் இச்சைக்கு இணங்குவதாக ஒப்புக்கொண்ட பின்னர் அவர்களை அங்கிருந்து விலக்கித் தன் காம இச்சையைப் பூர்த்தி செய்துகொள்ள முயன்று அதனால் பல பெண்களின் சாபத்தைப் பெற்றிருந்ததால் இறுதியில் அவனே அந்த நாற்காலியில் சிக்கி, பற்றி எரியும் நெருப்பு தன்னைச் சூழ்ந்து வரும் போதும் ஓடிப்போக முடியாமல் மனம் நொந்து அதிலேயே சாகவேண்டியதாயிற்று. ஒவ்வொரு ஆடவனும் தான் மணந்து கொண்ட மனைவியைத் தவிர இதரமாதர்களைச் சகோதரிகளாகப் பாவித்து உலகில் விபசாரம் என்னும் தீயசெயல் பரவாதபடி தடுக்கவேண்டும். அவ்வாறின்றி பிற மாதர்களைக் கெடுப்பவர்கள் சுகசிங்கம் பிரபுவைப்போல் அழிந்தேதீருவர் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. ஒவ்வொரு ஆடவரும் பரஸ்திரீ சகோதரர்களாக விளங்கவேண்டு மென்பதற்கே சுகசிங்கம்பிரபுவின் உதாரணம் இங்கு காட்டப்பட்டது.

171 - வது அத்தியாயம்

கந்தபுரிக்கு கற்பகவல்லி வந்து பல தினங்களாகியும் அவள் தன் சகோதரி கோமளவல்லியினுடனேயே அப்பழையவீட்டில் வசித்துவந்தாள். இதற்கிடையில் அவளுக்கு செல்லப்பப்பிரபு, மதுரைநாயகம்பிரபு, பத்மாவதியம்மாள், இளவரசர் ஆகிய அனைவரிடமிருந்தும் பதில் கடிதங்கள் கிடைத்திருந்தன. முதலில் பத்மாவதியம்மாள் என்ன எழுதியிருந்தாளென்று கவனிப்போம். கற்பகவல்லி இரத்தினபுரி இளவரசர் மாளிகையில் மதனவல்லியாக நடித்த போது பத்மாவதியம்மாளின் கோரிக்கைகளையெல்லாம் சரிவர நிறைவேற்றிவைத்து ஆரம்பத்தில் எந்த நிபந்தனைகளின்

மீது கற்பகவல்லிக்குப் பத்மாவதியம்மாள் அவ்வளவு மூல தனம் கொடுத்தாளோ அந்த நிபந்தனைகளையும் ஒன்றுவிடாமல் கற்பகவல்லி நிறைவேற்றிவிட்டதாகவும், ஆதலால் தனக்கு அவள்விஷயத்தில் எத்தகைய குறையுமில்லை யென்றும், ஆனால் நல்ல செல்வாக்கையும் இன்பமான வாழ்க்கையையும் தரக்கூடிய அந்தஸ்தை இழந்துவிட்டதற்காக வருத்தப்படுவதாகவும், ஏனெனின் மறுபடியும் அப்படிப்பட்ட சந்தர்ப்பம் கிடைக்காதென்றும் பத்மாவதியம்மாள் எழுதியிருந்தாள். எனினும் கற்பகவல்லி அதையெல்லாம் பொருட்படுத்தாமல் தன் மனோ உறுதியினின்றும் பிறழ்வதில்லை யென்று முடிவு செய்துவிட்டாள். கற்பகவல்லி அக் கடிதத்தைக் கோமளவல்லிக்குக் காண்பித்தாள். கோமளம் தன் சகோதரி ஒரே உறுதியுடன் இருப்பதையறிந்து சந்தோஷமடைந்தாள்.

இளவரசர் எழுதிய கடிதத்தில் வேண்டுகோள்களும் கண்டனங்களும் நிறைந்திருந்தன. இளவரசர் உண்மையிலேயே மதனவல்லியாகிய கற்பகவல்லியிடம் அதிக அன்புடையவராய் இருந்தாரென்றாலும் அவருடைய அன்பெல்லாம் நிரந்தரமற்றதாகவே இருந்தது. அவர் மதனவல்லியிடம் சம்பந்தம் வைத்துக்கொண் டிருந்தபோதே இடையிடையே சமயம் அகப்பட்டபோதெல்லாம், தெய்வயானை, கர்னல் மாரப்பனுடைய மனைவி, ஜயதேவியின் மகள் பத்மாட்சி முதலியவர்களின் இன்பத்தையும் அனுபவித்தார். ஆயினும் மற்றெல்லாரையும்விட மதனவல்லியிடம் தான் இளவரசருக்கு மோகமும் ஆர்வமும் அதிகம். அதற்குக் காரணம் இரத்தினபுரி அரச தர்பார் இதுவரை என்றும் கண்டிராத அவ்வளவு ரூபலாவண்யமுடையவளாயும், இனிய குணநிசயங்களையும், சாமர்த்தியமான நடத்தைகளையும் உடையவ

ளாயும் மதனவல்லி இருந்ததுதான். ஆகவே அவர் மதன வல்லிக்கு எழுதிய பதில் கடிதத்தில் அவள் எப்படியாவது மறுபடியும் திரும்பி தன் மாளிகையில் வந்து வசிக்கவேண்டு மென வெகுவாகக் கோரியிருந்தார். மேலும் தான் அவ ளுக்கும், அவளது கணவனுக்கும், மற்றும் அவள் சிபார்சு செய்த பலருக்கும் பலவிதமான உதவிகளைச் செய்ததையும் குறிப்பிட்டுவிட்டு இன்னும் அவள் வந்து இருப்பதாயின் ஒரு பெரிய ஜமீனையே அவளது புருஷனுக்குக் கொடுப்ப தாயும் எழுதியிருந்தார். அன்றியும் அவள் வர மறுத்து விட்டால், பொதுஜனங்கள் என்ன சொல்வார்களென்பதை யும் லட்சியம் செய்யாமல் அவள் பின்னால் வந்துவிடுவதாக வும், எதற்கும் உடனே பதில் எழுதும்படியும் தெரிவித்திருந் தார். மதனவல்லியும் அவரது இஷ்டப்படியே மறுதபாலுக்கே பதில் எழுதினாள். ஆனால், அதில் அவள் தன் தீர்மானத் தையே வற்புறுத்தி இனி தான் முன்போல வாழ்க்கையை நடத்தமுடியாதென்றும், அவர் தனக்கும் மற்றவர்களுக்கும் செய்த உபசாரத்துக்காக என்றென்றும் நன்றி செலுத்தத் தயாராக இருப்பதாகவும், அவர் தன் பின்னால் வருவது போன்ற மூடச்செயல்களில் இறங்கிப் பெயரைக் கெடுத்துக் கொள்ள வேண்டாமென்றும், அதனால் அவர் எதிர்பார்க்கிற படி எத்தகைய நன்மையும் விளையாதென்றும், எல்லாருடைய நன்மையையும் கோரியே தான் இவ்வாறு ஒரு நல்ல முடி வுக்கு வந்திருப்பதாகவும் அறிவித்துவிட்டாள். மதனவல்லி இளவரசரின் கடிதத்தையும், அதற்குத் தான் எழுதிய பதிலை யும் தன் சகோதரி கோமளவல்லிக்குக் காண்பித்தாள். கோமளவல்லியும் தன் சகோதரி ஒரே பிடிவாதமாக நல்ல முடிவுக்கு வந்திருப்பதை மற்றும் ருஜுப்பித்ததைக் கண்டு அதிக சந்தோஷமடைந்தாள்.

186562

மதுரைநாயகம்பிரபு மதனவல்லிக்கு எழுதிய கடிதத்தில் தான் செல்லப்பப்பிரபுவைக் கண்டு நீண்டநேரம் வரை பேசிக்கொண்டிருந்து எல்லா சங்கதிகளையும் விவரமாகக் கூறியதாகவும், மதனவல்லி தர்பார் வாழ்க்கையை விட்டு விட்டுச் சென்றதற்காக முதலில் சொற்ப கஷ்டமடைந்தாராயினும் பிறகு அவள்செய்ததே சரியென்று அவள் செயலைப் பாராட்டியதாகவும், தான் ஜகதீஸ்வரியை மணந்து கொண்டபின்னர் மதனவல்லியும் கோமளவல்லியும் எங்கிருந்தாலும் தன்மனைவியுடன் அங்குவந்து அவர்களைக் காண்பதாகவும் எழுதியிருந்தார்.

செல்லப்பப்பிரபு எழுதிய பதில் கடிதம் மதனவல்லி எதிர்பார்த்ததுபோலவே இருந்தது அதில், தான் மதனவல்லியை மணந்துகொண்டதால் மதுரைநாயகம் பிரபுவைப் போன்ற சிறந்த உத்தமர்களின் சம்பந்தம் ஏற்பட்டதற்காக மிகவும் சந்தோஷப்படுவதாகவும், தான் சிறிதும் மனவருத்தமின்றி இளவரசர் மாளிகையில் தனக்குள்ள அந்தஸ்தையும் சௌகரியங்களையும் விட்டுவிட்டு மதனவல்லி இருக்கும் நகரப்புறம்சென்று எளியவாழ்வை நடத்துவதில் தனக்கும் சந்தோஷமேயென்றும், நடந்துபோன பல விஷயங்களையும் தான் மறந்து இனி நடத்தப்போகும் வாழ்க்கையில் சந்தோஷப்படப்போவதாகவும் அரசமாளிகையில் தாங்களிருவரும் இருந்தபோதே எத்தனையோ சந்தர்ப்பங்களில் அந்த வாழ்க்கையில் காணப்பட்ட துன்பங்களையும், அவமானத்தையும், அறிந்து இருவரும் கஷ்டப்பட்ட துண்டல்லவா என்றும், இனி அத்தகைய மனக்கஷ்டம் நேராதென்றும், மதுரைநாயகம்பிரபு இருபதினாயிரம் பவுன்களைக்கொடுத்து தன் கடன்களைத் தீர்க்க உதவிசெய்திருப்பதாகவும், தான் தன் காரியத்தையெல்லாம் இனிது முடித்துவிட்டு மற்றும் சொற்ப

தினங்களில் மதனவல்லியுடன் கலந்துகொள்ள கந்தபுரிக்கு வந்துவிடுவதாகவும், இச்செய்தியை வீட்டில் மற்றவர்களுக்கும் அறிவித்துவிட வேண்டுமென்றும் எழுதியிருந்தார்.

செல்லப்பப்பிரபுவின் கடிதம் மதனவல்லிக்கு அதிக திருப்தியை அளித்தது. அவ்வாறே அக்கடிதத்தைக் கண்ட கோமளவல்லியும் தனது சகோதரியின் கணவனுன செல்லப்பப்பிரபுவின் இனிய குணநிசயங்களே அறிந்து சந்தோஷப்பட்டாள். சுந்தரம்மாள் என்னும் கமலமும் செல்லப்பப்பிரபு, மதுரைநாயகம்பிரபு ஆகியோர் எழுதிய கடிதத்தைக்கண்டு சந்தோஷமடைந்ததுடன் தனது சகோதரியின் மூத்தமகள், பத்மாவதியம்மாள், இளவரசர் ஆகியோரின் உபதேசங்களே லட்சியம் செய்யாமல் ஓரே உறுதியுடன் இனி இரத்தினபுரியின் வாழ்க்கையில் ஈடுபடுவதில்லேயெனத் தீர்மானித்ததற்காக அவளேப் பாராட்டிப்புகழ்ந்தாள்.

இவ்வாறு இவர்கள் சந்தோஷமடைந்த தினத்தின் மறுநாள் பகல், கோமளவல்லியின் விலாசத்துக்கு எழுதப்பட்ட ஒரு கடிதத்தை ஒருசேவகன் கொண்டுவந்து கொடுத்தான். விலாசத்தைப் பார்க்கும்போதே அக்கையெழுத்து தன் காதலனுடையதே என்று அறிந்துகொண்டு மிக ஆவலுடன் அக்கடிதத்தைப் பிரித்துப்பார்த்தாள். அதில் பின் வருமாறு எழுதி யிருந்தது:—

பவுண்டன் ஓட்டல், கந்தபுரி—ஒருமணி.

எனதன்புள்ள கோமளம்! நான் பரிதிபுரத்திலிருந்து வந்துவிட்டேன். ஆனல் நான் கந்தபுரிமார்க்கமாக இரத்தினபுரிக்குச் சென்றுகொண்டிருந்தும் ஒரு நிமிஷமாவது உன் வீட்டுக்குவந்து உன்னே ஆலிங்கனம் செய்துகொள்ளமுடியாததற்காக நான் எவ்வளவு வருந்துகிறேன் தெரியுமா?

ஆனல் மிக அவசரமான காரியமாக நான் இரத்தினபுரிக்கு ஓடிக்கொண் டிருக்கிறேன். இக்காரணத்தை நீ அறியும் போது என்னை மன்னித்துவிடுவாய் என்றே நம்புகிறேன். நான் பலமாதங்களாக ஊரில் இல்லாமலிருந்து இப்போது திரும்பி வந்ததும் முதலில் உன்னைப்பாராமல் போவதுபற்றி சந்தேகம் கொள்ளக்கூடிய அவ்வளவு அற்பமான காதல் நம்மிடையே இல்லையென்றும், நாம் பரஸ்பரம் பூரண நம்பிக் கையும் அன்பும் உடையவர்களாகவே இருக்கிருேமென்றும் நான் நம்புகிறேன். இன்னும் இரண்டுமூன்று தினங்களில் நான்வந்து உன்னைக்காணத் தவறமாட்டேன். பிறகு நாம் பிரியவேண்டிய அவசியமே இராது. மேலும் அப்போது நான், இதுவரை இரகசியமாக வைத்துக்கொண் டிருக்கும் சிலவிஷயங்களையும் உன்னிடம் விவரமாக அறிவித்து விடு வேன்.

இப்படிக்கு,
உன் அன்புள்ள ஜகதீசன்.

இக்கடிதத்தைப் படிக்கும்போது கோமளத்தின் கண் களினின்றும் நீர் தாரைதாரையாகப் பெருகிற்று. ஆனல் அவள் துக்கப்படவில்லை. ஆனந்தக்கண்ணீர் சொரிந்தாள். ஏனெனின் ஜகதீசன் வந்துவிட்டான். இன்னும் இரண் டொரு தினங்களில் நேரிலேயே வந்து அணைத்துக்கொள் ளப் போவதுடன் இரகசியமாக வைத்துக்கொண்டிருக்கும் இரண்டொரு விஷயங்களையும் விவரித்துக் கூறப்போகிருன். இவைகளெல்லாம் அவளுக்குச் சந்தோஷத்தைத் தந்தன.

கற்பகவல்லியும், சுந்தரம்மாளும்கூட ஜகதீசன் நாட்டுக் குத் திரும்பிவந்துவிட்டதுபற்றியும் விரைவில் வீட்டுக்கே வந்துவிடப் போவதுபற்றியும் கோமளவல்லியைப் பாராட்டி ஞர்கள். ஆனல் ஜகதீசன் யார் என்பதுபற்றியும், அவ

னுடைய குணதிசயங்கள், அந்தஸ்து, சொத்து முதலியவை களைப்பற்றியும் கற்பகவல்லி இரகசியமாக சுந்தரம்மாளிடம் மட்டும் சொல்லியிருந்தாளாகையால், அக்கடிதத்தில் ஜக தீசன் தான் வந்து சில விஷயங்களை விளக்கப்போவதாக எழுதியிருந்தபாகத்தைப் படித்தபோது கற்பகவல்லியும் சுந்த ரம்மாளும் ஒருவரையொருவர் பார்த்துச் சிரித்துக்கொண் டார்கள்.

இக்கடிதம் கிடைத்த மறுநாள் காலை ஜகதீசனிட மிருந்து மற்றொரு கடிதம் கிடைத்தது. ஆனல் அக்கடி தம் துக்கசமாசாரத்தை அடக்கிக்கொண் டிருக்கிறதென் பதற் கறிகுறியாக அக்கடிதத்தின் ஓரங்களிலெல்லாம் கருப்பு மை தீட்டப்பட்டிருந்தது. ஆனல் அக்கடிதத்தின் மீது மற்றொரு விசேஷமும் காணப்பட்டது. அதென்ன வென்றால், பெரிய பிரபுவின் கடிதம் எனக் காண்பிக்கக் கூடிய சில் அதன்மீது காணப்பட்டது. அக்கடிதத்தில் பின் வருமாறு எழுதப்பட்டிருந்தது:—

"எனதன்புள்ள கோமளம்! நீ என்னை காலையதினம் எதிர்பார்க்கலாம். நான் இக்கடிதத்தில் தீட்டியிருக்கும் கருப்பு மையைக்கொண்டே நான் என் குடும்பசம்பந்தமாய் அதிக நஷ்டமடைந்திருக்கிறேன் என்பதை நீ உணர்ந்து கொண்டிருக்கலாம். இதனல்தான் நான் வழியில் கந்தபுரி யில் இறங்காமல் நேராக இரத்தினபுரிக்கு ஓடிவந்தேன். நான் இளவரசர் மாளிகைக்குச் சென்று செல்லப்பப்பிரபு வைச் சந்தித்தேன். அவருடன் பேசியதிலிருந்து நீ உன் சகோதரியின் விஷயங்களை யெல்லாம் அறிந்துகொண்டு விட்டாயென்றும், இப்போது அவள் உன்னுடனேயே இருப்பதாயும் தெரிந்துகொண்டேன். அவள் இனி இத்த கைய வாழ்க்கையில் ஈடுபடுவதில்லையென உறுதியுடன் இருப்

பதாக அவளது கணவன்மூலம் அறிந்து நான் அதிக சந்தோஷப்படுவதாக அவளிடம் அறிவிக்கவும். செல்லப்பப்பிரபுவும் அவ்வாறே உறுதியுடன் இருப்பது பாராட்டத்தக்கதே. விரைவில் ஒரு கலியாணம் எங்களிருவரையும் சகோதரமுறையில் வைக்கும் என்னும் நிச்சயத்துடன் நாங்களிருவரும் பரஸ்பரம் கை குலுக்கிக்கொண்டோம். நான் நாளை வரும்போது என்னை ஒரு சகோதரனைப்போல் வரவேற்க வேண்டுமென உன் சகோதரியிடம் சொல்லிவைக்கவும். சுந்தரம்மாளும் இறைவனருளால் திடமென்று சொஸ்தமடைந்ததாகக் கேள்விப்பட்டு அளவிலா சந்தோஷமடைகிறேன். இதையும் அந்தம்மாளுக்குத் தெரிவிக்கவும், ஆனால் நான் யார் என்பதுபற்றி உனது சகோதரி இன்னும் உனக்குத் தெரிவிக்கவில்லையென்றும், அந்த வேலையை எனக்கே வைத்திருப்பதாகவும் தெரிகிறது. அப்படியே இருக்கட்டும். எந்த மரணத்தினால் நான் இப்போது துக்கத்தில் மூழ்கியிருக்கிறேனோ அதே மரணத்தினால் நான் சமூகவாழ்வில் உயரிய அந்தஸ்தை யடையக்கூடிய சௌகரியம் பெற்றிருக்கிறேன் என்பதைமட்டும் இப்போது தெரிவிக்கிறேன். எல்லா விஷயங்களையும் நாளை விவரமாகக் கூறுகிறேன். நான் நாளைய தினம் பகல் சரியாக மூன்றுமணிக்கு கந்தபுரி பவுண்டன் ஓட்டலில் இருக்கும்படியாக இங்கிருந்து புறப்படுவேன். நீயும் உன் சகோதரியும் சிறிது சிரமம்பாராமல் கொஞ்சதூரம் நடந்துவரப் பிரியப்பட்டால் என்னை ஓட்டலிலேயே நீங்கள் குறிப்பிட்ட வேளையில் சந்திக்கலாம். உன்னைக்கண்டு மார்போடணைத்துக்கொள்ளும் வரையில் எனக்கு ஒவ்வொரு நிமிஷமும் ஒவ்வொரு யுகமாகவே தோன்றுமென்பது உனக்குத் தெரியாத விஷயமல்ல.

இப்படிக்கு,

ஜகதீசன்."

இக்கடிதத்தைப் படித்துமுடித்ததும் கோமளவல்லி, "அவர் இங்கே இன்றுவருவார்" என்று மிகச் சந்தோஷத்துடன் கூறினள். உண்மையிலேயே அப்போது அவளுடைய முகத்தில் ஒருவிதபிரகாசம் காணப்பட அவள் மிக அழகுடன் தோன்றினள். ஆனல் மறுநிமிஷமே அவள் கண்களினின்றும் நீர் சொட்டுசொட்டாகக் கீழேவிழுந்தது, "ஐயோ பாவம்! யாரோ அவருக்கு நெருங்கிய பந்துக்கள், அவருடைய அன்புக்குப் பாத்திரமானவர்கள் இறந்துபோய் இருக்கிறுர்கள். அவருக்கு ஏற்பட்டதுக்கம் எனக்குமல்லவா?" என்று கூறிக்கொண்டே விம்மிவிம்மி அழுதாள்.

ஆனல் மதனவல்லியும் சுந்தரம்மாளும் இறந்து விட்டவர்கள் யாராயிருக்க வேண்டுமென்பதை உணர்ந்துகொண்டார்கள். எனினும் அவர்களுக்கும் திடீரென்று ஏற்பட்ட மரணத்தின் காரணம் விளங்கவில்லை. கோமளவல்லிக்குப் பிரபுக்கள் வீட்டில்நடக்கும் விசேஷ வைபவங்கள் ஒன்றும் தெரியாதாகையால் அக்கவரின்மீது இடப்பட்டிருந்த பிரபுக்கள்வீட்டு சீலேயும் அறிந்துகொள்ள அவளால் முடியவில்லை. அல்லது தன் காதலனுக்கு அவ்வளவு செல்வமும் அந்தஸ்தும் ஏற்பட்டதுபற்றி அவள் பெருமை அடையவுமில்லை. அவளுக்குத் திருப்தியைத் தந்ததெல்லாம் அன்று பகல் தன்காதலன் தன்னிடம் வரப்போகிறுன் என்னும் சந்தோஷ செய்தியேயாகும். ஆகவே அவள் உடனே தன் அறைக்குச்சென்று இனி தான் தன் காதலனைக் காணும்போது என்னவிதமான இன்பங்களை அனுபவிக்கலாம், என்னென்ன சங்கதிகளைப் பேசலாம் என்பதுபற்றித் தனித்து யோசிக்கலாயினள். அவள் அவ்வாறு சென்றதில் யாதொரு ஆச்சரியமுமில்லை. ஆகவே கற்பகவல்லியும் சுந்தரம்மாளும் கூட அவளுடன் போகாமல் அவளைத் தனியே விட்டுவிட்டனர்.

கோமளவல்லியின் காதலன் தன்னுடைய பழைய கடத்தைகளையெல்லாம் மன்னித்து அன்பான முறையில் தன்னைப்பற்றி எழுதி இருப்பதைக்கண்ட கற்பகவல்லி சிறிது ஆறுதலடைந்தாள். அன்றுபகல் சுமார் 2-மணிக்கு கற்பகவல்லியும் கோமளவல்லியும் தங்கள் வீட்டிலிருந்து புறப்பட்டு கந்தபுரியிலுள்ள பவுண்டன் ஓட்டலைநோக்கிச் சென்றனர். கற்பகவல்லியுடன் இரத்தினபுரியிலிருந்து வந்த ஆட்களும் வண்டியும் அங்கேயே இருந்தபடியால் அவர்களிருவரும் வண்டியில் சென்றதாலும், முன்னரே அந்த ஓட்டல் காரர்களுக்கு மதனவல்லி தெரியுமாதலால் அவர்களை ஓட்டல் காரர்களும் மரியாதையுடன் வரவேற்றார்கள். அவர்களிருவரும் ஒரு தனி அறையில்போய் ஆசனத்தில் அமர்ந்தார்கள். மதனவல்லி, தனது ஆட்களில் ஒருவனிடம் தாங்கள் யாருக்காக எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்தாள்.

அச்சகோதரிக ளிருவரும் அந்த அறையில் சுமார் அரைமணி நேரம் காத்திருந்தார்கள். இதற்குள் மணியும் மூன்று அடித்தது. அந்த ஓட்டல் அமைந்திருந்த தெருவின்வழியே ஒருவண்டி மிகவேகமாக ஓட்டலைநோக்கி வந்து கொண்டிருந்தது. ஓட்டல் வேலைக்காரர்கள் அவ்வண்டியில் யார் வருகிறார்களோ என்று ஆவலுடன் வண்டியின் வருகையை எதிர்பார்த்துக்கொண் டிருந்தார்கள். வண்டியும் அதிவேகமாக ஓட்டலின் கேட்டிற்குள் புகுந்தது. மதனவல்லியும் கோமளவல்லியும் தாங்கள் காத்துக்கொண்டிருந்த அறையிலிருந்தே அதன் ஜன்னல் கதவைத் திறந்து விட்டுத் தாங்கள் எதிர்பார்க்கும் மனிதர் வருகிறாரா என்று ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். வண்டியும் வந்து சேர்ந்து தாங்கள் எதிர்பார்த்தவர் அவ்வண்டியிலிருந்து

இறங்குவதைக்கண்ட கோமளவல்லி மிதமிஞ்சிய சந்தோஷம் காரணமாக மூர்ச்சை யடைபவள்போலானாள்.

அப்போது மதனவல்லி தன் சகோதரியிடம், "எனதன்புள்ள சகோதரியே! நிதானமாக இரு. நானும் இப்போது மிக சந்தோஷமடைந்திருக்கிறேன். எனினும் எதிலும் ஒரு வித எல்லையைக் கடந்துபோகலாகாதல்லவா?" என்று கூறித் தேற்றினாள். கோமளத்தால் வாய்திறந்து ஒன்றும் பேசமுடியவில்லை. அவள் தன் சகோதரியின்மடியில் தன் தலையைச் சாய்த்தவண்ணம் ஆனந்தக்கண்ணீர் வடித்தாள். இதற்குள் அந்த ஒட்டல்சேவகன் சகோதரிகளிருவரும் தங்கியிருந்த அறையின் கதவைத்திறந்து, "கேசவநாதம்பிரபு வந்திருக்கிறார்" என்று எச்சரிக்கை செய்தான்.

இப்புதிய பெயரைக் கேட்டமாத்திரத்தில் யார்வந்தாரோ என்று கருதித் துக்கமடைந்தாளென்றாலும் உடனே தன் எதிரில் வந்து நின்றது தான் வெகுநாளாகக் காதலித்த தனது அருமை ஆடவனே என்று தெரிந்ததும் ஒரேபாய்ச்சலாக அவன்மீது பாய்ந்தாள். அவனும் அவளை ஆர்வத்துடன் கட்டி யணைத்துக்கொண்டான். காதலர்களிருவரும் பரஸ்பரம் அணைத்துக்கொண்டதுடன் மாறிமாறி முத்தமிட்டுக்கொண்டு தங்கள் அன்பை அனுபவித்தனர். இதையெல்லாம் கண்டு மதனவல்லி மிக சந்தோஷமடைந்தாள். அது மட்டுமல்ல. அவள் ஓர் உண்மையைத் தெரிந்துகொண்டாள். அதாவது இந்த இருகாதலர்களும் பரிசுத்தமான உண்மையுள்ள அன்புடன் கூடிக் குலாவுவதில் எவ்வளவு உண்மையான இன்பம் இருக்கிறது என்பதைக் கண்டுகொள்ளவே அவளுக்குத் தனது உறுதியில் இன்னும் அதிக மதிப்பு ஏற்பட்டுவிட்டது.

கோமளவல்லியும் கேசவநாதனும் மனமாரக் கட்டித் தழுவிக்கொண்ட பின்னர், கேசவநாதன் மதனவல்லியின் பக்கமாகத் திரும்பி அவளது கரத்தைத் தன் கரத்தால் பிடித்துக்கொண்டு அதற்கு முத்தமிட்டு, "எனதன்புள்ள சகோதரியே! உன்னை இங்கு காணபதில் நான் அளவிலாச் சந்தோஷமடைகிறேன். சகோதரியே என்று அழைத்ததற்காக ஆச்சர்யப்படவேண்டாம். விரைவில் நமக்குள் அந்த உறவுதான் ஏற்படப்போகிறது" என்று கூறினன். உடனே மதனவல்லி மெல்லிய குரலில், "கேசவநாதம்! இனி நீ என்னைச் சமீப பந்து என்றோ அல்லது நெருங்கிய நட்பினள் என்றோ சொல்லிக்கொள்வதில் வெட்கப்படவேண்டிய அவசியமொன்றும் இராதென்றே நிச்சயமாகக் கூறுகிறேன்" என்று நிதானமாகக் கூறினள்.

இவ் வுறுதிமொழியைக் கேட்டுத் தான் சந்தோஷமடைந்ததற்கு அறிகுறியாக கேசவநாதம் மதனவல்லியின் கையை அழுத்திவிட்டு உடனே கோமளவல்லியின் பக்கம் திரும்பி அவளைச் சோபாவில் தன்னருகில் உட்காரும்படி கூறினன். அவள் அவ்வாறே உட்கார்ந்தபிறகு, அவளிடம், "என், கண்மணியே! நான் இவ்வறையில் பிரவேசிப்பதற்கு முன்னர் என் வேலையாள் நான் இன்னுனென எச்சரிக்கை செய்ததும், நீ யாரோ என்னமோ என்று நினைத்து துக்கத் தோடுகூடிய முகத்தை யடைந்தாயல்லவா? ஆம்; அவ்வேலைக் காரன் சொன்னதுதான் சரி. இப்பபாது நான் பிரபுப்பட்டத்தை யுடையவனுகவும், அதற்கேற்ற ஜமீன் முதலியவற்றை யுடையவனுகவும் இப்போது இருக்கிறேன். இவ்வளவு சொத்து சுதந்தரங்களையும் அந்தஸ்தையும் அடைந்த நான் உன்னைப் பார்த்து, 'நீயும் என்னுடன் இவற்றை அனுபவிக்க உரிமையுடையவளாய் இருக்கிருய்' என்று சொல்லும்

இந்த நிமிஷத்தில்தான் உண்மையில் நான் அதிக சந்தோஷ மடைகிறேன். ஆனால் உன்னைப்போலொத்த பரிசுத்த ஹிருதயத்தையும், உயரிய இலட்சியங்களையும், உண்மை என்னும் பொருளிடத்தில் பற்றும் உடைய மாதர்கள் இப்படிப்பட்ட சொத்துக்களையோ அல்லது கௌரவத்தையோ சிறிதும் லட்சியம் செய்யமாட்டார்கள் என்பதையும் நானறிவேன். ஆயினும் சமூகம் இப்போதுள்ள நிலைமையில், அச்சமூகத்தில் நாமும் கலந்து வாழ வேண்டிய அவசியத்தில், செல்வந்தர்களையே உலகமக்கள் மதிக்கிற இக்காலத்தில் செல்வம் வந்துள்ளபோது அது அநாவசியமானதென்று யாரும் கருத மாட்டார்களென்றே நினைக்கிறேன். ஆகவே இன்னும் சொற்ப தினங்களில் நீ பெரிய எஸ்டேட்டுக்குச் சொந்தக்காரியாக விளங்கலாம்" என்று தன் நிலைமையை விஸ்தரித்துக் கூறினான்.

இதையெல்லாம் கேட்ட கோமளவல்லி இன்னும் அதிக சந்தோஷமடைந்து அன்புடனும், இவ்வாறு தன்னை உபசரித்த காதலனுக்கு வந்தனம் செலுத்துவதற் கறிகுறியாகவும் தன் கையைத் தன் காதலன் கழுத்தில்போட்டு அவனை அணைத்து ஆர்வத்துடன் ஓர் முத்தமிட்டாள். இடையில் சிற்சில சமயங்களில் கோமளவல்லி தன் காதலனிடம் சந்தேகங் கொண்டதுமுண்டு. வேறு சில சமயங்களில் சுகசிங்கம்பிரபு முதலியோர் செய்த சூழ்ச்சியால் அவள் அக்காதலன்பால் வெறுப்புகொண்டு தன்கதி இவ்வாருய்விட்டதே யென்று பற்பலவாறு துக்கித்ததுமுண்டு. ஆனால் இப்போது அத்தகைய சந்தேகங்களும் துக்கங்களும் நிவர்த்தியாகி அப்பெண்மணி அடைந்த ஆனந்தத்திற்கோர் அளவேயில்லை.

பிறகு கேசவநாதன், தன் சகோதரி தெய்வயானையும், சிற்றப்பன் சுகசிங்கம்பிரபுவும் அவர் மாளிகை தீப்பற்றி

எரிய அவர்கள் வெளிவரமுடியாமல் உள்ளே அகப்பட்டுக் கொண்டு பரிதாபமான நிலையில் மாண மடைந்ததைப்பற்றி அச்சகோதரிகளிடம் விவரித்துக் கூறினன். அப்போது கோமளவல்லி, தனக்கு அக்கொடிய பிரபு சுகசிங்கமும், தெய்வயானையும் செய்த துரோகத்தையும் இழைத்த துன் பத்தையும் மறந்து தன் காதலனுடைய உறவினர் இறந்து விட்டனரே என்னும் துக்கத்துடன் தனக்கும் தெரியாமல் கண்ணீர் வடித்தாள்.

ஆனந்தமாகக் காதலர் இருவரும் சந்தித்து இன்பம் அனுபவிக்கவேண்டிய நிலைமையில் துக்க சமாசாரத்தைப் பற்றி அதிகம் வளர்த்திக்கொண்டுபோக நாம் பிரியப்பட வில்லை. கேசவநாதம்பிரபு ஒருபுறம் கோமளவல்லியையும், மற்றொருபுறம் மதனவல்லியையும் உட்கார வைத்துக் கொண்டு தன் அழகிய வண்டியில் ஓட்டலைவிட்டுப் புறப் பட்டு அச்சகோதரிகளின் இல்லத்துக்குச்சென்றார். சுந்தரம் மாளும் வாயிற்படியிலேயே காத்திருந்து கேசவநாதம் பிர புவை வரவேற்றாள். பிறகு வேலைக்காரி விரைவில் விதம்வித மான சமையலைத் தயாரித்தாள். அனைவருமாக உட்கார்ந்து இன்பமாகப் பலவிஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டார்கள். அவர்களை அப்படியே இன்பத்தில் மூழ்க விட்டுவிட்டு இப் போது நாம் இதுவரை ஜகதீசன் என்று கூறிவந்த கேசவ நாதம்பிரபுவின் சரித்திரத்தைப்பற்றிச் சற்றுவிளக்குவோம்.

172 - வது அத்தியாயம்

கேசவநாதனும் தெய்வயானையும் சிறுபிராயத்தினராக இருக்கும்போதே அவர்களுடைய தந்தையும் சுகசிங்கம்பிரபுவின் மூத்த சகோதரருமான ஜகதீசம்பிரபு இறந்துபோனார். அவர் இறந்து சொற்ப தினங்களுக்குள் அவருடைய மனைவியும் இறந்துவிட்டாள். ஆகவே கேசவநாதனும் தெய்வயானையும் பெற்றோர்களற்றவர்களாய்ச் சுகசிங்கம்பிரபுவின் மாளிகையிலேயே வசிக்கவேண்டியதாயிற்று. ஜகதீசம்பிரபு இறக்கும்போது ஆஸ்தியும் அவ்வளவாக வைத்துவிட்டுப் போகவில்லை. ஆண்மகனுக்குச் சிறிய கிராமமொன்றையும் ஒரு வீட்டையும், மகளுக்குச் சில ஆயிரம்பவுன்களும் ஆஸ்தியாக வைத்துவிட்டு இறந்துபோனார். கேசவநாதன் முதலில் கிராமத்தில் தான் படித்துப் பிறகே இரத்தினபுரிக்கு வந்தான். தெய்வயானையும் முதலில் கிராமப் பாடசாலையில் படித்தாளென்றாலும் சுகசிங்கம்பிரபுவுக்கு அவளிடம் விசேஷமான அன்பும் ஆதரவும் இருந்ததால் அவளை அடிக்கடி நகரத்திலுள்ள தன் மாளிகைக்கு வரவழைத்து நகரவாழ்வில் காணப்படும் சகலவித இன்பங்களிலும் பழக்கிவந்தார். ஆகவே வாலிபம் முதலே தெய்வயானை அடக்கமற்றவளாயும், கண்டபடி திரியவேண்டுமென்னும் அவாவுடையவளாயும் இருந்தாள். ஆனால் கேசவநாதன் முதலில் கிராமத்தில் படிக்கும்போதும் சரி, பிறகு நகரத்தில் உயர்தர வகுப்புகளில் படித்தபோதும் சரி. மிக நல்லவனென்றும், கல்வியில் அதிக சிரத்தையுடையவனென்றும், நற்குண நல்லொழுக்கங்களில் மேம்பட்டவனென்றும் பெயர் வாங்கினான்.

சுகசிங்கம்பிரபுவுக்கு ஒருமுறை அதிக காயலா ஏற்பட்ட போது, தெய்வயானை தன்னிடம் தன் சிற்றப்பன் வைத்திருந்த அன்புக்குப் பிரதியாக அவருக்கு மிக அன்புடன் சிஷ்ரூஷை செய்து அதிகம் சிரத்தையுடன் கவனித்தாள். இதனால் அவரது அன்பு இன்னும் அதிகரித்தது. கேசவநாதன் சதாகாலமும் சுகசிங்கம்பிரபுவின் வீட்டிலேயே இராமல் லீவ் நாட்களில் வெளியூரில் கிராமப்புறத்தில் இருந்த தன் தாய் மாமன் வீட்டுக்குப்போய் விவசாயம் முதலியவற்றைக் கவனிப்பது வழக்கம். அவனுக்கு ஆதிமுதலே நகரங்களில் காணப்படும் டாம்பீக வாழ்க்கை, பொய் புரட்டு முதலிய அக்கிரமங்கள் பிடிக்காது. கேசவநாதன் தன் படிப்பையெல்லாம் முடித்துக்கொண்ட பின்னர் சுகசிங்கம்பிரபுவின் வீட்டில் இருக்கப் பிரியப்படவில்லை. ஏனெனின் அவர் துர்க்குண துர்ச்செய்கைகளையுடையவர் என்பதையும், அறிஞர்களால் இகழத்தக்க முறையில் வாழ்க்கையை நடத்துகிறார் என்பதையும் அறிந்துகொண்டுவிட்டான். அதிலும் ஒரு சம்பவத்தை அவன் கண்டதுமுதல் அப்பிரபுவை அவன் வெறுக்க ஆரம்பித்தான்.

அச்சம்பவம் யாதெனின், ஒருநாள் கேசவநாதன் சுகசிங்கம்பிரபுவின் மாளிகையிலுள்ள அறையொன்றில் உட்கார்ந்து வாசித்துக்கொண்டிருந்தபோது திடீரென்று ஏதோ ஒரு பெண் மிக்க துயரமுற்று அதனால் கூச்சலிடுவதுபோலும், ஆனால் யாரோ அதைத் தடுக்க முயற்சித்து வாயைக் கெட்டியாக மூடினாலும் சமாளித்துக்கொண்டு கத்துவதுபோலும் ஒருவித அழுகைகுரல் கேட்டது. முதலில் என்னமோ என்று இருந்துவிட்டான். ஆனால் அக்குரல் இன்னும் அதிக உரக்கத்துடனும் அழுகையுடனும் தொடர்ச்சியாகக் கேட்டது. அதேமாளிகையின் இதர அறையிலிருந்து அச்சத்தம் வருவ

தாக அவனுக்குத் தோன்றியது. அம்மாளிகையில் ஒரு சில அறைகள் சதா மூடப்பட்டுக் கிடப்பதை அவன் கண்டிருக்கிறானே யொழிய அவ்வறைக்குள் சென்று என்ன இருக்கிறதென்று பார்த்ததேயில்லை. ஆயினும் இப்போது அவன் மனதில் ஒருவித எண்ணம் தோன்றிற்று. அவ்வறைகளில் ஏதோ விசேஷமிருக்கவேண்டுமென்று நினைத்தான். அவன் தாராள நோக்கமுள்ளவனாதலாலும், எப்படிப்பட்ட கஷ்டம் வருவதாயினும் அதையும் தாங்கிக்கொண்டு பிறருக்கு உதவி செய்யவேண்டுமென்னும் எண்ணமுடையவனாதலாலும் அவ்வழுகைக் குரலைக் கேட்டுக்கொண்டும் அங்கேயே உட்கார்ந்திருக்க அவனால் முடியவில்லை. யாரோ ஒருமாது அந்த அறைகளில் ஒன்றில் மிக்க கேவலமாக நடத்தப்படுகிறாள் என்று அவனுக்குத் தோன்றியதும் உடனே எழுந்து தான் உட்கார்ந்திருந்த அறையின் பின்பக்கத்திலுள்ள அறைக்குச் சென்றான். தெய்வாதீனமாக அவ்வறை உட்பக்கம் சாத்தப்படவில்லை. ஆகவே அவன் அவ்வறையின் கதவைத் திறந்துகொண்டு உள்ளேபுகுந்தான். அங்கு யாருமில்லை. ஆனால் அவ்வறையில் நின்றுகொண்டே அதைச்சேர்ந்த பக்கத்து அறையில் எட்டிப்பார்த்தான். ஆஹா! அவன் கண்ட காட்சி என்ன! ஏதோ ஒரு அழகுவாய்ந்தபெண் அங்கிருந்த இயந்திரநாற்காலியில் அகப்பட்டுக்கொண்டிருக்கிறாள். அவள் எவ்வளவு மன்றாடியும் தடுத்தும் கேளாமல் சுகசிங்கம்பிரபு தன் தலைக்கேறிய காமவிகாரப்பித்தால் அவள் ஆடையைக்களைந்துகொண்டிருக்கிறான். உடலும் மார்பும், தொடைகளும் தெரிகின்றன. அப்போதும் அவன் கூச்சம், இரக்கம் என்பவை சிறிதுமின்றி ஆடைமுழுவதையும் களைந்துவிட முயற்சிக்கிறான். அப்பெண்ணோ தன்னாலியன்றவரை மானத்தைக் காப்பாற்றிக்கொள்ள முயன்று ஓவென்று அலறிக்கொண்டிருக்கிறாள். இத்தகைய சந்தர்ப்பத்தில் எதிர்பாராமல் திடீரென்று

கேசவநாதன் அவர்கள் எதிரில் போய்நின்றதும் சுகசிங்கம் பிரபுவுக்கு அவன்மீது ஆத்திரமும் கோபமும் அதிகரித்து விட்டது. ஆனால் அப்பெண் தனக்கு நல்லகாலம் வந்ததென சந்தோஷப்பட்டாள். ஒரேகாரியம் ஒருவருக்கு வருத்தத்தையும் மற்றவருக்குச் சந்தோஷத்தையும் அளிக்கிறதென்பதற்கு இதுவுமோர் உதாரணமாகும். இரவில் சந்திரன் மிகப் பிரகாசத்துடன் தோன்றினால் மக்கள் சந்தோஷப்படுகின்றனர். எல்லாரும் அப்பிரகாசத்தின் இன்பத்தை அனுபவிக்க ஆவல் கொள்கின்றனர். ஆனால் கொள்ளையடிக்க விரும்பும் திருடர்களும், விபசாரம்செய்யவிரும்பும் அயோக்கியர்களும் அப்பிரகாசத்தை வெறுப்பதுடன் அது அவர்களுக்கு இன்பத்தையல்லாமல் வருத்தத்தைக் கொடுக்கின்றது. என்ன உலக விபரீதம்! ஆனால் நற்காரியங்களையும், நல்ல பொருள்களையும் வெறுக்கிறவர்கள் தீயசிந்தனையும் தொழிலுமுடையவர்கள் என்பதில் ஆட்சேபமில்லை.

தான் மற்றொரு பெண்ணை வருத்தியேனும், அவள் சம்மதமின்றியேனும் அவளுடைய இன்பத்தைப் பெற வேண்டுமென்று கருதி அதற்கான முயற்சியைச் சுகசிங்கம் பிரபு மிக இரகசியமான இடத்தில் செய்துகொண்டிருந்த போது திடீரென்று எதிர்பாராமல் கேசவநாதன் அங்குத் தோன்றியதால் ஆத்திரமடைந்த அப்பிரபு மிக்க அதிகாரதோரணையுடன் அவனை வெளியே செல்லும்படி கட்டளையிட்டான். அதுவுமின்றி அவன் அவ்வாறு தன் உத்தரவில்லாமல் வந்ததற்காக வாயில் வந்தபடியெல்லாம் திட்டினான். ஆயினும் கேசவநாதன் அவனை லட்சியம் செய்யாமல் அங்கேயிருந்த ஒரு போர்வையை எடுத்து, அப்பெண்ணின் உடலை மறைப்பதற்காக அவள்மீது வீசி எறிந்துவிட்டு, உடனே அவளை விடுதலை செய்யவேண்டுமென்று சுகசிங்கம் பிரபுவை வற்புறுத்தினான்.

186562
சென்னை-600 008

மனமோகினி

ஓர் மாதாந்த நாவல் சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது தமிழபிமானிகட்குத் திருப்தி யளிக்கக் கூடியதா யிருக்குமென்று நமது "ஆனந்த போதினி"ச் சந்தாதாரர்களிற் பலர் கேட்டுக்கொண்டபடி இதனை 1922௵ பிப்ரவரி௴ 1௳ முதல் ஆரம்பித்து நடத்தி வருகிறோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாகவந்து ஆறுமாதங்களுக்கொருமுறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவுபெறும். இதற்கு முன் மகா அற்புதம்பொருந்திய அநேக நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி - குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" "பவளத்தீவு" "ஞான செல்வாம்பாள்" "அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்" "கற்பகச் சோலையின் அற்புதக் கொலை" "கடற்கொள்ளைக்காரன்" "இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்" "இரத்தினாபாய் அல்லது இரகசிய சங்கம்" 'சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி" இரத்தினபுரி இரகசியம் 3-ம். 4-ம், 5-ம் பாகம் நாவல்கள் முடிவு பெற்று இப்பொழுது இரத்தினபுரிரகசியம் 6-ம் பாகம் என்கிறநாவல் ஆரம்பமாகி நடந்துவருகிறது. முடிவான நாவல்கள் வேண்டுவோர் புத்தகமாகவே வாங்கிக்கொள்ளவேண்டும் ; அவற்றின் தனிச் சஞ்சிகைகள் கிடையா. இச்சஞ்சிகைகள் ஒவ்வொன்றும் கிரௌன் 80-பக்கங்கொண்டது. அடியிற்கண்டவிலாசத்திற்கு உடனே எழுதி வி-பி-யிலோ முன்பணம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளுங்கள்.

ஒவ்வொரு வருஷத்திலும் பிப்ரவரி௴ ஆரம்பமே இச்சஞ்சிகைக்கு வருஷ ஆரம்பம். எப்பொழுது சந்தாதாரராகச் சேர்ந்தாலும் அந்த வருஷம் பிப்ரவரிமாதம் முதற்கொண்டு கணக்கு வைக்கப்படும். உள் நாட்டிற்கு வருஷ சந்தா ரூ. 2—8—0
வெளி நாட்டிற்கு ,, 3—0—0

இதுவரையில் சஞ்சிகை ரூபமாக வெளிவந்திருக்கும் புஸ்தகங்கள்.

அமராவதி 2 பாகமும் ரூ. 4 0 பவளத்தீவு 2 பாகமும் ரூ. 3 0
ஞானசெல்வாம்பாள் 5 பாகமும் ரூ. 9 10 0
அர்ஜுனஸிங், சுந்தர் ,, 0 2 0
அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள் 1 12 0
கற்பகச்சோலையின் அற்புதக்கொலை ரூ. 1 4 0
கடற் கொள்ளைக்காரன் 2-பாகமும் ,, 3 4 0
இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம் ,, 2 0 0
இரத்தினாபாய் அல்லது இரகசிய சங்கம் ,, 1 12 0
சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி ,, 2 0 0

மானேஜர்:—"ஆனந்த நிலையம்," தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

"ஆனந்தபோதினி"

ஓர் இனிய மாகாந்தத் தமிழ்ச் சஞ்சிகை.

இச்சஞ்சிகை 1915௵ ஜுலைமீ முதல் சென்னையில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. தற்காலம் குன்றியிருக்கும் நமது தமிழ்ப் பாஷையின் அபிவிர்த்தியையும், நமது நாட்டாருடைய இலௌகீக ஆசார ஒழுக்கங்களின் சீர் திருத்தத்தையும், ஆன்மார்த்த ஞானபிவிர்த்தியையும், பெண்கல்வியையும் நோக்கமாய்க்கொண்டே இச்சஞ்சிகை பிரசுரிக்கப்பட்டு வருகிறது. பிரதி சஞ்சிகையிலும் மேற்கண்ட விஷயங்களோடு, நமது சிறுவர், சிறுமிகளுக்கும், ஸ்திரீகளுக்கும் அவசியமான நீதிகளும், புத்திமதிகளும் காணலாம். எல்லா விஷயங்களும் உலக அனுபவமுடைய கல்வியாளரால் வரையப் படுகின்றன. இவையன்றி பேர்பெற்றவர்களால் எழுதப் பட்ட அறிவு விருத்திக்கான மிக்க நேர்த்தியான புது நாவல்களும் தொடர்ச்சியாய் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. இப்போது இது நமது நாட்டில் பிரசுரிக்கப்படும் எல்லாத் தமிழ்ச் சஞ்சிகைகளையும் விட அதிகமான சந்தாதாரரை யுடையது. இது ஜாதிமத் பேதமின்றி ஒவ்வொரு மாணவனும், புருடனும், ஸ்திரீயும் அவசியம் வாசிக்கத் தக்கது. இது நமது நாட்டாரது நன்மையொன்றைமட்டும் கருதியே பிரசுரிக்கப்படுவதால், டெம்மி 8 பக்கம் அளவில் 80 பக்கம் விஷயங்களுள்ள இச்சஞ்சிகைக்குத் தபாற் கூலி யுள்பட வருட சந்தா 1 ரூபாதான் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பினங்கு, ஸிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 1-8-0 மாதிரிக்காப்பி இனாம்.

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் இயற்றிய நாவல்கள்.

இரத்தினபுரி இரகசியம்	ரூ.	அ.	தினகரசுந்தரி ரூபா	1	0
5-பாகமும் ...	10	0	தபால்கொள்ளைக்காரர்	0	14
பவளத்தீவு 2-பாகமும்...	3	0	ரத்தினபாய் ...	1	12
கற்கோட்டை ...	2	0	வீரநாதன் ...	0	12
மின்சார மாயவன் ...	1	8	குணசுந்தரன் ...	0	12
தேவசுந்தரி ...	1	4	மஞ்சள் அறையின் மர்மம்	1	8
கனகபூஷணம்2பாகம்...	3	8	கமலசேகரன் ...	1	12
இராஜாமணி ...	2	0	பூங்கோதை ...	0	10
ஆனந்தவிங் ...	2	0	இந்திராபாய் ...	2	8
மதனபூஷணம் ...	1	0	அமராவதி 2 பாகமும்	4	0
ஞானசெல்வாம்பாள்			மதனாம்பாள் 2 பாகமும்	3	0
5 பாகமும் ...	9	10	லோகநாயகி	1	0

விலாசம் : மானேஜர், "ஆனந்தபோதினி" ஆபீஸ்,
6, லாயர் சின்னதம்பி முதலி வீதி, சௌகார்பேட்டை, மதராஸ்.